

ஸ்ரீகௌதம மஹர்ஷி அருளிய

தர்மஸூத்ரம்.

(ஸ்ரீஹரதத்தாசார்ய வ்யாக்யாநத்தை அநுஸரித்து
மொழி பெயர்க்கப்பட்டது)

———

இஃது

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளின்

ஆஜ்ஞையை முன்னிட்டு

வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையால்

கும்பகோணம்

சாரதா விலாஸ பிரஸ்ஸில்

அச்சிடப்பட்டு கும்பகோணத்தில் வெளியிடப்பட்டது.

விலை] 1952. [ரூ. 3—8—0

காபிரைட் ரிஜிஸ்டர்ட்.

R6
N52



॥ ஶ்ரீஃ ॥

ஶ்ரீஃவராஹமஸவரிவ்ராஜகாயாய-ஶ்வயா
ஶ்ரீஃவஜ்ரஸஹவத்தாஃவ்ருதிஷ்டித
ஶ்ரீகாஞ்சீ காஃகொடிவீராயிவ ஜமஜ்ஜ்வரா
ஶ்ரீஃவஜ்ரவைவரோஜ்வாலாதீஶ்வாதெஃ
கிரயதெ நாராயணஜ்யோதிஃ ॥

ஷகஃஶுணா தஃஹ்யஃஶு விஜ்ஞிம் விந்தி ஸாநவஃ ।
ஷஹாவநியதம் கஃஶு கஃவஃஶுஸாவ்தொ தி கிவ்ஷிழ் ॥

ஷ்யஃஶுாந-ஷ்டாநெந ஸவெஃஶ்வராஸாராஜ்ய ஸூத்ரநஃ கூ
தாயஃஶுதாம் ஸம்வாஹயித-ஸாரா நயிகாரிண உவஹ்ய
ஹவதா ஶளதஃஹவஷிஃஶுணா வ்ருணீதாநாம் தத்தஉண-ஃ
தத்தூராஸாஹியஃஶுவாராவ்ருதிவாஹகாநாம் யஃஶுஸ-ஸ்தூரா
ணாம் வராஉயா ஹ்ரீஉயஜ்ஞயா வ மொஉ்யா தத்தூயஃ
விவராணராஸ்வாம் வ்யாவ்யாஃஉமஹ்ரணு ஶ்ரீஹராஹ்தாவாயஃஶு
ஊ தி வெஷிகுவ்ரோணவரிஶ்ராஸ்தாநாம் ஸஹ்ரூஉயாநாம் விஷி
தஃஸ்வெதஸு । ஸதூவெவ்வம் தெவஹாஷாவரிவயராஹி
தெந ஸ-ஸ்தூவ்ரா-வ்ரா-நாழ்ஶுவஸாகூஷாணாம் யாஜ்ய
யாஜகாநாஃ-வகாராய் ஊ விஃவஹாஷாஃயம் ஶ்ரீஹராஹ்தவ்ரா
வ்ரா-ந-ஹாய-ஃந-வாஹம் ஶ்ரீவெஉயஃஶுஸாஜ்ஞவரிவாஸ்ந
ஸஹாதெ ஸ-ஸ்தூரா வ்ரு ஸ்காஶிதஃஸ்வ-ஸ்ரத உவஹ்ய
தம் வ வயஃஶுஸாஸ்கூ ஸஸ்-ஷ்ரஃ । வதஉ்ரா வ்ரா நவரி
ஶ்ரீஸ்நெந கூவஸதயஃஃஶுதஸ்தாஃ யஃஶுஸ்ரஜ்ஞாஃ கூவ்ஸ்திகுவ்ரவாராஃ
ஷ்யஃஶுாந-ஷ்டாநெந ஸவெஃஶ்வராம் வ்ரீணயஸ்தெ ஶ்ரீஃவஜ்ர
ஃளஜ்ரீஸகூ்ரவயா ஸ்ரெயாம்வரி வ்ரா வ-ஸ்வ-ஸ்தி தா ஸாஸ்வஹெ ॥

விஜயயா தூஷ்டாநழ்-கு-ஹ
வொணழ், வராநாஃ வம்.
ஸாஶ்ரீஷ்-ஶுவஹ-ஸ்ரு-ஷ்டீ.

நாராயணஜ்யோதிஃ ॥

ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யவர்ய, ஸ்ரீமச்சங்கரபகவத்பாத ப்ரதிஷ்டித ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிப ஜகத்குரு ஸ்ரீமச் சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீபாதர்களால்

செய்யப்படுகின்றது நாராயணஸ்ம்ருதி.

தனக்கு விஹிதமான கர்மத்தை அனுஷ்டித்தால் மனிதன் ஸித்தியை அடைகிறான், விஹிதமான கர்மத்தைச் செய்பவன் பாபத்தை அடைவதில்லை, என்றபடி ஸ்வதர்மானுஷ்டானத்தால் ஸர்வேச்வரனை ஆராதித்து, தனக்கு க்ருதார்த்தத்தையை ஸம்பாதிக்க விரும்பிய அதிகாரிகளை அறிந்து, பகவானுடைய கௌதம மஹர்ஷியால் செய்யப்பட்டவைகளும், அந்தந்த வர்ணங்களுக்கும், ஆச்ரமங்களுக்கும் உரியதான தர்மங்களை ப்ரதிபாதிக்கின்றவைகளுமான தர்மஸூத்ரங்களுக்கு ஸரளமாயும் மனதிற்கினியதாயுமுள்ள நடையால் அந்தந்த அர்த்தங்களை விவரிக்கின்ற வ்யாக்யானத்தை அனுக்ரஹித்தார் ஸ்ரீ ஹரதத்தாசார்ய ஸ்வாமி என்பது, வைதிகப்ரமாணங்களில் பயிற்சியுள்ள ஸஹ்ருதயர்களுக்குத் தெரிந்த விஷயமே. இவ்விதமிருந்தும், ஸம்ஸ்க்ருத பாஷா பரிசயமில்லாததால் ஸூத்ரவ்யாக்யானார்த்தங்களை அறியச் சக்தியில்லாத உபாத்யாயர்கள், சிஷ்யர்கள் இவர்களின் உபகாரத்திற்காக த்ராவிடபாஷாமயமாய் ஸ்ரீ ஹரதத்தாசார்யரின் வ்யாக்யானத்தை அனுஸரித்த மொழிபெயர்ப்பு, ஸ்ரீவேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையால் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டு நம் முன்னில் ஸமர்ப்பிக்கப்பட்டதைப் பார்த்து ஸந்தோஷிக்கின்றோம். இந்த வ்யாக்யானத்தைப் பரிசிலிப்பதால் தர்மதத்வங்களை அறிந்தவரும், தர்மத்தில் ச்ரத்தையுள்ளவருமான ஆஸ்திகச்ரேஷ்டர்கள் ஸ்வதர்மங்களை அனுஷ்டிப்பதால் ஸர்வேச்வரனை ப்ரீதனுய்ச் செய்பவர்களாய், ஸ்ரீசந்த்ரமௌளீச்வர க்ருபையால் நன்மைகளை அடையக்கடவர் என்று ஆசீர்வதிக்கின்றோம்.

விஜயயாத்ராஸ்தானம்,
கும்பகோணம்,
கர-வர்ஷம், மார்கசீர்ஷ
பஹுள ஷஷ்டீ.

நாராயணஸ்ம்ருதி.

முகவுரை.

ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபர்களான ஜகத்குரு ஸ்ரீமதாசார்ய பாதாளுடைய நியமனப்படி தர்ம ப்ரசாரம் செய்து வருகிற வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையின் தர்மக்ரந்த ப்ரசுர கைங்கர்யத்தில், மஹர்ஷி ஸ்ரேஷ்டரான ஸ்ரீ கௌதமரால் அருளிச் செய்யப்பட்ட தர்மஸூத்ர க்ரந்தமானது தமிழ் மொழிபெயர்ப்புடன் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஸத்கார்யமானது வைதிகமதத்திற்கு விசேஷ உபகாரகமாகிறது. இந்த க்ரந்தத்தில் போதாயன, ஆபஸ்தம்ப, வஸிஷ்டாதி தர்மஸூத்ரங்களில் போல் மனித ஸமூஹத்திற்கு இன்றியமையாததவையான பற்பலவித ஸமூஹவ்யவஸ்தாதர்மங்களும், வர்ணாச்ரம விசேஷதர்மங்களும் உபதேசிக்கப்பட்டுள்ளன. இதர ஸூத்ரங்களிலில்லாத அநேகவித தர்மங்களும் காணப்படுகின்றன.

அநேக தர்மஸூத்ரங்கள் எதற்கு?

வைதிக மதத்தில் அநேக தர்மஸூத்ரங்கள் காணப்படுகின்றன. கௌதம, ஆபஸ்தம்ப, போதாயன, வஸிஷ்டாதிகளான பல மஹர்ஷிகள் தர்மஸூத்ரங்களைச் செய்துள்ளார்கள். இவைகளில் உபதேசிக்கப்படும் தர்மங்கள் பெரும்பாலும் ஒன்றுபோலிருந்தபோதிலும், ஒவ்வொன்றிலும் மற்றொன்றிலில்லாத பற்பல புதிய தர்மங்களும் காணப்படுகின்றன. சில தர்மஸூத்ரங்கள் விஸ்தாரமாக உள்ளன. சில ஸங்க்ரஹமாயிருக்கின்றன. இம்மாதிரி ஏற்பட்டகாரணமும், ப்ரயோஜனமும் என்ன வென்று கேட்கப்படுகிறது. யுகாந்தத்தில் வேதங்கள் மறைந்து நிற்கின்றன. அவைகளை ப்ரம்ஹாவின் அநுக்ஞை பெற்று மஹர்ஷிகள் தபஸ்சக்தியால் அடைகிறார்களென்று மனு கூறுகிறார்.

ய்மாஞ்ஞஹி ூதாநு வெஹாநு ஸைதி ஹாவாநு ஊஹஷ்டயை।
மெஹிரே தவஸா வ்ருத்ரு உந்ஜூதாஃ ஷ்வயம்ஹுவா' ॥

என்று. மந்த்ரத்ரஷ்டாக்களான மஹர்ஷிகள் மூலச்ருதிகளைத் தபோபலத்தால் ஸாக்ஷாத்கரிக்கும்போதும், அவரவர்களுடைய தபஸ்சக்திக்கு ஏற்றவாறு சிலர் அதிகமாகவும், சிலர் குறைவாகவும் பெறுகிறார்கள். இவ்வாறு தங்களுக்குக் கிடைத்த மூலச்ருதிகளை மூலமாகக்கொண்டே தர்ம சாஸ்த்ரங்களைச் செய்வதாயும் மனு கூறுகிறார்.

ஸ்ரூதிம் வஸ்ருதி ஸ்ம்ருதிம் ஷ்ரூதி ஸ்ம்ருதி ஸ்ம்ருதிம்'

என்று. ஆதலால் தர்மங்கள் பற்பலவிதமாயிருப்பதும், அவைகளை யனுஸரித்து அநேக தர்மக்ரந்தங்கள் ஏற்படுவதும் ந்யாயமாயும் ஆவஸ்யகமாயு மிருக்கின்றன. ஆனால் எல்லாத் தர்மஸாஸ்த்ர விதிகளையும் ஏகவாக்யதை செய்து ஒன்று சேர்த்து விசாரித்துக் கால தேச அதிகாரி பேதவிஷயமாக விஷய வ்யவஸ்தைசெய்து உபஸம்ஹாரம்செய்து அநுஷ்டிக்க வேண்டு மென்று மீமாம்ஸாந்யாயாதிகளைக்கொண்டு ஆப்ததமர்களான நிபந்தனகாரர்கள் நிர்ணயித்துள்ளார்கள்.

ஸ்ம்ருதிகள் யாவற்றுக்கும் ப்ராமாண்யம் உண்டு. ஒன்றில் அபேக்ஷையுள்ளதும் அபூர்ணமானதுமான விஷயத்தை மற்றொரு ஸ்ம்ருதியிலிருந்து எடுத்துப் பூர்த்தி செய்து கொள்ளலாம். ஒரே விஷயத்தில் ஸ்ம்ருதிகளுள் வ்யத்யாஸம், அல்லது விரோதம், காணப்பட்டால் விகல்பமாக ஏதாவது ஒரு விதியை அநுஸரிக்கலாம். இத்யாதிகளான ஏகவாக்யதாந்யாயங்களை விக்ஞானேஸ்வரர் கூறுகிறார்.

வனதேஷாம் வ்ருதேஷு ப்ராப்தானுஜ்ஞாவி ஹாகாத்ரா
ணாதாகாத்ரிவ்ருணே உந்யதஃ காயஸ்ய। விரோதே
த்வ விகல்பஃ' என்று.

தர்ம ஸூத்ரங்கள் பொதுவானவை

கௌதம ஆபஸ்தம்பாதிகள் செய்துள்ள தர்ம ஸூத்ர விதிகள், அந்தந்த சாகாஸூத்ர நிஷ்டர்களுக்கு உபாதேயங்களேயல்லது மற்ற ஸூத்ரிகளுக்கு இல்லை யென்று சிலர் நினைப்பதும்

ஸரியல்ல. தர்மஸூத்ர விதிகளும் ஸ்ம்ருதிவிதிகளைப்போல் எல்லாச் சாகாஸூத்ரிகளுக்கும் பொதுவானவைகளே. மனு யாக்ஞவல்க்ய ஸ்ம்ருதிகள் ஒரு சாகைக்கு அல்லது ஒரு ஸூத்ரிக்கு என்று இராமல் எப்படி எல்லா வைதிகர்களுக்கும் பொதுவானவையோ, அப்படியே தர்மஸூத்ர விதிகளும், ஸாமான்ய தர்மங்களும், ஆசௌச ப்ராயஶ்சித்தாதி மற்றவைகளும், எல்லா ஸூத்ரிகளையும் கட்டுப்படுத்தக்கூடியவை, என்பது நமது ஸித்தாந்தம். மித்யாதீத ப்ராயஶ்சித்தத்தை ஆபஸ்தம்பர் சொல்லியதை மற்ற ஸூத்ரிகளும் அநுஷ்டிக்கிறார்கள். ஆபஸ்தம்பர் சொல்லாவிட்டாலும், போதாயனர் ஸபிண்டீகரண கர்மாவைச் சொல்லியிருப்பதால் அதை எல்லோரும் ஆசரிக்கவேண்டும். இவ்வாறு பல உதாஹரணங்கள் உண்டு. க்ருஹ்யங்களில் சொல்லப்படும் விவாஹாதி ஸம்ஸ்காரங்களும், அவைகளின் கல்பங்களும், அதாவது ப்ரயோகங்களுமே ஒருவாறு அந்தந்த ஸூத்ரிகளுக்கு ப்ரதிநியதங்கள். அவைகளிலும் 'கூ ந ஹூ ஹ நு தெ ஹ ஹூ' என்றபடியும்

'வொ யா ய ந ஹி த ம் கூ ஹூ வா வ ஸ ஸூ த்ர வ ஸ ஹா ஹ ஸூ வெ ஹ'

என்றும் இதர கல்ப ஸூத்ர விதிகளையும் பரிக்ரஹிக்க சாஸ்த்ர அனுமதியுண்டு. ஆகையால் கௌதம தர்மசாஸ்த்ரமானது வைதிகர் யாவரையும் கட்டுப்படுத்தும். கௌதமீயர்களுக்கு மட்டுமல்ல.

கௌதம தர்மஸூத்ரம், கௌதம ஸ்ம்ருதி இரண்டும் ஒன்றே.

நவீனகால விமர்சகர்கள், தர்ம ஸூத்ரங்கள், ஸ்ம்ருதிகள் இவையிரண்டிற்கும் கால பேதங்களை ஊஹித்து அவைகளின் பலாபலங்களையும் விமர்சித்துக்கூறும் முடிவுகளை வைதிக மதஸ்தர்கள் ஏற்பதற்கில்லை. வேதகாலத்திற்குப்பிறகு முதலில் ஸூத்ரக்ரந்தங்களே ஏற்பட்டன வென்றும், பிறகு காலக்ரமத்தில் ச்லோகரூபங்களான ஸ்ம்ருதிகள் செய்யப்பட்டனவென்றும் வாதிக்கிறார்கள். ஆனால் வைதிக மதத்தில் தர்மஸூத்ரங்களும் ஸ்ம்ருதிகளும் ஒரே நிலையில்தான் வைக்கப்பட்டுள்ளன. மனு இந்த விபாகத்தைப்பற்றிக் கூறுகையில்

'ஸ்ரு தி ஸ்து வெதொ வி ஜ்ஞே யொ ய தி ர்தர்ம ஶா ஸ்த்ர ம் து வை ஸ்ம்ரு தி ஃ'

என்பதால் ச்ருதி ஸ்ம்ருதி என்ற இரண்டு பிரிவையேதான் அங்கி

கரித்தார். ச்ருதி நீங்கலான மற்றத் தர்ம க்ரந்தங்களை ஸ்ம்ருதி யென்றே வ்யவஹரிக்கிறார். அல்லது, தர்மசாஸ்த்ர மென்று பொதுவான வ்யவஹாரம். ஆகையால் தர்மஸூத்ரங்களுக்கும் ஸ்ம்ருதி என்ற நிர்த்தேசம் ஸஹஜமாயுள்ளது. பகவத்கீதையைக் கூட 'ஸ்ம்ருதி' என்றே ஸ்ரீ பகவத் பாதாசார்யாள் ப்ரம்ஹஸூத்ர பாஷ்யத்தில் 'ஸ்ம்ருதிஷ்வபி ஸமவஸீதாதி' என்பதால் வ்யவஹரித்துள்ளார்கள். தர்ம ஸூத்ரங்கள் ஸூத்ரரூபங்கள். ச்லோகரூபங்களாயுள்ளவை ஸ்ம்ருதிகள் என்று நவீநர்கள் கல்பிக்கும் வ்யாப்தியும் நிலைக்காது. போதாயன, வாஸிஷ்டாதி தர்மஸூத்ரக்ரந்தங்களில் பஹுவாக ச்லோகரூப ஸூத்ரங்கள் காணப்படுகின்றன. ருக்வேதாதி மந்த்ரங்கள் பலவும் ச்லோக ரூபங்களா யிருக்கின்றன.

ஆதலால் கௌதம தர்மஸூத்ரம் வேறு, கௌதம ஸ்ம்ருதி வேறு என்ற கல்பனைக்கு வைதிக ஸம்ப்ரதாயத்தில் மூலம் கிடைக்கவில்லை. இதில், ப்ரத்யக்ஷச்ருதி மூலகங்களான ச்ரௌதகல்ப ஸூத்ரங்களின் நிலைமை வேறு. கௌதமர் ச்ரௌதகல்ப ஸூத்ரம் செய்ததாகவோ, ச்லோக ரூப ஸ்ம்ருதி செய்ததாகவோ நிபந்தனங்களில் ப்ரஸித்தியில்லை. நிபந்தநகாரர்கள் எடுத்துள்ள கௌதம ப்ரமாணங்கள் பல இந்தக் கௌதமஸூத்ரத்தில் காணப்படவில்லை யென்ற சங்கை, மன்வாதி ஸ்ம்ருதிகளுக்கும் ஸமமானதே.

கௌதமர் ஸாமவேதீ.

இந்தக் கௌதமஸூத்ரமானது ஸாமவேதீய ராணாயன சாகா ஸம்பந்தமுள்ளதென்று Professor காணே என்பவர் கூறுகிறார். ஆயினும் கௌதம மஹர்ஷி ஸாமவேதியாயிருக்க முடியாதென்று நிச்சயிக்கிறார். கௌதமர் 'உக்வாரி வெஉவ்ரதாநி' என்பதால் ப்ராஜாபத்ய, ஸௌம்ய, ஆக்நேய, வைஸ்வதேவாதிகளான நான்கு யாஜ்ஞிய வேத வ்ரதங்களையே குறிப்பிடுகிறார். ஸாமவேதிகளுடைய அஷ்ட வ்ரதங்களை ப்ரஸ்தாபிக்கவில்லை. மேலும் கௌதமர்

'ச்ரவணாத்விவாஹிகம் வ்ரதஸ்வதீம் வா'

என்பதால் யாஜ்ஞிய உபாகர்மகாலத்தை விதிக்கிறார். ஸாம வேதிகளின் உபாகர்மகாலத்தைச் சொல்லவில்லை. தைத்திரீயாரண்ய

கத்தில் சொல்லிய அவகீர்ணி ப்ராயஶ்சித்தத்தைக் கௌதமர் அப்படியே விதிக்கிறார். இத்யாதி ஹேதுக்களால் அவர் ஸாமவேதியாயிருக்க முடியாதென்று மாக்ஸ்முல்லர் (Maxmuller) போன்றவர்கள் ஊஹிக்கிறார்கள்.

கௌதமர் நாற்பது ஸம்ஸ்காரங்களைப் பொறுக்குமிடத்தில் அவைகளுள் நான்கு வேத வ்ரதங்களைக் குறிப்பிடுகிறார். இது ஒவ்வொரு வேதத்திற்கும் உள்ள வேத வ்ரதங்களைச் சொல்லுகிறது. இங்கு "நான்கு" என்பது வேத பதத்தில் ஸம்பந்தமுள்ளது. ஒவ்வொரு வேதத்திற்கும் உள்வகையில் எவ்வளவு வேத வ்ரதங்கள் என்பது க்ருஹ்யங்களிலிருந்து அறியத்தக்கது. இதை ஹரதத்தர்

'வதாநி வ்ரதிவேஷம் வ்ரதிஶாவம் வ ஹ்ரஹ்யேஷ்வேகாநி'

என்பதால் தெளிவுபடுத்தியுள்ளார். ஆகையால் இது யாஜுஷ வேத வ்ரதங்களைமட்டும் சொன்னதாகாது. உபாகர்ம விதி விஷயமும் ஸாமகர்களுக்கு ஶ்ராவணி, ப்ரௌஷ்டபத மாஸங்களும் விகல்பமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கலாம். கௌதம தர்மஸூத்ரம் எல்லாச் சாகைகளுக்கும் பொதுவாக ப்ராயஶ்சித்த விதிகளைக் கூறுவதால் தைத்திரீய ஆரண்யகவிஹித அவகீர்ணி ப்ராயஶ்சித்தத்தைக் கௌதமர் விதிப்பதும் பொருத்தமே. மேலும் ப்ராயஶ்சித்த ப்ரகரணத்தில் பெரும்பாலாக ஸாம மந்த்ரங்களையே சுத்யர்த்தமாக விதிக்கிறார். ஆகையால் கௌதமர் ஸாமவேதியென்று நம்மவர் நிர்ணயம். இந்தச் சர்ச்சையின் ப்ரயோஜனம் யாதாயினும் மேற்றிசை விமர்சகர்கள் இதில் அதிக ச்ரமம் கொண்டுள்ளதால் நாமும் எழுத நேரிட்டது. ஆயினும் நம்தேசத்தில் சாகா, ஸூத்ர, கோத்ராதி விஷயமாகப் பாரம்பர்யமாயுள்ள ஸம்ப்ரதிபந்ந சிஷ்டாசாரப்படி, கௌதமர், ஸாமவேதியென்பது நிஷ்க்ருஷ்டமாயிருக்கையில், அதற்கு விருத்தமாக அவர் ஸாமவேதியல்லவென்று நவீநர்கள் கோஷாபகரமாக விமர்சிப்பதை நாம் மறுக்கவேண்டியது ஆவச்யகமே.

சில புதிய விஷயங்கள்.

கௌதம தர்மஸூத்ரத்திலும், மற்ற ஸூத்ரங்களில் போல் வர்ணதர்மங்கள், ஆச்ரம தர்மங்கள், ராஜநீதி, ப்ராயஶ்சித்தம்,

ஆசௌசம், ச்ராத்தகர்ம, பலவிதப் பொதுத்தர்மங்கள் யாவற்றும் ஆங்காங்குக் கூறப்பட்டுள்ளன. ஆயினும் இதர ஸ்ம்ருத்ரங்களிலில்லாத சிற்சில புதிய விஷயங்களும், ஜன ஸமூஹ க்ஷேமத்தைக் கருதி, கௌதமரால் சொல்லப்பட்டிருக்கின்றன. உதாஹரணார்த்தமாக இரண்டொரு விஷயங்களைக் கூறுவோம்.

கந்யகாதான காலம்.

கந்யகைகளின் விவாஹ வயது விஷயமாகத் தர்மசாஸ்த்ரகாரர்கள் தீவ்ரமான விதிகளைச் செய்தார்கள். எட்டாவது வயது முக்ய காலமென்றும், அதன் பிறகு கௌணம் பத்து வயதுவரையிலென்றும், பன்னிரண்டு வயது வரையில் ஆபத்காலமென்றும் சொல்லி, 'ஈத ஊர்த்வம் ரஜஸ்வலா' என்று அதற்கு மேற்பட்ட காலத்தை நிஷேதித்து விட்டு, நரகாதி தோஷங்களையும், ப்ராயஶ்சித்தங்களையும் சொன்னர்கள். ஆனால் கௌதமர் மிகுந்த கருணையால்,

'ருதூநாம் ப்ராப்தௌ'

என்று விதிசெய்து, ருது காலம்வரையில் கௌணகாலத்தை அதிகரித்தார். அதாவது கந்யகைகள் ருதுவாகும் முன்பு விவாஹம் செய்துவிட வேண்டுமென்றார். வயஸ்ஸை எல்லையாகக் குறிப்பிடாமல் எதுவரையில் விவாஹத்தை ஒதுக்கினால் ப்ரத்யவாயம் ஏற்படாதோ அந்தக் கால எல்லையை அங்கீகரித்தார் கௌதமர். இவ்வாறு அநுக்ரஹம் செய்ததால், பாபபீருக்களான, சாஸ்த்ரவஶ்யர்களான ஆஸ்திகர்கள் இந்தத் துஷ்காலத்திலும், சாஸ்த்ராதிலங்கன தோஷம் ஏற்படாமல் தப்பிக்கமுடிந்திருக்கிறது. இதுபோல் வ்ருத்தி அல்லது ஜீவன விஷயத்திலும் கௌதமர் ஸுகமான சில விதிகளைச் செய்திருக்கிறார். அவருடைய முக்ய நோக்கம் எந்த வழியிலும் ஆத்ம ஸம்ரக்ஷணம் செய்து கொள்ள வேண்டிய தென்று தெரிகிறது. இதை அவர்

'ஸர்வதா வர்ணாநாம் ப்ராயேண'

என்பதால் தெளிவாக்கியுள்ளார். நித்ய கர்மாநுஷ்டானசீலர்களான சிஷ்டர்களும் குடும்ப பரணம் ஜீவனம் இவை நிமித்தமாக அரசனை அண்டி ஜீவிக்க அனுமதி கொடுக்கிறார்

'யோகக்ஷேமாய ஈஶ்வரஸ்யேதி'

என்று. இல்லாதது கிடைப்பதற்காகவும், இருப்பதைப் பாதுகாப்பதற்காகவும் ஈச்வரனே, தனிகனே, அல்லது அரசனே ஆச்ரயிக்கலாமென்று கௌதமர் வழிகாட்டுகிறார்.

மேலும் வட்டி வாங்கி ஜீவிப்பதைத் தர்ம சாஸ்த்ரங்கள் பொதுவாக நிஷேதிக்கின்றன. ஆனால் கௌதமர் ஓர் சிறிய அளவில் வட்டிபெற்று அதனால் ஜீவனம் நடத்துவது தர்ம்யம் என்று கூறுகிறார் 'கு-ஹீஷ்வ்ய்தீஜ்ஜீர்' என்பதால். இங்கு 'யீர்' தர்ம்யா என்ற பதம் ப்ரயோகிக்கப்பட்டிருப்பது முக்யம். வட்டி வாங்கி ஜீவிப்பதால் தோஷமில்லையென்று சொல்லாமல், அதைத் தர்ம்யமான வ்ருத்தியென்றுகூடச் சொல்லுகிறார். இதிலும் கௌதமர் தார்மிக ஸமூஹத்திற்குக் கருணையால் ஆபத்வ்ருத்தியைக் காட்டியுள்ளார்.

நீதி ஸ்தலத்தில் ஸாக்ஷியாக வரிக்கப்பட்டவன் பொய் ஸாக்ஷ்யம் கூறினால் பலமான ப்ரத்யவாயத்தையும், ப்ராயஸ்சித்தத்தையும் ஸகல தர்ம சாஸ்த்ரங்களும் விதிப்பதுடன் அவனுக்கு லௌகிகமான ராஜ தண்டனையும் பலமாக விதிக்கின்றன. இவ்வளவு அதர்மத்தில் சேர்ந்த அந்ருதஸாக்ஷ்யத்தைக் கௌதமர் ஒரு விஷயத்தில் தர்ம்யமாக அங்கீகரிக்கிறார்,

'நா-ர்ஹதவ்யநஹொவ்ஷோ ஜீவநம் வெஸ் தஜ்யீநழ்'

என்று. ஸாக்ஷி அந்ருதம் சொல்லுவதால் நிரபராதனை ஒருவன் மரணத்திலிருந்து விடுதலை பெறக்கூடியதாயிருந்தால் அந்த விஷயத்தில் அந்ருதம் சொல்லுவது தோஷமில்லையென்கிறார். ஆனால் துஷ்டன் ஒருவனுக்கு, அதாவது ஸமூஹவ்யவஸ்தா நாசகாரியான பாபிஷ்டனுக்கு, இந்த உரிமையை உபயோகித்து அந்ருதம் சொல்லக் கூடாதென்று அடுத்தாற்போல் வரையறையும் ஏற்படுத்தியுள்ளார்.

மாதாவின் மஹிமை.

மாதா-பிதா-ஆசார்யன் முதலிய பெரியோர்களிடம் மர்யாதை செலுத்துவது குன்றியுள்ள இக்காலத்தில் கௌதமர் மாதா விஷயமாகச் செய்யவேண்டிய பஹுமானத்தை தமது ஸூத்ரத்தில் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

'ஆசாயஃ ஸ்ரஷ்டதஶோ மாதுர் ஹ்ரணாழ் । ஶாததேவ்ருகே'

என்பதால். வேதாத்யயனம் செய்துவைத்த ஆசார்யன் குருக்களுள் ச்ரேஷ்டதமன் மிக உயர்ந்தவன் என்று சொல்லிவிட்டு, ஆனால் எல்லோரையும்விட மாதாவே மிக உயர்ந்த குரு என்று சில மஹர்ஷிகள் தீர்மானிக்கிறதாகக் கூறுகிறார். ''ச்ரேஷ்டதம'' என்ற மிக உயர்ந்த நிலைமையைக்காட்டும் பதப்ரயோகம்செய்து, அந்தக் கௌரவம் பெற மாதா உரியவள் என்பதை உலகத்தாருக்கு ஓர் தர்மஸூத்ரகார் அறிவிப்பது உயர்ந்த தர்மம். தைத்திரீய உபநிஷத்தானது 'மாதரமேவ' என்று மாதாவையே முதலில் குறிப்பிட்டதையே இங்குக் கௌதமரும் மூலமாகக் கொண்டார். ஆபஸ்தம்ப தர்மஸூத்ரத்திலும்,

'மாதா வாக்ருஷ்யா ஸ்ரேயாம்ஸி ச்ருணோதீதி
தஸ்மாம் ஸ்ரேஷ்டா வதிதாயாமி'

என்பதால் மாதாவின் சுச்ரூஷை உத்தமமென்று விதிக்கப்பட்டது. வஸிஷ்ட தர்மஸூத்ரத்திலும்,

'உபாத்யாயாந் தசாசார்யாந் ஆசார்யாணாம் சதம் பிதா।
ஸஹஸ்ரம் து பித௄ந் மாதா கௌரவேணாதிரிச்யதே' ॥

என்பதால் ஆசார்யன், பிதா இருவரையும்விட மாதாவுக்கு ஆயிரமடங்கு கௌரவமென்று சொல்லப்பட்டது. இது கௌதமரை மூலமாகக் கொண்ட வார்த்தையே. நமது பாரததேச தர்மங்களின் சிறப்புக்கு இது ஓர் உதாஹரணமாகும்.

இன்னுமிதுபோல் பல உயர்ந்த தர்மங்களைக் கௌதமர் பொதுத் தர்மவிதிகளில் சேர்த்து உபதேசிக்கிறார். ஆமுஷ்மிக பலனுடன் ஐஹிக ப்ரயோஜனமுள்ளதான விதிகளும் பஹுவாகக் காணப்படுகின்றன. ''நித்யம் ஸ்நானசீலனையும், சுத்தனையும் நல்ல வாஸனையுள்ளவனையுமிருக்கவேண்டும்'', ''சக்தியுள்ளவன், அழுக்கானதும் கிழிந்ததுமான வஸ்த்ரத்தைத் தரிக்கக்கூடாது'', ''அந்நியர் தரித்த துணியை உடுத்தக்கூடாது'', ''ஒரு க்ஷணம்கூட அசுத்தனாயிருக்கக் கூடாது'', ''பகலில் தலையை மூடிக்கொண்டு நடக்கக்கூடாது'', ''இரவில் தலையை மூடிக்கொள்ளாமல் வெளியில் உலாவக்கூடாது'', இத்யாதிகளான பற்பல தர்மங்கள் சொல்லப்படுகின்றன. ஆஹார நியமத்திலும் உபயோகிக்கத் தக்கவை விலக்கத்தக்கவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன. வாழை இலையில் போஜனம் செய்வது ச்வாச

காசம், ஜ்வரம் இவைகளைப் போக்கு மென்று ஆசாரகாண்டத்தில்

'ஸ்ரீஹகாவஜ்ரஹரம் கஷஜீவதெ ஹொஜநிழ்'

என்று சொல்லப்படுகிறது. இது போல் பற்பல விதிகள் உண்டு.

ப்ராம்ஹசக்தியும், க்ஷாத்ரசக்தியும்.

ராஜதர்ம ப்ரகரணத்திலும் கௌதமர் சில அபூர்வ விஷயங்களைச் சொல்லுகிறார். ப்ராம்ஹம், க்ஷாத்ரம் என்ற இருசக்திகளும் சேர்ந்தால்தான் ராஜ்யம் க்ஷேமம் பெறுமென்று நமது வேதங்கள் கூறுவதை, கௌதமர் விவரித்து உபதேசிக்கிறார். ப்ரஜைகள் ஈதிபாதையின்றியும், தூர்பிக்ஷ துர்மரணங்களின்றியும் ஸம்ருத்தியுடன் யோகக்ஷேமம் நடத்த இந்த இரு சக்திகளும் இன்றியமையாத ஸாதனங்களாக நமது வைதிகமதம் ஒப்பியுள்ளது. க்ஷாத்ர சக்தியானது தண்டாதிகாரத்தை ப்ரயோகிக்கவும், சத்ருக்கள், திருடர்கள், துஷ்டர்களிவர்களை அடக்கி ந்யாய வழியில் வரி வஸூல் செய்துத் ப்ரஜைகளைத் தர்ம வழியில் பாதுகாக்க உதவுகிறது. ப்ராம்ஹ சக்தியானது, மந்த்ரஜபம், த்யானம், அர்ச்சனம், யாகாதி கர்மங்கள் இவைகளால் தேவதைகளை ப்ரீதி செய்வித்து ராஜாவுக்கும், ராஜ்ய ப்ரஜைகளுக்கும் மழை முதலிய க்ஷேமம் ஏற்படச் செய்து பாதுகாப்பு அளிக்கிறதென்பது வைதிகமதக் கொள்கை. இதைக் கௌதமர்

'ஹ்ரஹ க்ஷத்ரண ஸம்வ்ருக்தம் ஹெவவித்ஹநுஷ்யாந்
யாநயதீதி விஜ்ஞாயதெ'

என்பதால், ப்ராம்ஹ சக்தியானது க்ஷாத்ர சக்தியுடன் சேர்ந்து தான் ராஜ்யத்தில் தேவ, பித்ரு, மநுஷ்யாதிகளைத் தரிக்கிறதென்று சொல்லுகிறார். தேவ பித்ரு கார்யாதிகள்கூட ராஜ்யத்தில் ஒழுங்காக நடக்க மேற்கண்ட இரண்டு சக்திகளும் ஒன்று சேர வேண்டுமென்கிறார். இது மட்டுமில்லை. ப்ரம்ஹ க்ஷாத்ர சக்தி சேர்ந்த ராஜ்ய நிர்வாஹாதீனமாகவே மனிதன் முதலிய ப்ராணிகள், வ்ருக்ஷங்கள், பசுக்கள், பக்ஷிகள், ஊர்ந்து செல்லும் ப்ராணிகள் ஆகியயாவுமிருக்கின்றன. அவைகளின் ஜீவனமானது ப்ரம்ஹ க்ஷாத்ராதீனமாயிருக்கிறது என்று கௌதமர் கூறுகிறார்

'தஹொஸ்ஹ தாவிஹ்யஸ்ய உநுஷ்யஜாத க்ஷத்ரஸம்ஜ்ஞாநாம
ஸமநவதநஸவ்ருணாஸாயத்தம் ஜீவநிழ்' என்பதால்.

இது எப்படி யென்று வ்யாக்யாதாக்கள் நிர்வஹிக்கையில், அரசன் தண்டாதிகாராதி நிர்வாஹத்தால் ப்ரஜைகளை ரக்ஷிப்பதுபோல், ப்ராம்ஹணர்களும் மேலே சொன்னபடி தங்கள் மந்த்ரசக்தி, யாகானுஷ்டானம் இவைகளால் மழை, அன்ன ஸம்ருத்தி முதலிய க்ஷேமங்கள் ஏற்படச்செய்வதால், ப்ராணிகளின் ஜீவனம் அவர்களுடைய அதீனமென்று விவரித்தார்கள்.

'கூஶள வ்ராஹ்மணாzzஹுதிः ஸம்யகாதித்யமுபதிஷ்ठதே।
ஆதித்யாஜ்ஜாயதே வ்ருஷ்டிः வ்ருஷ்டேரன்னம் ததः ப்ரஜாः'।

என்று ப்ராம்ஹணர்கள் செய்யும் யாக ஹோமங்கள் ஸூர்யனிடம் சேர்ந்து அதிலிருந்து மழையும், மழையிலிருந்து ப்ரஜா க்ஷேமமும் ஏற்படுவதாக நிர்ணயமாகையால் ராஜ்ய க்ஷேமம் ப்ராம்ஹணாதீனமென்பது பொருத்தமாகிறது. இந்தத் தத்வம் பகவத்கீதையில் பகவானாலும் அங்கீகரிக்கப்பட்டது. ஆகையால் ப்ராம்ஹணனும் க்ஷத்ரியனும் ராஜ்யத்தில் தர்மங்கள் ஒழுங்காக நடத்தி நிலைநிறுத்தக் கடமைப்பட்டவர்களென்று

'ஆள மொகெ யூதவ்ய தள ராஜா ப்ராஹ்மணஶ்ச வஹ்நிஶ்ச'

என்றும் கௌதமர் சொன்னார். அரசனுக்கு ஸஹகாரியாயிருக்கும் ப்ராம்ஹணன் பஹ்வ்ருசனாயிருக்க வேண்டுமென்று சொல்லி, பஹ்வ்ருச லக்ஷணங்களையும் கௌதமர் விவரிக்கிறார். வேதங்களிலும், சாஸ்த்ரங்களிலும் முக்யமாக ஸாமயாசாரிக தர்மம் என்கிற லௌகிக விஷயத்திலும் அவன் நிபுணனாயிருப்பதுடன், சம, தமாதி குணமுள்ளவனாயும் லோபம், பக்ஷபாதம் முதலிய தூர்க்குணமற்றவனாயுமிருக்க வேண்டுமென்று சொல்லுகிறார். ஸ்ரீராமாயணத்தில்

'வஹ்வ்ருசா பிதரோ வ்ருத்தா ப்ராஹ்மணாஸ்தவ ராகவ'

என்பதால் தசரத ஸ்ரீராமாதி அரசர்கள் கௌதமர் சொன்ன லக்ஷணமுள்ள பஹ்வ்ருச ப்ராம்ஹணர்களை அநுவர்த்தித்து ராஜ்யம் நடத்தியது வெளிப்படுகிறது. மேற்கண்ட தர்ம ஸூத்ர தத்வங்களையே காளிதாஸனும், ரகுவம்சம் முதல் ஸர்க்கத்தில் திலீபன் வஸிஷ்டரை ஸ்துதி செய்யும் வ்யாஜத்தில் உலகத்துக்கு எடுத்துக்காட்டியிருக்கிறார்

'வ ராஜ்ஷாய ப்ரஜீவிப்யः', 'ஹவிராவர்ஜிதம் ஹோதः', 'தவ ப்ரஜாகுதோ ப்ரஜேதி'

இத்யாதி ச்லோகங்களில். வஸிஷ்டருடைய வேத மந்த்ர மஹிமை யாலேயே அயோத்யா ஜனங்கள் சிரஜீவிகளாயும், ஆதங்கமின்றியும், ஈதிபாதையின்றியும் வாழ்வதாயும், வஸிஷ்டர் செய்யும் யாகாதி களாலேயே ராஜ்யத்தில் காலத்தில் மழை பெய்து க்ஷேமமேற்படு வதாயும், ராஜ்யத்தில் ஏற்படும் தைவிகமான, அல்லது மானுஷமான, எல்லா ஆபத்திற்கும் வஸிஷ்டரே பரிஹாரம் செய்ய வல்லவரென் றும் ,தெவீநாம் சாந்ஷீணாம் வ' என்று சொல்லுவது இந்தத் தர்ம ஸூத்ரத்தை மூலமாகக்கொண்டது எனலாம்.

ஒரு நூற்றாண்டுக்கு முன் வரையில் நம்தேசத்தில் ப்ரம்ஹ க்ஷத்ர சக்தி இரண்டும் சேர்ந்து நிர்வஹித்ததால் ராஜ்யங்களும், ப்ரஜைகளும், ஸகல அம்சங்களிலும் ஸம்ருத்தியடைந்தும், க்லேசப் படாமலுமிருந்தன. ஆனால், இப்போது அது வேண்டப்படவில்லை யாகில் அதனால் ஏற்படும் நன்மைகளையும் இழக்க வேண்டியதுதான். இழந்து வருவதும் நிதர்சனம். கடைசியாக முடிவில் கௌதமர் இதையே கூறியுள்ளார்.

'ப்ரஹ்மக்ஷத்ரம் ஹி க்ஷத்ர மேதத் ந வ்ருத்யதே
ஊதி விக்ஷ்ராயதே'

ப்ராம்ஹ சக்தியுடன் கூடிய க்ஷத்ரம்தான் ஸம்ருத்தியுள்ளதாயும், கஷ்டப்படாததாயுமிருக்கும், என்றார். அந்தச் சேர்க்கை வேண் டாமாகில், ஸம்ருத்தியோ ஸுகமோ கிடையாதென்பதையும் மஹர்ஷி தெளிவு படுத்திவிட்டாரல்லவா?

ஆசார்யனும், அரசனும்.

மற்றொரு முக்ய விஷயத்தையும் கௌதமர் சொல்லுகிறார். ராஜ்யத்தில் அரசன் துஷ்ட நிக்ரஹாதி கார்யங்களுக்கு எவ்வளவு முக்யமோ, அதுபோல் ஜனங்கள் ஸ்வதர்மத்திலிருந்து மீறாமலும், ஸன்மார்க்க ப்ரவ்ருத்தியுள்ளவர்களாயும் இருக்கும்படி செய்ய ஆசார்யன் என்ற ஓர் அதிகாரியும் இருக்க வேண்டுமென்று கௌத மர் விதிக்கிறார். அந்த ஆசார்யன் அடிக்கடி ஜன ஸமூஹத்திற்கு ஸ்வதர்மோபதேசம் செய்து வரவேண்டும். அதாவது தர்ம ப்ரசாரம் செய்து வரவேண்டும். ஜனங்கள் ஸ்வதர்ம நிஷ்டர்களாயும், ஸன்மார்க்க நிரதர்களாயுமிருந்தால்தான் அரசன் அமைதியாக ராஜ்ய நிர்வாஹம் செய்யமுடியும். ஸ்வதர்மத்தைவிட்டுத் துர்மார்க்க ருசி

கொண்டு, கொலை, களவு, த்ரோஹம் ஆகிய குற்றங்கள் அதிகரித்து விட்டால் ராஜாவால் நிர்வாஹம் ஸாத்யமில்லை. ராஜ்யம் சீரழிந்து தர்பிக்ஷ துர்மாணுதிகளும் அவ்யவஸ்தைகளும் அதிகரிக்கும். ஆகையால் ஜனங்களை ஸன்மார்க்கவழியில் நிலைக்கச்செய்வது ராஜாங்கக் கடமையாகிறது. இந்தத் தர்ம உபதேச கார்யத்தை, அதாவது தர்ம ப்ரசாரத்தை, ராஜாவே நேரில் ஜனங்களிடையில் செய்வது அஸாத்யம். ஆகையால் 'ஆசார்யர்கள்' என்ற பிரிவினரை ஏற்படுத்தி, தர்ம ப்ரசாரம் செய்வது ஆவச்யக மென்று கௌதமர் சொல்லுகிறார். ஸ்வதர்மத்தைவிட்டு அதர்மருசிகொள்ளும் ஜனங்களை ஆசார்ய உபதேசமானது தடுத்துக் கண்காணித்துப் பாதுகாக்கும் என்று

'தாநாசாயெஹாவஜ்ஜஃ உஜ்ஜு வாயதே'

என்கிற ஸூத்ரத்தால் சொல்லுகிறார். அதர்மருசியுள்ளவர்களை ஆசார்யோபதேசமும், அரசனின் தண்ட உபாயமும் சேர்ந்து பாதுகாக்குமென்று தெளிவாகக் கூறுகிறார். ஆகையால் ஆசார்யனும், அரசனும் அதிகாரதோரணையில் இந்த விஷயத்தில் ஒன்றுக இணைக்கப்பட்டிருப்பதைக் கௌதமர் இந்த ஸூத்ரத்தில் விளக்குகிறார். தர்ம ப்ரசாரமாகிய ராஜாங்க வேலையை அரசன் ஆசார்யர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்பதும் இதில் ஸ்பஷ்டமாயிருக்கிறது. ஜனங்களிடம் தர்ம உபதேசம் ப்ரசாரம் செய்யவும், ஸ்வதர்மத்தை மீறியவர்களை ப்ராயஶ்சித்தாதி சாஸ்த்ரீய நிர்ப்பந்தங்களாலும், ஸமூஹ பஹிஷ்காராதிகளாலும் சிக்ஷித்து நல்வழிப்படுத்தவும் அதிகாரமும் ஆசார்யர்களுக்கு இருக்கிறது. அவைகளை அரசன் நிறைவேற்றவும் கட்டுப்பட்டிருப்பான் என்பதும் மேற்கண்ட ஸூத்ரத்தால் தீர்மானமாகிறது. இவ்வாறு தர்ம ஸம்ரக்ஷண விஷயத்தில் ஆசார்யனும் அரசனும் சேர்ந்தே பணிஆற்றுவதால் மஹோபகாரம் செய்யும் இவ்விருவர்களையும் ப்ரஜைகள் புரஸ்கரிக்கவேண்டுமென்றும் நிந்திக்கக்கூடாதென்றும் கடைசியில் கௌதமர் முடிக்கிறார்.

'தஹ்ஹாஉராஜாzzவாயஃள கூநிந்தஃள'

என்று. இந்த உயர்ந்த தத்வம் கொண்டே நம்தேசத்தில் தர்மாசார்யர்கள் பலர் ஏற்பட்டு, ப்ரசாரம் செய்து கொண்டிருந்து, ஜனங்களை நல்வழியில் நிறுத்தி, ராஜாங்கத்திற்கும் உதவிசெய்து வந்திருக்கிறார்கள், இன்றைக்கும் அந்தச்சாயை இருக்கிறது. ஆசார்

யர்கள் இருக்கிறார்கள். ஆயினும் ராஜாங்கமானது இந்த நன்மையை அலக்ஷ்யம் செய்து ஒதுக்கிவிட்டதுடன், ஆசார்யர்களையும், ப்ரஜைகளையும் பலவழியில் பிரித்து ஸம்பந்தமில்லாமல் செய்துவிட்டது. இதனால் இப்போது ஜனங்களிடையில் என்றும் காணப்படாத அதர்மருசியும், கொலை, களவு போன்ற துர்மார்க்க ருசியும் அதிகரித்து, தேசம் பாழாகிவிட்டது. ஸன்மார்க்கம் குறைந்துவிட்டதாக இப்போது எங்கும் அதிகாரிகளே கூச்சல் போடுகிறார்கள். ஆயினும் பரிஹார வழி தெரியவில்லை. தர்ம ஸூத்ர விதிப்படி நடக்கட்டுமே! க்ஷேமத்தைக் காணலாம்.

தர்மஸூத்ர விதிகளின் கௌரவம்.

பதஞ்ஜலி மஹர்ஷி கூறுகிறார்.

தர்மஸூத்ர விதிகள் ஸாதாரணமானவையல்ல; அலக்ஷ்யம் செய்யத்தக்கவைல்ல; தெய்வ சக்தி பெற்ற மஹர்ஷிகளால் நமது ஹிதத்திற்காக கருணையால் அருளப்பட்டவை. வைதிகமதஸ்தன் அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். மஹர்ஷிகள்கூட தர்மஸூத்ர விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார்கள். மஹாபாஷ்யகாரரான பதஞ்ஜலி சொல்லுவதைக் கவனிக்கவேண்டும்.

'ந வா ராஜாஜ்ஞாவஸ்தி | ந வா யதி²ஹ ஸூத்ரகாராஃ வத³ந்தி'

என்கிறார். "ராஜாக்ஞை யில்லையே! அல்லது தர்மஸூத்ரகாரர்கள் சொல்லியதன்றே" என்பதால் ராஜாக்ஞையையும், தர்மஸூத்ர விதிகளையும் ஸமமாக்கி, கௌரவித்து அதற்குக் கட்டுப்படவேண்டியதைப் பேசுகிறார். தபோமஹிமையால் உலகத்தை மாற்றவும், அழிக்கவும், மறுஸ்ருஷ்டி செய்யவும் சக்திவாய்ந்த பதஞ்ஜலி போன்ற மஹர்ஷிகளே தர்மஸூத்ரவிதிகளுக்குக் கட்டுப்படுவதைக் கவனிக்கவேண்டும்.

ஜ்யோதிஷ, சகுன உதவி.

ராஜ்ய நிர்வாஹத்தில் ஜ்யோதிஷம், சகுனம் ஆகிய இரண்டிற்கும் ப்ராமாண்யம் கொடுத்து, ராஜ்யத்தின் எதிர்கால லௌகர்யாலௌகர்யாதிகளை முன்பே ஜ்யோதிஷர்களைக்கொண்டு அறிந்து அதற்கு அவர்கள் சொல்லும் பரிஹார முறைகளையும் அரசன் கையாளவேண்டுமென்று கௌதமர் விதிக்கிறார். தர்மஸூத்ர

ஸ்ரமண ராஜ்ய முறையிலுள்ள ராஜீய நன்மைகள் பலவற்றையும் இக்காலத்தியவர்கள் படித்தறிவது நல்லது.

பஞ்சாயத்து முறை.

கௌதமர் ராஜநீதி ஸ்தல வ்யவஹாரங்களைச் சொல்லுமிடத்தில் ப்ரஜைகளுள் சிற்சில வகுப்பாருக்கு அந்தந்த வகுப்புக்களைக் கொண்டே பஞ்சாயத்து வ்யவஸ்தை செய்யும் முறையையும் கூறியுள்ளார்,

'கூஷ்டுகூ வணிகூ² வஸு²வாம கூ²வீஜ காரவஃ² வ்ரஜ வ்ரஜ வ்ரஜ²'

என்பதால். க்ருஷி ஜீவிகள், க்ரய விக்ரயாதிகள் செய்யும் வ்யாபாரிகள், பசுபாலர் என்கிற இடைய ஜாதியர், வட்டித்தொழில் நடத்துகிறவர்கள், தச்சன், வண்ணன் முதலிய காருக்கள் இந்த வகுப்பாருகளுக்குத் தம் தம் வகுப்பு தர்ம வ்யவஸ்தைகளுக்கு அவரவர்கள் வழக்கமே ப்ரமாணம்.

'தெஹ்யோ யஶ்சாயிகாரஶ்சரேயுஸ்தானு வ்யவஹாரான் வ்யவஹ்யேயுஃ'

அந்த வகுப்பாரில் வ்யவஸ்தாபக அதிகாரியாக (நாட்டாண்மைக்காரன்) அங்கீகரிக்கப்பட்டவன் மூலமாக விசாரணை நடத்தி முடிவு செய்து தர்மவ்யவஸ்தையைச் செய்யவேண்டும். அரசன் அதை நிறைவேற்றி வைக்கவேண்டும். பஞ்சாயத்து மூலம் ஸமூஹ வ்யவஸ்தா நிர்ணயமும், அதற்கு ராஜாங்கத்தின் பின்பலமும் இருப்பது இதிலிருந்து வெளியாகிறது. இவ்வாறு ராஜ தர்ம ப்ரகரணத்தில் கௌதமர் பல தர்மங்களை வெளியிட்டிருக்கிறார்.

ஆத்ம குணங்களும் ஸம்ஸ்காரமும்.

கௌதமர் இதில் நாற்பதுவித ஸம்ஸ்காரத்தைச் சொல்லுகிறார். கர்ப்பாதான, பும்ஸவனதியாகப் பற்பல கர்மங்களையும், சௌளதயக்ஞங்களையும் இந்த நாற்பது ஸம்ஸ்காரங்களில் அடக்கிச் சொல்லிவிட்டுக்கடைசியில் எட்டு ஆத்மகுணங்களை உபதேசிக்கிறார். ஸர்வபூததயை, சாந்தி, அநஸூயா முதலிய எட்டு ஆத்மகுணங்களை விவரித்துவிட்டு கீழ்க்கண்ட நாற்பது ஸம்ஸ்காரம் பெற்றவனுயிருந்தும் ஒருவனுக்கு இந்த எட்டு ஆத்ம குணங்கள் இல்லாவிடில்

அவன் ப்ரம்ஹஸாயுஜ்யமடைய மாட்டானென்றும், நாற்பது ஸம்ஸ்காரங்களில்லாவிடிலும் ஒருவன் இந்த எட்டுக்குணமுள்ளவனாயிருந்தால் அவன் ப்ரம்ஹஸாயுஜ்யம் அடைகிறானென்றும் கூறுகிறார். இந்த வாக்யங்களைக்கொண்டு சிலர் விபரீத நிர்ணயம் செய்கிறார்கள். நாற்பது ஸம்ஸ்காரங்கள் வேண்டியதில்லை யென்றும், ஆத்மகுணங்கள் மட்டுமிருந்தால்கூட அவன் ப்ரம்ஹஸாயுஜ்யம் பெறலாமென்றும் கௌதமர் நிச்சயித்துவிட்டதாகவும் அவர்கள் கூறுவார்கள். உண்மையில் இங்குக் கௌதமர் ஆத்மகுணங்களை 'அவ்வளவு சிறந்தவை' என்று ப்ரசம்ஸை செய்ய முற்பட்டாரே யன்றி ஆத்மகுணம் மட்டும் போதும் மற்றவை வேண்டாமென்று சொல்லவரவில்லை. கர்ப்பாதான, ஜாதகர்ம, உபநயநாதிகளையும், ச்ராத்தாதிகளையும், வேறு பல நித்யகர்மங்களையும் த்யஜித்து விட்டு ஒருவன் ஆத்மகுணத்தால்மட்டும் ச்ரேயஸ்ஸை அடையலாமென்று கௌதமர் சொல்லுவதாக நினைப்பது வைதிகமத ஸித்தாந்தத்தை அடியோடு அறியாததேயாகும். நித்யகர்மாக்களை த்யஜித்தால் ப்ரத்பவாய, ப்ராயஶ்சித்தாதிகள் ஏற்படுவதை அவர்கள் கவனிக்கவில்லை. மேலும் இந்த ஆத்மகுணங்கள் நான்கு ஜாதி, நான்கு ஆச்ரமம் ஆகிய எல்லோருக்கும் பொதுவான தர்மங்கள். ப்ராம்ஹணனுக்கு, அதிலும் க்ருஹஸ்தனுக்கு மட்டும் ஏற்பட்டவையல்ல. ஆகையால் மேற்கண்டவாறு சிலர் குதர்க்கமாக அர்த்தம் செய்வது வைதிகமதத்தில் பெரிய கோஷாபத்தை உண்டாக்கும். கௌதமர் வேதவிருத்தமான எந்தத் தர்மமும் ப்ரமாணமல்ல வென்றும், வேதவிதிகள் ப்ரபலமென்றும் பல விடங்களில் கூறியுள்ளார். ஆகையால் இங்கு வ்யாக்யாதாக்களும், இது கேவலம் ஆத்மகுணப்ரசம்ஸை என்றே நிர்ணயித்தார்கள். எவ்வளவு நித்யகர்மானுஷ்டான நிஷ்ட சிஷ்டரையிருந்தாலும் ஆத்மகுணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்பதிலேயே கௌதமரின் நோக்கம்.

கௌதமரின் காலநிர்ணயம் முதலியவை.
கௌதமர்கள் பலர் உண்டா?

கௌதம மஹர்ஷியின் கால நிர்ணயம் முதலியவைபற்றி மேற்றிசை விமர்சகர்களும், ப்ரொபஸர் காணே முதலிய நம் தேச விமர்சகர்களும் கூறிய விஷயங்கள் குழப்பம் ஏற்பட வேதுவான வையேயல்லாது நிர்ணயம் தெரிய ஸாதகமானவையல்ல. கௌதம

தர்மஸூத்ரம் எல்லாத் தர்மஸூத்ரங்களுக்கும் முன்னால் ஏற்பட்ட தென்று அதன் நடை விஷயங்கள் இவைகளால் நிச்சயிக்கப்படுவ தாக அவர்கள் கூறுகிறார்கள். யாக்ஞவல்க்யர் கௌதமஸ்ம்ருதியை குறிப்பிடுகிறார். பவிஷ்யத் புராணத்திலும் காணப்படுகிறது. ஸ்ரீ பகவத்பாதாசார்யாளும் கௌதமரைப்பற்றி ப்ரஸ்தாபிக் கிறார்கள்.

கௌதமஸூத்ரத்தில் 'யவந' என்ற ஜாதிப்பெயர் நிர்த்தே சிக்கப்படுவதால் இவர் யவநர் காலத்திற்குப் பிற்பட்டவராயிருக்கலா மென்று ஊஹம். ஆகவே கி. பி. இருநூறிலிருந்து அறுநூறு வர்ஷங்களுக்குள் கௌதம காலமென்று ஸ்ரீகாணே ஊஹிக்கிறார்.

போதாயனர் தமது தர்மஸூத்ரத்தில் கௌதமரைக் குறிப் பிடுகிறார். கௌதமரின் அபிப்ராயங்களை ப்ரமாணமாகக்காட்டு கிறார். இதனால் போதாயன தர்மஸூத்ரம் கௌதமீயத்திற்குப் பிந்தியதென்று நிச்சயிக்கப்படுகிறது. மாதுலஸுதா விவாஹாதி களான சில தேசாசாரங்களைப் போதாயனர் குறிப்பிட்டு அவை அந்தந்தத் தேசங்களுக்கு ப்ரமாணமாகலாமென்றும் இதர தேசத் திற்கு க்ராஹ்யமல்ல வென்றும் கூறிவிட்டு

'திதையோஷிதி முளதோஷ:'

என்பதால் மாதுலஸுதா விவாஹாதி துராசாரங்களைத் தேச தர்ம மாகக்கூட அங்கீகரிக்கக்கூடாதென்று கௌதமர் சொல்லுவதாகப் போதாயனர் குறிப்பிட்டுள்ளார். கௌதமர்,

'ஜ்ஞாதிகுலயோஸ்ஸ்ரோத்ரியயோஸ் சுஸ்ரூஷயேத் ஸுவிஸுஷ்டாஸ் வ்ருஷாண:'

என்பதால் தேசாசாரதர்மாதிகளும் வேதங்களுக்கு விருத்தமா யில்லாமலிருந்தால்தான் ப்ரமாணமாகலாமென்றுகூறி வேதவிருத்த தேசாசாரத்தைத் தர்மமாக ஒப்ப மறுத்துவிட்டார்.

ஆனால் போதாயனத்தில் மற்றொரு விடத்தில் இது விபரீதமா யுள்ளது. ப்ராம்ஹணனுக்கு ஆபத்காலத்தில் க்ஷத்ரியவ்ருத்தியைப் போதாயனர் விதித்துவிட்டு 'நேதி முளதோஷ:' என்பதால் "இதை கௌதமர் அங்கீகரிக்கவில்லை" யென்று சொல்லுகிறார். ஆனால் கௌதமர் தமது ஸூத்ரத்திலும் ப்ராம்ஹணனுக்கு ஆபத் காலத்தில் க்ஷத்ரிய வ்ருத்தியை அவலம்பிக்கலா மென்று ஸ்பஷ்டமாக அநுமதி கொடுக்கிறார்.

'தஹராஹே க்ஷத்ரியவ்ருத்தி:'

என்ற ஸூத்ரத்தால். இப்படித் தெளிவாகக் கௌதமர் க்ஷத்ரிய வ்ருத்தியை அநுமதித்திருக்கையில் 'நெதி மௌதஹ:' என்பதால் போதாயனர் அதைக் கௌதமர் அங்கீகரிக்கவில்லையென்று சொல்லுவது எப்படி ஸமஞ்ஜஸமாகும். இங்குப் போதாயந ஸூத்ர பாஷ்யகாரரான கோவிந்த ஸ்வாமி ஓர் ஸமாதானத்தைக் காட்டியுள்ளார். அவர் வாக்யமாவது:—

'ப்ரவிஹமௌதஹீபெ தஹராஹே க்ஷத்ரவ்ருத்தி:' ஊதி வஹ நாக் கூந்ய மௌதஹாஹ்ரஹீதி கூயதெ'

என்று. அதாவது ஆபத்கால க்ஷத்ரிய வ்ருத்தியைக் கௌதமர் அங்கீகரிக்கவில்லையென்று போதாயனர் சொல்லுகிறார். ஆனால் 'ப்ரஸித்தமாக உள்ள கௌதம சாஸ்த்ரத்தில் அதை அங்கீகரித்து விதி காணப்படுகிறது. ஆகையால் இங்குப் போதாயனர் குறிப்பிட்ட கௌதமர் வேறு. அந்தச் சாஸ்த்ரமும் வேறு என்று கல்பிக்க வேண்டும்' என்று போதாயன பாஷ்யகாரர் வேறு ஒரு கௌதமர் இருப்பதாகக் கல்பிக்கிறார். நவீந விமர்சகர்களும் வேறு கௌதமரும், சாஸ்த்ரமும் இருக்கவேண்டுமென்று ஊஹிக்கிறார்கள். இப்போது ப்ரஸித்தமாயுள்ள இந்தக் கௌதமஸூத்ர ப்ரமாணங்கள் நிபந்தனங்களில் சில காணப்படவில்லை. நிபந்தனங்களில் கௌதம வாக்யமாக உதாஹரிக்கப்பட்ட பல ப்ரமாண வாக்யங்களும் இந்தக் கௌதமீயத்தில் காணப்படவில்லை. ஆகவே வேறு ஒரு கௌதமரும் அவர் செய்த தர்ம சாஸ்த்ரமும் இருந்து பிறகு மறைந்து போயிருக்கலாமென்று நிஷ்கர்ஷிக்கிறார்கள். இதில் நம்மவர்கள் கூட ஒரு முடிவான நிர்ணயத்திற்கு வர முடியாமலிருக்கிறது. எப்படியும் பாஷ்யகாரர் கோவிந்தஸ்வாமி கூறுவதுபோல் இப்போதுள்ள ப்ரஸித்த கௌதமீயத்தைக்கொண்டே நாம் தர்மங்களை நிச்சயிக்க வேண்டும்.

வ்யாக்யானங்கள்.

இந்தக் கௌதமஸூத்ரத்திற்கு "மஸ்கரீ" என்ற மஹநீயர் பாஷ்யம் செய்துள்ளார். இந்த மஸ்கரி ஸ்வாமியைப்பற்றி பங்கி தனங்களில் அதிகமாக ப்ரஸ்தாவமில்லாவிடினும், அவர் அதிப்ராசீன நிபந்தனகாரர் என்றே தெரிகிறது. அவருடைய பாஷ்ய வாக்யங்கள் கம்பீரமாயிருப்பதுடன் விசார, நிர்ணயாதி சக்திகளும் அவர் பஹூக்ஞரென்பதை விளக்குகின்றன. ஸ்ரீவைஷ்ணவ

ஸம்ப்ரதாய ஆசார்யரான ஸ்ரீ வேதாந்த தேசிகர் தமது சததூஷணீ என்ற வாத க்ரந்தத்தில் இந்த மஸ்கரி ஸ்வாமியைக்குறிப்பிடுகிறார். யதிகளுக்கு யக்ஞோபவீத தாரணம் வேண்டுமா என்ற விஷயமாக இந்தக் கௌதமஸூத்ர பாஷ்யத்தில் மஸ்கரிஸ்வாமி வெளியிட்டுள்ள அபிப்ராயத்தை ஸ்ரீ தேசிகர் தமக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டியுள்ளதிலிருந்து மஸ்கரிபாஷ்யம் ப்ராசீனமாயும் ப்ரஸித்தமாயும் இருப்பது தெளிவாகிறது. மற்றொரு வ்யாக்யாதாவான ஹரதத்தரைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. வைதிக ஸம்ப்ரதாயத்திய நிபந்தனகாரர்களில் அவர் உயர்ந்த ப்ரமாண ஸ்தானத்தைப் பெற்றுக் கௌரவிக்கப்பட்டவர். மூன்றுவதாக "அஸஹாயா" என்ற வ்யாக்யான மொன்றுமிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கௌதம ஸூத்ர பரிசிஷ்டம்

கௌதம தர்ம ஸூத்ரத்தின் பரிசிஷ்டமென்றும் க்ரியா காண்டம் என்றும் பெயருடன் பதினெட்டு காண்டங்களுள்ள பாகமும் இதில் சேர்த்து அச்சிடப் பட்டிருக்கின்றது. இந்த ஸூத்ரங்கள் முழுவதும் ப்ரதி தினம் செய்யவேண்டிய ஸ்நான, ஸந்த்யா, பூஜாதி ஆன்ஹிகங்களே விதிக்கின்றன. இது மைசூர் கௌதம ஸூத்ரப் பதிப்பில் காணப்படுகிறது. ஆனந்தாச்ரமப் பதிப்பில் இல்லை. இதிலுள்ள ஸூத்ரங்கள் வெகு லகுவான ஸம்ஸ்க்ருத நடையில் யாவரும் ஸுலபமாக அர்த்தம் அறிந்து கொள்ளக்கூடிய முறையிலிருக்கிறது. இது கௌதமர் செய்ததுதானு என்கிற சர்ச்சையில் இறங்க வேண்டியதில்லை. எப்படியிருந்தாலும் இதில் சொல்லப்பட்ட ஆன்ஹிக விதிகள் வைதிக க்ரந்தங்களுக்கு மாறுபில்லாமல் அவைகளே அநுஸரிப்பவைகளாகவே காணப்படுவதால் இதுவும் ஆஸ்திகர்களுக்கு உபயோகப்படக்கூடியது.

அக்நிஹோத்ரம்

கோபால தேசிகாசார்யார்.

கௌதம தர்மஸூத்ரம் விஷய ஸூசிகை.

	பக்கம்
ஸ்ருதி ஸ்ம்ருதி சிஷ்டாசாரங்கள் மூலப்ரமாணங்கள் ...	1
சாஸ்த்ரவிருத்த சிஷ்டாசாரம் க்ரஹிக்கத்தக்கதல்ல ...	1
ஸம பலமுள்ள சாஸ்த்ர விரோதத்தில் விகல்பாநுஷ்டானம்	2
ப்ராம்ஹணனுக்கு உபநயன காலம் ...	2
பதிநாறு வயதுவரையில் அனுமதி ...	3
மௌஞ்ஜி அஜிந வஸ்த்ர தண்டாதிகள் ...	4
த்ரவ்யசுத்தி அந்தந்த த்ரவ்யங்களுக்கு ஏற்றது ...	5
ஆசமன சுத்திவிதி ...	6
அதில் சில விசேஷங்கள் ...	7
ஆசார்ய உபாஸனம் ...	9
ஆசார்ய ஸிஷ்யமத்தியில் போகக்கூடாது ...	10
சில ப்ராணிகள் குறுக்கே போனால் ப்ராயஸ்சித்தம் ...	10
உபநயநமாகாத மாணவகனின் தர்மங்கள் ...	11
உபநயனமாகியவனின் நியமங்கள் ...	12
ஆசார்யனிடம் நடந்துகொள்ளவேண்டிய விதங்கள் ...	14
பிக்ஷாசரண நியமங்கள் ...	16
சிஷ்யனை ஆசார்யன் அடிக்கக்கூடாது ...	17
ப்ரம்ஹசர்ய கால நிர்ணயம் ...	17
நான்கு ஆச்ரமங்கள் ...	18
நைஷ்டிகன் தர்மம் ...	19
ஸன்யாஸி தர்மங்கள் ...	20
வானப்ரஸ்த தர்மங்கள் ...	22
க்ருஹஸ்தனுக்கு விவாஹஸம்பந்த நியமம் ...	23
ப்ராம்ஹாதி விவாஹப் பிரிவுகள் ...	24
அநுலோம, ப்ரதிலோம ஜாதிப் பிரிவுகள் ...	25
ருதுகமன விதி ...	27
அக்நி பரிசர்யை ஆரம்ப காலம் ...	27
வைஸ்வதேவ பலிஹரணாதிகள் ...	28
பிக்ஷாதானம் ...	29
ஆசார்யன், விவாஹம், மருந்து சாப்பிடுகிறவன், யாகம் முதலிய தர்மங்களுக்கு த்ரவ்ய உபகாரம் ...	29
கோபிஷ்டன், பயந்தவன், பாலன், சித்தப்ரமமுள்ளவன் ஆகியவர்கள் பொய் சொல்லுவது தோஷமாகாது ...	29

மதுபர்க்க தான விதி ... 30
அதிதி பூஜா விதிகள் ... 31
ஆசார்யாதி பாத உபஸங்க்ரஹணாதி மர்யாதைகள் ... 33
பூஜா நிமித்தங்கள் ... 33
மார்க்க தானம் ... 33
அப்ராம்ஹணனிடம் வித்யாக்ரஹணம் எப்போது? ... 36
க்ரய விக்ரய அர்ஹ வஸ்துக்கள் ... 37
பண்டமாற்ற விதி ... 38
ராஜ்யத்தில் ராஜாவும், பஹுஶ்ருத ப்ராம்ஹணனும் முக்யஸ்தர் ... 39
மனிதன் முதலிய ஸகல ப்ராணிகளின் ஜீவநம் ராஜாவையும், ப்ராம்ஹணனையும் ஆதாரமாகக் கொண்டது 39
பஹுஶ்ருத ப்ராம்ஹண லக்ஷணம் ... 41
நாற்பது ஸம்ஸ்கார விவரணம் ... 42
எட்டு ஆத்மகுண விவரணம் ... 43
பலவித க்ருஹஸ்த தர்மங்கள், பொது தர்மங்கள் ... 45
மூத்ரபுரீஷ உத்ஸர்க்க நியமம் ... 49
பொது தர்மங்கள் ... 50
குடும்ப யோகக்ஷேமத்திற்காக அரசனை அண்டலாம் ... 52
வஸிக்க அர்ஹமான இடம் ... 53
ப்ராம்ஹணாதி தர்ம வ்ருத்தி ... 54
ராஜ தர்மங்கள் ... 55
யுத்தத்தில் கொல்லத்தகாதவர்கள் ... 56
யுத்த ஜயத்தால் கிடைத்ததைப் பங்குபோடுதல் ... 57
க்ருஷிகன் கொடுக்கவேண்டிய வரிவிகிதம் ... 57
வ்யாபாரிகளுக்கு வரி நிர்ணயம் ... 58
சிலருக்கு வேலையே வரி ... 58
கெட்டுப்போன வஸ்துவைக் காப்பாற்றல் ... 59
ராஜதர்மம் தொடர்ச்சி ... 60
திருட்டுப்போன ஸ்வத்தை மீட்டுக்கொடுத்தல் ... 60
இல்லாவிட்டால் பொக்கிஷத்திலிருந்து கொடுத்தல் ... 60
மைனர் ஸ்வத்து ரக்ஷணம் ... 61
வைஶ்யதர்மங்கள் வ்ருத்திகள் ... 61
சூத்ர தர்மங்கள் வ்ருத்திகள் ... 62
ராஜதர்மங்கள் தொடர்ச்சி ... 64

ப்ராம்ஹணனே முன்னிட்டுக் கொண்டு ராஜ்யம் நடத்துவும்	...	65
சகுனம், ஜ்யோதிஷம் இவைகளை அரசன் அநுஸரிக்க வேண்டும்	...	65
வேததர்ம சாஸ்த்ரங்களை ஆதாரமாகக் கொண்டே தீர்ப்புச் செய்யவும்	...	66
தேச ஜாதி குல தர்மங்கள் வேத விருத்தமில்லாத வையே ப்ரமாணம்	...	66
க்ருஷிகன், வ்யாபாரி முதலியவர்கள் தங்கள் வகுப்பு வழக்கப்படி	...	67
அரசன் மேற்படியாருடைய வழக்கத்தை ஆதாரமாகக் கொள்ளவும்	...	67
ப்ரம்ஹ க்ஷத்ர சேர்க்கையால் தான் ராஜ்ய க்ஷேமம்	...	68
ஆசார்யனும் ராஜாவும் ராஜ்ய க்ஷேமத்திற்கு முக்யம்	...	68
தண்ட ப்ரகரணம், பற்பல வித குற்ற தண்டனைகள்	...	69
வட்டி வாங்குவதில் நியமங்கள்	...	73
போக்யம், நிக்ஷேபம் இவை பற்றிய விதிகள்	...	75
ஸ்வர்ணஸ்தேய ப்ராயச்சித்தம்	...	76
ஸாக்ஷி விசாரணை நியமங்கள்	...	77
சபதம் செய்யச் சொல்லி ஸாக்ஷி விசாரணை	...	78
ஸாக்ஷி பொய் சொன்னால் தோஷங்கள்	...	79
நீதி விசாரணையில் சில நியமங்கள்	...	80
ஆசௌச விதி—பற்பல நிமித்தங்களில்	...	81
ஆசௌச நியமங்கள்	...	86
ச்ராத்த விதி, ச்ராத்தார்ஹ ப்ராம்ஹணர்கள்	...	88
ச்ராத்த த்ரவ்யங்கள்	...	89
வர்ஜிக்கத்தக்க ப்ராம்ஹணர்கள்	...	89
பங்க்தி பாவனர்கள்	...	92
உபாகர்ம விதி	...	93
அத்யயன நியமம், பலவித அநத்யயனங்கள்	...	93
வர்ஜிக்கத்தக்க அன்னங்கள்	...	99
விலக்கத்தக்க மாம்ஸங்கள்	...	103
ஸ்த்ரீ தர்மம்	...	104
நியோக நியமம்	...	105
ருதுவுக்கு முன்பே கன்யாதானம்	...	107
யாகாதிதர்ம பூர்த்திக்காக த்ரவ்ய ஆஹரணம்	...	108

பாபங்களுக்கு ப்ராயஶ்சித்த விதிகள் ... 109
ப்ராயஶ்சித்தம் செய்யலாமா? (விசாரம்) ... 110
ப்ராயஶ்சித்தார்த்த மந்த்ரங்கள், தேசம், காலம், த்ரவ்யம் முதலியவை ... 112
பதித த்யாக விதி, கடஸ்போடம் ... 114
பாதித்யம் ஏற்படக்கூடிய தோஷங்கள் ... 116
ஸமபாதக தோஷங்கள் ... 117
உபபாதக தோஷங்கள் ... 118
மாதாபிதாக்கள் பதிதராயினும் சுச்ரூஷையுண்டு ... 118
ப்ரம்ஹஹத்யா ப்ராயஶ்சித்தம் ... 120
கர்ப்பநாச ப்ராயஶ்சித்தம் ... 122
க்ஷத்ரிய, வைஶ்ய, சூத்ராதி வத ப்ராயஶ்சித்தம் ... 122
பசுமாடு முதலிய ப்ராணி வதத்தில் ... 122
ஶ்ரௌத ஸ்மார்த்தாக்நி, வேதம் இவைகளை த்யஜித்தவனுக்கு ப்ராயஶ்சித்தம் ... 124
ஸுராபான ப்ராயஶ்சித்த விவரணம் ... 125
ஸுரை வாஸனையை முகர்ந்தால் ... 126
குருதல்ப கமந ப்ராயஶ்சித்தம் ... 126
ஸகீ முதலியவர்களின் கமநத்தில் ... 126
அவகீர்ணி ப்ராயஶ்சித்தம் ... 127
ப்ரம்ஹசர்ய நியம வர்ஜனத்தில் ... 128
ஸூர்யோதய அஸ்தமய காலத்தில் தூங்கினால் ... 128
அபோஜ்ய போஜனத்தில் ... 128
பிற நிந்தை, பொய் இவைகளில் ... 129
விவாஹாதிகளில் பொய் சொன்னால் தோஷமில்லை ... 129
ஆசார்யன் விஷயத்தில் பொய் சொன்னால் ... 130
ரஹஸ்ய தோஷங்களுக்கு ரஹஸ்ய ப்ராயஶ்சித்தம் ... 130
க்ருச்ர லக்ஷணங்கள், த்வாதசராத்ர க்ருச்ரம் ... 135
அதிக்ருச்ர லக்ஷணம் ... 135
க்ருச்ராதிக்ருச்ர லக்ஷணம் ... 135
சாந்த்ராயண விதி ... 138
குடும்ப ஸ்வத்துப் பிரிவு விதி (தாயபாகம்) ... 141
ஸ்வத்துப் பிரிவு ஸம்பந்தமாக பற்பலவித விதிகள் ...

[பரிஶிஷ்டத்தில் வரிசையாக காலை முதல் செய்யவேண்டிய ஶௌச ஸ்நான ஸந்த்யா ஜப ஹோமாதிகள் சொல்லப்படுகின்றன. அதற்கு விஷயஸூசிகை அவஶ்யமன்று.]

ஔ

ஶ்ரீ கௌதமஸ்ம்ருதி-ர்வ்ருணீதம்

யஜ்ஞோபவீதம் ॥

கௌதம மஹர்ஷி அருளிய தர்ம ஸூத்ரம்.

(ஸ்ரீஹரதத்த வ்யாக்யானத்தை அனுஸரித்து மொழி பெயர்க்கப்பட்டது.)

முதல் ப்ரஶ்நம்—முதல் அத்யாயம்.

ஓம் ॥ வெதொ யஜ்ஞோயம் ॥ க ॥

தர்மத்திற்கு அடிப்படையான ப்ரமாணம் வேதமே. வேதம் நான்கு. அவைகளிலுள்ள மந்த்ரம், ப்ராம்ஹணம் என்கிற இரு பிரிவும் சேர்ந்து தர்மத்திற்கு ப்ரமாணமாகும். அந்த வேதங்கள் மூலமாகவே உபநயநாதி தர்மங்கள் சொல்லப்படுகின்றன. தர்மத்தை அநுஷ்டிப்பதுபோல் அதர்மத்தை விலக்குவதும் தர்ம மமே. ப்ரம்ஹஹத்யா ஸுராபாநாதி அதர்மங்களையும் வேதம் நிஷேதிப்பதால் அதர்ம நிராஸனமும் வேதமூலக மென்று அறியவும்.

தத்³வித³ாம் வ ஸ்ம்ருதிஶீலே ॥ உ ॥

அந்த வேதங்களை அறிந்த மனு முதலிய சிஷ்டர்களுடைய ஸ்ம்ருதியும், அவர்களுடைய ஆசாரமும் நமக்கு ப்ரமாணமாகும்.

மனு முதலிய மஹர்ஷிகளின் ஆசாரமானது நிர்மூல மென்று நினைக்கக்கூடாது. ப்ரத்யக்ஷ வேதங்களில் அவைகளுக்கு ஆதார மில்லாவிடினும், விச்சிந்நபாடமாக மறைந்து நமக்கு அறியமுடி யாத வேதங்களில் அவைகளுக்கு ப்ரமாண மிருப்பதாக நிச்ச யித்துக்கொள்ளவேண்டும். அநுமித ச்ருதிமூலமாக ப்ரமாண மென்றபடி.

ஊஷ்டா யஜ்ஞ்யகர்மணி ஸாஹஸம் வ ஸஹதாம் ॥ ங ॥

முன்னோர்களான மஹர்ஷிகளின் அநுஷ்டானமும் நமக்கு

ப்ரமாண மென்றால், சில ருஷிகள் சாஸ்த்ரவிருத்த அநுஷ்டானங்களைச் செய்ததாகத் தெரிகிறதே? அவைகளும் நமக்கு ப்ரமாணமாகுமா? நாமும் அவைகளைச் செய்யலாமா? இதற்கு இந்த ஸூத்ரத்தில் ஸமாதானம் கூறப்படுகிறது. பரசுராமன் மாத்ரு சிரச்சேதம் செய்தது போன்ற தர்ம அதிக்ரமமும் ஸாஹஸமும் ராகத்வேஷாதி நிமித்தகமாகையால் அவை அதர்மங்களே.

சுவாஸ்வயுஷ் ॥ ச ॥

அந்த அதர்ம ஸாஹஸத்தை பின்னுள்ள நாமும் செய்யக்கூடாது. அவர்களைப்போல் நமக்கு தபஸ்ஸக்தியில்லாததால் தூர்ப்பலர்களாயிருக்கிறோம்.

தூயவியவிரோயை விகல்பः ॥ ரு ॥

ஒரே விஷயத்தில் ஸமபலமுள்ள இரண்டு சாஸ்த்ரம் முட்டிக்கொண்டால் அங்கு விகல்பமாக நிர்ணயம். இப்படியாவது, அப்படியாவது செய்யலாமென்று. அதிராத்ர யாகத்தில் ஷோடசீ என்ற ஸோம ஹோமம் வேண்டுமென்று ஒரு விதியும், வேண்டாமென்று ஒரு விதியும் இருப்பதால், இரண்டும் ஸமபலமாயிருப்பதைக்கொண்டு அங்கு விகல்பமாக அநுஷ்டிக்கலாம். இம்மாதிரி பல உதாகரணங்களுண்டு. ஆனால் ச்ருதிவிதியும் ஸ்ம்ருதிவிதியும் விரோதிக்குமிடங்களில், ச்ருதியே ப்ரபலம். ஸ்ம்ருதி தூர்ப்பலம். இவ்விரண்டும் ஸமபலமல்லவாகையால் மேற்சொன்ன விகல்பம் கிடையாது.

உவநயந ஸ்ராஹ்மணஸ்யாஷ்டமே ॥ கூ ॥

இனி தர்மங்களைச் சொல்லுகிறார். உபநயனம் முதலில் கூறப்படுகிறது. கர்ப்பாதானாதி வரிசையை விட்டு முதலிலேயே உபநயனத்தை விதிப்பது அது ப்ரபலமென்கிற தாத்பர்யத்தால். ப்ராம்ஹணனுக்கு எட்டாவது வயது உபநயன முக்ய காலம். இங்குள்ள ப்ராம்ஹண பதமானது பிறவி ப்ராம்ஹண்யத்தைக் குறிக்கிறது. ஆகையால் உபநயனத்திற்கு முன்னாலேயும் ப்ராம்ஹணனாயிருப்பவனுக்கு உபநயனாதிகாரம். சூத்ராதிகளுக்குக் கிடையாது. "ப்ராம்ஹணன் ஸுராபானம் செய்யக்கூடாது", என்ற விதியால் உபநயனமாகாத ப்ராம்ஹணனையும் க்ரஹிக்க வேண்டியிருக்கிறது. இல்லையேல் அவன் ஸுராபானம் செய்யலாமென்று ஏற்பட்டுவிடும். ஆகையால் உபநயனத்திற்கு முந்தியும் ஜாதி ப்ராம்ஹண்யமுண்டு. அதைக்கொண்டே சாஸ்த்ர ப்ரவ்ருத்தி.

நவஷே வஸுஷே வா காரயேத் ॥ எ ॥

ப்ரம்ஹவர்ச்சஸம், ஆயுஸ் முதலிய காமனையுள்ளவனுக்கு ஒன்பதாவதிலும், ஐந்தாவதிலும் செய்வது காம்ய உபநயநம்.

ஸம்வத்ஸரே ஸம்வ்ருதே வஷ்டாணாமே ॥ அ ॥

வர்ஷங்களைக் கணக்கிடும்போது கர்ப்பவர்ஷம் முதலாகவே கணக்குச்செய்து உபநயநம் செய்யவும். பிறந்த வர்ஷம் கணக்காகாது.

தஸ் த்விதீயம் ஜந்ம ॥ கூ ॥

அந்த உபநயநமானது இரண்டாவது ஜன்மமாகச் சொல்லப்பட்டுள்ளது. இதில் ஆசார்யன் பிதாவாகிறான். காயத்ரீ மாதாவாகிறாள். இதனால் த்விஜத்வம் ஸித்திக்கிறது.

தஸ் யஷ்டாஸ் ஸ ஆசார்யஃ ॥ கூ ॥

அந்த உபநயநமானது எவனிடமிருந்து ஏற்படுகிறதோ அவன் ஆசார்யன் எனப்படுகிறான்.

வேதாநாமத்யாபநாத் ॥ கூ ॥

வேதத்தை அத்யயனம் செய்து வைப்பதாலும் அவன் ஆசார்யனாகிறான்.

ஸகாஶாதாஶ்ரயோஃ க்ஷத்ரியவைஶ்யயோஃ ॥ ஸ ॥

க்ஷத்ரியன் வைஶ்யன் இருவருக்கும் முறையே பதிநென்றாவது பன்னிரண்டாவது வயதில் உபநயநம்.

ஆஷோடஶாத் ப்ராஹ்மணஸ்ய ஸாவித்ரீ நாதிவர்தேத ॥ கஜ ॥

பதினாறாவது வயது முடிய ப்ராம்ஹணனுக்கு காயத்ரீயானது நழுவிப் போவதில்லை. பதினாறாவது முடிய உபநயநம் செய்யலாமென்று கருத்து. இது ஆபத்கல்பம்.

ஆவிம்ஶதேஃ ராஜந்யஸ்ய த்ர்யதிகாயாஃ வைஶ்யஸ்ய ॥ ஸஸ ॥

க்ஷத்ரியனுக்கும் ஆபத்கல்பமாக இருபத்திரண்டு வயது முடியவும், வைஶ்யனுக்கு அதற்கு மேல் இரண்டு வயது, அதாவது இருபத்துநான்கு முடியவும் செய்யலாம்.

ஶணஸ்தூ ப்ராஹ்மணஸ்ய ஶ்மஶ்ரணி க்ஷௌமம் க்ஷத்ரியஸ்ய ஜ்யா ॥ கஞ ॥

முஞ்ஜைப்புல்லால் செய்யப்பட்ட மேகலை ப்ராம்ஹணனுக்கு,

க்ஷத்ரியனுக்கு வில்லு நாண் கயிறு. நூலால் செய்யப்பட்டது வைஸ்யனுக்கு. இவ்வாறு மூன்று வர்ணத்தினருக்கும் மேகலை. (மௌர்வீ = மருள், என்று ஹரதத்தர்).

க்ருஷ்ணரௌரவபாஜிநாநி ॥ ககூ ॥

க்ருஷ்ணஸாரமான், புள்ளிமான், ஆடு இவைகளின் தோல்கள் முறையே ப்ராம்ஹணர்களுக்கு அஜிநங்கள்.

வாஸாம்ஸி ஸாண க்ஷௌம வீர கூதவாநி வைகல்பிகாநி ॥ கள ॥

சணலால் செய்யப்பட்டது சாணம், வெண்பட்டு க்ஷௌமம், தர்ப்பாதிகளால் செய்யப்பட்டது சீரம், ஆட்டு ரோமத்தால் செய்யப்பட்ட கம்பளம் குதபம். இந்த நான்குவித உடைகள் எல்லோருக்கும் க்ராஹ்யம்.

காவிலம் வாऽவிக்ருதம் ॥ கஅ ॥

சாயங்களால் விகாரம் செய்யப்படாத நூல்வஸ்த்ரமாவது யாவருக்கும் க்ராஹ்யம்.

காஷாயீவேகே ॥ ககூ ॥

சில ஆசார்யர்கள் சிவப்பு வர்ணமுள்ள வஸ்த்ரத்தை உடுத்தலாமென்று நிஷேக்கிறார்கள்.

வாக்ஷும் ப்ராஹ்மணஸ்ய ராஜ்ஞஷ்ஷாரிக்ரு உதரபோ: ॥ உ0 ॥

வர்ணமுள்ள வஸ்த்ர விஷயமாயும் நிர்ணயம் சொல்லப்படுகிறது. வ்ருக்ஷங்களிலிருந்து வரும் சாயத்தால் சிவந்தது ப்ராம்ஹணனுக்கும், மஞ்சள், குங்கும வர்ணமுள்ள வஸ்த்ரம் முறையே க்ஷத்ரியவைஸ்யர்களுக்கும் க்ராஹ்யம்.

வைல்வவாலாபல ப்ராஹ்மணஸ்ய ॥ உக ॥

பில்வம் அல்லது புரசு இவைகளாலான தண்டம் ப்ராம்ஹணன் தரிக்கத்தக்கது.

ரௌக்ஷவைல்வல க்ஷத்ர ॥ உஉ ॥

பாக்கி இருவர்ணத்தினர் விஷயத்தில் அரசு, பீலு வ்ருக்ஷம் இவை தண்டமாகும்.

யஜ்ஞியோ வா ஸர்வேஷாம் ॥ உங ॥

அல்லது எல்லா வர்ணத்தாருக்கும் ஏதாவது ஒரு யக்ஞார்ஹ வ்ருக்ஷத்தின் தண்டம் க்ராஹ்யமாகும்.

சுவீயிதாஃ யஜ்ஞவஹநாஃ ஸரஸ்வத்யாஃ ॥ உச ॥

தண்டங்கள் கீடங்களால் வீணைக்கப்படாமலும், யூபம்போல் நுனியில் வளைந்தவையாயும், தோல் உள்ளவைகளாயுமிருக்க வேண்டும்.

உஷ்ணீஷககுதாஹாஸ்ரஜ்வ்யோணாஃ ॥ உரு ॥

தண்டங்கள் மூன்று வர்ணத்தினருக்கும் முறையே தலை, நெற்றி, மூக்கு நுனிவரையில் அளவுள்ளவைகளாயிருக்கவேண்டும்.

உஷ்ணீஜிமஸிவாஜிநாஸ்ரு ॥ உசு ॥

ப்ரம்ஹசாரிகள் அடியோடு சிகையை எடுத்துவிட்டு மூண்டமாகவோ, அல்லது கேசம் தரிப்பவர்களாகவோ, சிகையையே ஜடையாகக் கொண்டவர்களாகவோ இருக்கலாம்.

ஸ்ருவ்ருஹஸ்ருசஸ்ருஹ்வீஷ்டாஃநியாயாவாஜேசு ॥ உஎ ॥

போஜனமோ, மூத்ரபுரீஷாதிகளோ உச்சிஷ்ட நிமித்தங்கள். அத்தகைய உச்சிஷ்ட ஸமயத்தில் கையில் ஏதாவது த்ரவ்யம் வைத்துக்கொண்டிருந்தால், அந்த த்ரவ்யத்தைக் கீழே வைக்காமல் அத்துடனேயே ஆசமனம் செய்யவேண்டும்.

ஸ்ருவஸ்யாஃ வரிஷ்டாஜுஹ்வா தக்ஷண நிணேஜ
ஜநாநி தைஜஸ தாகிஜுக ஸ்ருவ தாஜுவாநாம் ॥ உஅ ॥

த்ரவ்ய சுத்தி சொல்லப்படுகிறது. உலோஹங்கள், மண், மரம், நூல் இவைகளால் செய்யப்பட்ட வஸ்துக்களுக்கு முறையே, தேய்த்துஅலம்புதல், நெருப்பில் காய்ச்சுதல், உளியால் செதுக்குதல், ஜலத்தால்அலம்புதல் இவைகள் சுத்தி முறைகள். உலோகங்களுக்குப் புளிபஸ்மாதிகள், மண்பாத்திரங்களுக்கு அக்நியில் காய்ச்சுதல், மரப்பாத்திரங்களுக்கு உளியால் செதுக்குதல், நூல் வஸ்துக்களுக்கு ஜலத்தால் அலம்புதல் சுத்திகரம்.

தைஜஸவஜ்ஞவஸிணீஸ்ஸுஸ்ருஜுஹூபாத்ராணாம் ॥ உக ॥

ரத்நக்கற்கள், மணி, சங்கு, முத்து இவைகளுக்கும் உலோகங்களுக்குச் சொன்னது போலவே பரிமார்ஜனம் சுத்திகரம்.

ஸ்ருவஸ்ய உத்ஸ்ருஹ்ய நைர்ஹாஃ ॥ ஈ ॥

யாஜ்ஞத்தம் முதலிய அஸ்திகளுக்கும், பூமிக்கும் மரத்திற்குச் சொன்னதான செதுக்கல் சுத்திகரம்.

ஸுவஸ்ருதம் வ ஹ்யக்நேஃ ॥ ஊக ॥

பூமிக்கு மண்வெட்டியால் செதுக்குடன், அந்த இடத்திற்கு வேறு இடத்திலிருந்து நல்ல மண் கொண்டு வந்து பூரணம் செய்வதும் அதிகப்படியான சுத்தி. வெட்டுதல், பொசுக்குதல், ஜலம், பசுக்களை மிதிக்கச் செய்வது, கோமயத்தால் மெழுகுவது ஆகிய ஐந்து சுத்தி முறைகள் பூமிக்கு உண்டு.

வைவஸ்வத மநுவிஷயே ॥ நக ॥

கயிறுகள், பிரம்புகளால் செய்யப்பட்ட பாய் முதலிய வஸ்துக்கள், தோல்கள் இவைகளுக்கு வஸ்த்ரத்திற்குச் சொன்னபடி ஜலத்தால் அலம்புதல் சுத்தி. பிரம்பு முதலிய வஸ்துக்களுக்கு ப்ரோக்ஷணமே போதுமென்று பைடீனஸி கூறுகிறார்.

உதமேத்ய வாஸ்தவிகம் தாநாம் ॥ நஙக ॥

கீழ் ஸூத்ரங்களில் சொல்லிய வஸ்துக்கள் மிக அசுத்தங்களால் தாக்கப்பட்டிருந்தால் அவைகளை எறிந்து விட வேண்டும் என்பது ஒரு பக்ஷம்.

ப்ராஜாபத்ய உத்பவனோ வா ஸர்வதோமுகத்வாத் ॥ நச ॥

பாதப்ரக்ஷாளந ஆசமநாதி சுத்தி கார்யத்தைக் கிழக்கு முகமாகவாவது, வடக்கு முகமாகவாவது செய்யவும்.

ஸவ்ய ஜாநு மாத்ரீ தக்ஷிணம் பாஹும் ஜாநு மாத்ரீ ப்ராசீநாவீதீ க்ருத்வா யஜ்ஞோபவீதியாயிருந்து, மணிக்கட்டு வரையில் இருகைகளையும் அலம்பிக்கொண்டு, மௌனத்துடன், அல்லது ஓசைப்படாமல், நெஞ்சு நனையும்படி மூன்று அல்லது நான்கு தடவைகள் தீர்த்தத்தைச் சாப்பிடவும். இதில், "உட்கார்ந்து கொண்டு" என்று சொல்லியிருப்பது, நின்றும், குனிந்தும் ஆசமனம் செய்ய உபலக்ஷணமென்று வ்யாக்யானம் கூறுகிறது. நான்கு தடவைகள் என்பது மந்த்ராசமன விஷயம். மூன்று தடவையே பொதுவானது.

த்ரிர் வர்திர்ஜ்ய தே ॥ நசு ॥

பிறகு ஈரத்துடன் கூடிய கையினால் உதடுகளை இரண்டு தடவைகள் துடைக்கவும்.

வாஉள வாஹ்ருகூஷு ॥ ஈள ॥

இரண்டு கால்களையும் அப்யுக்ஷணம் செய்து கொள்ளவும். சிரஸ்ஸையும் ஜலத்தைத்தெளிப்பது போல் ப்ரோக்ஷிப்பது அப்யுக்ஷண மென்று சொல்லப்படும்.

வாநி ஸொவஷ்வ்ருஸொ ஸீஷ்டுணோநி ॥ ஈஅ ॥

சிரஸ்ஸில் உள்ள, கண், காது, மூக்கு ஆகிய இந்த்ரியங்களையும் ஆசமனத்திற்குப்பிறகு ஸ்பர்சிக்க வேண்டும்.

உஉஜுநி ய ஊஉர்ஷு ॥ ஈக ॥

சிரஸ்ஸில் எல்லா விரல்களையும் வைத்து ஸ்பர்சிக்கவும். நாபியிலும் அப்படியே.

ஸுவா ஹுகூ கூகுவா உ வுநஃ ॥ சஂ ॥

தூக்கம், போஜனம், தும்மல் இவைகளுக்குப் பிறகு இரண்டு தடவை ஆசமனம் செய்யவும்.

ஊஜுஸ்மிஷ்டு ஷு ஊஜுஉநுது ஜிஹ்வாயாமபி ஸ்ப்ருஷ்டாயாம் ॥ சஈ ॥

பற்களில் ஸம்பந்தப்பட்டுள்ள அசுத்தத்தைத் தொட்டால், பற்களைத் தொட்டதற்குப் போலவே அசுசித்வமில்லை. ஆனால் அப்போது நாக்கு ஸ்பர்சம் ஏற்படாமலிருந்தால்தான். நாக்கு ஸ்பர்சமும் ஏற்பட்டால் அசுத்தியுண்டு.

வ்ராகூ வுதொரிதெஜுகெ ॥ சஉ ॥

கந்தங்களில் ஸம்பந்தப்பட்ட அசுத்தமானது விழும் வரையில் தான் அசுத்தியில்லையென்று சிலரின் அபிப்ராயம்.

வுதொஷ்வாஸ்ராவவஸு வித்ராஸு நிஸ்ரவ்ளெவ தவுவிஃ ॥ சஈ ॥

தந்த அசுத்திகள் வெளிப்பட்டால் வாய் ஜலத்திற்குச் சொல்லியபடி சுத்தி. அதாவது வாய் ஜலத்தை விழுங்கி விட்டால் சுத்தி. வெளிப்படுத்தினால் அசுத்தி. இந்த ந்யாயம் பற்கள் விஷயத்திலும்.

ந உவ்ரா விவ்ருஷஃ உஹ்விஷ்டஂ கூவுஜ்ஜி ந ஒஉஜ்ஜு நிவதஜ்ஜி ॥ சச ॥

வாயிலிருந்து வரும் ஜலத்திவலைகள் அசுத்தியைச்செய்யா.

ஆனல் அவை சரீரத்தில் விழாமலிருந்தால்தான். பூமியில் விழுந் தால் அசுத்தமில்லையென்று கருத்து.

வைதானாவகஷ்டூணம் ஶளஷேஜ்யஷ்வ ॥ சரு ॥

மூத்ர, புரீஷ, வஸா, ரக்தாதி அசுத்த வஸ்துக்களுக்கு, அவைகளின் நாற்றமும் லேபமும் போகும்படி செய்வதுதான் சுத்தி முறையாகும்.

தஷ்ஷிः வ்ரிவ்ரும் ஶுஷா வ ॥ சசு ॥

அந்தச் சுத்தியானது முதலில் ஜலத்தாலும், பிறகு மண்ணு லும், ஆக இரண்டு த்ரவ்யத்தாலும் செய்யப்பட வேண்டியது. கை, கால்களில் மலாதி அசுத்தியிலும் இது செய்யத்தக்கது.

உத்ஸர்ஜனஷ்டஹ விஸ்ரஸநாஹ்யவஹாரஸம்யோ மெஷ்ட்ர ॥ சள ॥

மூத்ரம், புரீஷம், ரேதஸ் இவைகளை நிரஸிப்பதிலும், புழங்கக் கூடாத வஸ்துக்களின் சேர்க்கையிலும் ஜலம், ம்ருத் இவை களால் சுத்தி.

யத்ர வாஶாபொ விஶ்யாஸ ॥ சஅ ॥

வேதமானது எந்த விஷயத்தில் எந்த மாதிரி சுத்தியை விதித் துள்ளதோ அதை அப்படியே ஆசரிக்கவேண்டும். சமஸங்களுக்கு ஜலத்தால் மார்ஜாலீயத்தில் என்பன போன்றவை.

வாணிஸ்ரா ஸவ்யேவஸம்ஹ்யாநஜ்ஞஷ்டம் ,,சுயீஹி ஹொ'' இத்யாஶ்ரவயேத்ரம் தத்ர வக்ஷ்யாமஃ ப்ரா ணொவஷ்டநம் ஒஹேமிः ॥ சக ॥

இதில் மாணவகன் செய்ய வேண்டிய ஆசார்ய உபஸ்தனம் சொல்லப்படுகிறது. மாணவகன் தனது வலது கையினல் ஆசார்ய னுடைய பாதத்தைக் கட்டைவிரல் நீங்கலாகப் பிடித்துக் கொண்டு, 'அதீஹி போ' என்று கேட்க வேண்டும் ஆசார்யனை. அந்த ஸமயம் மாணவகன், கண், மனதுகளை ஆசார்யனிடம் செலுத்தவும். தர்ப் பங்களால் சிரஸ்ஸிலுள்ள ப்ராணஸ்தானங்களான இந்த்ரியங் களையும் ஸ்பர்சிக்கவும்.

வ்யாணாயாஶாஸ்யः வஷட்உஶாத்ரிः ॥ ரு० ॥

பதினைந்து மாத்ரா காலமுள்ள மூன்று ப்ராணயாமங்களையும் அந்த ஸமயம் செய்யவேண்டும்.

வ்யாக்ருதிஷ்வேஷ்வேவம் ப்ராதர்யுக்தேஷ்வாத்மானமுபஸீததீ ॥ நுக ॥

கிழக்கு நுனியாகப் பரப்பப்பட்ட தர்ப்பங்களில் உட்கார வேண்டும். அத்யயனத்திற்காக.

ஓம்பூர்வாஃ வ்யாஹ்ருதயஃ ஸப்தோபரிஷ்டாஜ்ஜ்யோதிரேகம் தத்ஸவிதுரிதி ॥ நுஉ ॥

ஓம் என்பதை முதலாகக்கொண்ட ஐந்து வ்யாஹ்ருதிகளை இங்கே சொல்லவும். ஆனால் அந்த ஐந்து வ்யாஹ்ருதிகளில் ஐந்தாவதான புருஷ: என்பதற்குப்பதிலாக ஸத்யம் என்பதைச் சொல்ல வேண்டும். புருஷ: என்பது நான்காவது.

ப்ரதிதினமாசார்யபாதவந்தனம் வ்யாதம் ॥ நுந ॥

ஒவ்வொரு நாளும் காலையில் ஆசார்யனின் பாதங்களை உபஸங்க்ரஹணம் (நமஸ்காரம்) செய்யவேண்டும். (பாத உபஸங்க்ரஹண விதி 49-ஆவது ஸூத்ரத்தில்).

ப்ரஹ்மயஜ்ஞேன யாஜ்ஞவல்க்யஃ ॥ நுச ॥

வேதாத்யயன ஸமயத்தில், ஆரம்பத்திலும், முடிவிலும் பாத உபஸங்க்ரஹணம் செய்யவேண்டும்.

கூர்மசக்ர உபவிஶ்ய வ்யாஹ்ருதீஃ ஹுத்வா உத்தரேண தம் ஶிஷ்ய உபஸங்க்ரம்யாஹ ॥ நுரு ॥

ஆசார்யனால் ஆக்ஞை செய்யப்பட்ட பிறகுதான் சிஷ்யன், ஆசார்யனுக்கு வலது பக்கத்தில் கிழக்கு முகமாகவோ, வடக்கு முகமாகவோ உட்காரவேண்டும். கார்யாநுகுணமாக திக்விகல்பம்.

ஸாவித்ர்யாநுவாகஸ்ய ॥ நுசு ॥

ஒவ்வொரு அத்யயந காலத்திலும் காயத்ரியை முன்பாக உச்சரிக்கவேண்டும்.

ஸூதிதா ப்ரஹ்மண ஸூத்ரேண ॥ நுள ॥

பாத உபஸங்க்ரஹணங்களாக இதுவரை சொல்லிய நியமங்கள் முதல் முதல் வேதாத்யயந ஆரம்பத்தில் மட்டும் செய்யப்பட வேண்டியவை. பாத உபஸங்க்ரஹணமும் உட்காரவேண்டிய நியமமும் எப்போதும் உண்டு.

ஓங்காரஸ்ய நித்யத்வாத் ॥ நுஅ ॥

அதுபோல் ஓங்காரமும் எப்போதும் உண்டு. சொல்லப்பட வேண்டும்.

2.

கதுராமரநெ வாநராவஸஹநழி ।। குக ।।

ஆசார்யனுக்கும், சிஷ்யனுக்கும் மத்தியில் குறுக்கே வேறு யாராவது போய்விட்டால், மறுபடி பாத உபஸங்க்ரஹணம் செய்து உட்காரவேண்டும். இது அத்யயனம் நடக்கும்போது.

ஸுநகாஸவஸஹ உணுஷ்ணகாஜாராணாம் தூஸ்ஹிவ வாஹோ விவ்ருவாஸஸு ।। சுo ।।

அத்யயனகாலத்தில் ஆசார்ய சிஷ்ய மத்தியில், ச்வா, கீரி, ஸர்ப்பம், தவளை, பூனை இவைகளில் ஏதாவது ஒன்று போனாலும் மாணவகனுக்கு மூன்று நாள் உபவாஸமும், மூன்று நாள் ஒதுங்கியிருப்பதும் ப்ராயஸ்சித்தம்.

பூராணாயாஸ வ்ரதபூர்வம் ய ஊதரேஷாழி ।। சுக ।।

இதர ப்ராணிகள் குறுக்கேபோனால் மூன்று ப்ராணாயாமமும் க்ருதப்ராசனமும் (நெய் சாப்பிடுதல்) ப்ராயஸ்சித்தம். இந்த ப்ராயஸ்சித்தங்கள் சிஷ்யன் ஆசார்யன் இருவருக்குமென்று சிலர். சிஷ்யனுக்கு மட்டுமென்று சிலர்.

ஸுஸாநாஹுஜ்யநெ வைவழி ।। சுஉ ।।

ச்மசான ஸமீபாத்யயன தோஷத்திற்கு ப்ராணாயாமமும் க்ருத ப்ராசனமும் செய்யவேண்டும்.

முதல் அத்யாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்யாயம்.

பூரவாநயநாஸ காமவாரஃ காமவாஉஃ காமலகூஃ ।। க ।।

உபநயநம் செய்யும் வரையில் மாணவகனுக்கு இஷ்டப்படி ஆசாரம். பேச்சும் இஷ்டப்படி. ஆஹாரமும் இச்சைப்படி செய்யலாம். சாஸ்த்ர நியமமில்லை. அநுபநீதனுக்கு அந்ருதவதநாதி நிஷேதமோ, போஜன நியமமோ கிடையாதென்றபடி. இது ஆபத்கல்ப உபநயந விஷயம்.

கஹாதாஸ ।। உ ।।

அக்நியில் ஹோமம் செய்யப்பட்ட ஹவிர்ஸேஷங்களை அநுபநீதன் சாப்பிடக்கூடாது.

ஸ்வஸுவாரீ ॥ கூ ॥

அநுபநீதனுக்குக் காமசாரம் சொல்லப்பட்ட போதிலும், ஸ்த்ரீ விஷயமாக ப்ரம்ஹசாரியாக இருக்கவேண்டும். இந்த நியமமுண்டு.

யயொவவாஹிதஶ்சுதவாரீஷொ ஹவதி ॥ ச ॥

மூத்ர புரீஷ விஸர்ஜன விஷயமாக, சாஸ்த்ரீய நியமமில்லாமல் யதாஸம்பவம் அநுபநீதன் நடந்து கொள்ளலாம்.

நாஸ்யாஉபநயனவ்ரதம் விஹ்ருதெ ॥ ஞ ॥

இந்த அநுபநீதனுக்கு ஆசமன நியமங்களும் கிடையாது. நியமமின்றி ஸ்த்ரீ சூத்ராதிகளைப்போல் செய்யலாம்.

கூநவ்ருத்ராவசோஜுநவ்யாவநாவொக்ஷணெஷ்வஃ ॥ கூ ॥

அநுபநீதனுக்கு அபமார்ஜனமுண்டு. உச்சிஷ்டம்பட்ட இடத்தை ஜலமுள்ள கையால் துடைப்பது அபமார்ஜனம். மல மூத்ராதிகளை ஜலத்தாலும், மண்ணாலும் அலம்புவது ப்ரதாவனம். ரஜஸ்வலாதி ஸ்பர்சத்தில் ஜலத்தால் ப்ரோக்ஷிப்பது இவைகள் அநுபநீதனுக்கும் உண்டு. இது சிறிய பாலன் விஷயம். ஆறு வயதுள்ளவனுக்கு ஸ்நானமுண்டு.

நதஶ்வவ்ஸ்ரஸ்ருநாஶுளவழ ॥ எ ॥

ரஜஸ்வலாதி ஸ்பர்சமுள்ள அநுபநீதனை ஸ்பர்சிப்பதால் அசுத்தி கிடையாது. ஸ்ப்ருஷ்டாஸ்ப்ருஷ்டி தோஷமோ, ஸ்நாநமோ கிடையாது. இதுவும் ஆறு வயதிற்குட்பட்ட பாலன் விஷயம்.

நகெவலெநம் சுஹ்ருஹவநவைஹாரணபொஃ நிபஜ்ஜாசு ॥ அ ॥

இந்த அநுபநீதனை அக்நிஹோமம், வைஶ்வதேவம் முதலியவை செய்ய அநுமதிக்கலாகாது. ஸமந்த்ரகமான எந்தக் கர்மாவிலுமென்றபடி.

நவ்ருஹாலிவ்யாஹாரயெதந்ருத்ர வ்ருயாநிநயநாசு ॥ கூ ॥

அநுபநீதன் எந்த ஸந்தர்ப்பத்திலும் வேதத்தை உச்சரிக்க லாகாது. பித்ரு கர்மம் தவிர. பித்ருகர்ம மாத்ரத்தில் ஆவச்யக மான வேத மந்த்ரங்களை உச்சரிக்க அதிகாரமுண்டு.

உவநயநாதிநியமஃ ॥ கஂ ॥

அக்நிபரிசர்யை முதலிய நியமமானது உபநயனம் முதற் கொண்டு அநுஸரிக்கப்பட வேண்டும்.

உதகம் ஹ்யவஹயந்தி ॥ கக ॥

கீழே அநுபநீதனுக்குச் சொல்லிய ப்ரம்ஹசர்யமானது உபநீதனுக்கும் உண்டு.

சுஶ்ரூஷாநமைகஷ்வர்யமணை ॥ கஉ ॥

ஸமிதாதானமென்கிற அக்நிகார்யமும், பிக்ஷாசரணமும் ப்ரதிதினம் செய்யத்தக்கவை.

ஸத்யவசநம் ॥ கஊ ॥

உபநீதன் எப்போதும் ஸத்யமே சொல்ல வேண்டும்.

கவாஹ்நிகமவ்லுப்தம் ॥ கச ॥

உபநீதன் ப்ரதிதினமும் தீர்த்த ஸ்நாநம் செய்யவேண்டும்.

வநகே மொஹாநாதி ॥ கடு ॥

ப்ரம்ஹசாரீ, கோதானமென்கிற ஸமாவர்த்தனம் ஆகும் வரையில் ஸ்நாநம் செய்யக்கூடாதென்று சில ஆசார்யர்கள் நிஷேக்கிறார்கள். இது நித்ய ஸ்நாநத்திற்கே நிஷேதம். நைமித்திக ஸ்நானம் உண்டு.

வஹிர்க்ராமாத்ப்ரதிஷ்வாஸ்யம் வ ॥ கசு ॥

காலை, ஸாயம் இரண்டிலும் க்ராமத்திற்கு வெளியில் சென்று ஸந்த்யாவந்தனம் செய்ய வேண்டுமென்ற நியமமும் உள்ளவனாயிருக்க வேண்டும்.

திஷ்டேத் வாக்யாரம்பாத்ப்ராகுதயாத்தூராம் ஸஜ்யோதிஷ்யா
ஜ்யோதிஷோ ஹ்ருதயாகே வாஸ்தமயாத் ॥ களு ॥

ப்ராதஸ்ஸந்த்யையை நின்று கொண்டும், ஸாயம் ஸந்த்யையை உட்கார்ந்து கொண்டும் உபாஸிக்கவும். ஒரு ஜ்யோதிஸ் இருக்கும் போது ஆரம்பித்து மற்றொரு ஜ்யோதிஸ் தெரியும் வரையில் மௌனத்துடன் உபாஸிக்கவும்.

காலையில் நக்ஷத்ர ஜ்யோதிஸ் இருக்கும்போது ஆரம்பித்து ஸூர்யஜ்யோதிஸ் தெரியும் வரையிலும், ஸாயங்காலத்தில் ஸூர்ய ஜ்யோதிஸ் இருக்கும்போது ஆரம்பித்து நக்ஷத்ரஜ்யோதிஸ் தெரியும் வரையில் என்றபடி.

நாதிதூரீக்ஷேத ॥ கஅ ॥

ப்ரம்ஹசாரீ ஸ்த்ரீர்யானை எப்போதும் பார்க்கக்கூடாது. பார்க்க வேண்டுமென்கிற எண்ணத்துடன் என்று சிலர். வேறு சிலர் உதய கால விஷயமென்பார்கள். கௌதமர் அபிப்ராயப்படி எப்போதுமே நிஷித்தமென்று ஹரதத்தர்.

வஜ்யேத் மாம்ஸ சந்தன புஷ்ப பக்ஷ்ய ஸ்த்ரீ ஸம்ஸ்க்ருத யாந உபாநத் க்ஷீர தைல ஸீதவாரி வாத ஆதப வாரண ஸ்த்ரீ ஸேவா க்ரோத லோப மோஹ மத வாத்ய வாத நர்த்த ஸ்ப்ருஹா த்யூத ஜல்ப ஆக்ரோச பரிவாத ஸாஹஸாநி ॥ ஸ்ரு ॥

மது, மாம்ஸம், சந்தனம், புஷ்பம், பக்ஷ்யம், ஸ்த்ரீ இச்சை, கோபம், ஆசை, மோஹம், அதிவாதம், வீணாதி வாத்ய வாதநம், ஸ்நாநம், பல் தேய்த்தல், ஸந்தோஷம், நாட்டியம், பாட்டு, பிறரை அபவாதம் பேசுதல், பயம் கொடுக்கக்கூடிய கார்யம் ஆகிய இவைகளை ப்ரம்ஹசாரீ விலக்கவேண்டும்.

ம்ருத்யு ஸ்தாநே ஸ்வயம் ஸ்ருஜ்ய தாவஸ்தி காவாஸ்ரயண வாஹ்வாநாநி ॥ உ0 ॥

ஆசார்யன், பிதா முதலிய குருக்கள் இவர்களுடைய பார்வையில் கீழ்க்கண்ட கார்யங்களைச் செய்யக்கூடாது. வஸ்த்ராதிகளால் கழுத்தை மறைப்பது, அதாவது கழுத்தில் வஸ்த்ரம் தரிப்பது, கால்மேல் கால் போட்டு உட்காருவது, கம்பம், சுவர் முதலிய வைகளில் சாய்ந்து கொள்ளுதல், காலை நீட்டுவது இவைகள் வர்ஜநீயங்கள்.

நிஷ்ஷீவி தஹஸி தவிஜ்ரும்பி தாவஸ்ஹாட நாநி ॥ உக ॥

மேலும், கபத்தைச் சப்தத்துடன் வெளிப்படுத்துவது, சிரிப்பு, விஜ்ரும்பிதம் சோம்பல் முறிப்பது, விரல்களைச் சொடுக்குவது ஆகியவைகளையும் வர்ஜிக்கவேண்டும்.

ஸ்த்ரீ ப்ரேக்ஷணாலம்பநே ஸ்பர்ச நர்மாக்ஷ்யாழி ॥ உஉ ॥

மைதுன சங்கை ஏற்படும்போது ஸ்த்ரீகளை உற்றுப்பார்ப்பதும் தொடுவதும் கூடாது. அதுவே மைதுன சங்கைக்கு ஹேதுவாயிருக்கும்.

ஊர்த்வம் ஹீநஸேவா ஊத்தாநம் ஹிம்ஸாழி ॥ உங ॥

கூதாட்டம், ஹீநனிடம் ஸேவை, அல்லது ஹீநமான ஸேவை, கொடுக்காததை எடுத்துக் கொள்வது, ப்ராணிஹிம்ஸை இவைகளையும் வர்ஜிக்கவேண்டும்.

ஆசார்யஸ்ய தத்ஸ்த்ர ஸ்ரீ தீக்ஷிதநாமாநி ॥ உச ॥

ஆசார்யன், அவருடையபிள்ளை, அவருடையபத்நீ, யாக தீக்ஷிதன் ஆகியவர்களின் பெயரைக் குறிக்கலாகாது. சொல்வதை விலக்கவும்.

ஸ்ரோத்ரியஸ்ய ஹ்யம் நித்யம் ப்ராஹ்மணஃ ॥ உரு ॥

ப்ராஹ்மணன் மத்யத்தை (ஸ்ரைரை) எப்போதும், உபநயத்திற்கு முந்தியும், வர்ஜிக்க வேண்டும். பிறருக்குக் கஷ்டம் விளைவிக்கக் கூடிய அச்லீல வார்த்தைகளையும் வர்ஜிக்கவேண்டும்.

சயநாஸநீ வாக்யதாசார்யாத் ஜகந்யஸ்யவேஸ்மநி ॥ உசு ॥

படுக்கை, ஆஸனம் இரண்டும் ஆசார்யனைவிடத் தாழ்ந்ததாக இருக்க வேண்டும். அல்லது அவ்விரண்டும் வெறும் பூமியிலேயே. ஆசார்யன் நித்ரையிலிருந்து எழுந்திருக்குமுன் சிஷ்யன் எழுந்திருக்க வேண்டும். அவர் படுத்த பிறகு இவன் படுக்க வேண்டும்.

வாக்பாஹுபாதஸம்யதஃ ॥ உள ॥

வாய், கை, வயிறு இவைகளில் கட்டுப்பாடுடன் இருக்கவும். அதிகமாகப் பேசுவது, கை சேஷ்டைகளற்றிருப்பது, மிதமாகப் புஜிப்பது இவையில் கட்டுப்பாடு.

நாமதேயம் ப்ரவரஃ கோத்ரம் நிந்தாஸமேதம் ॥ உஅ ॥

ஆசார்யனுடைய பெயர், கோத்ரம் இவைகளைச் சொல்ல நேர்ந்தால் மிகுந்த கௌரவத்துடன் அவைகளைக்குறிப்பிட வேண்டும்.

சுவிஷ்டத ப்ரயவஸி வைவஜ் ॥ உக ॥

ஆசார்யனுக்குச் சொல்லிய கீழ்ச் சொல்லிய மர்யாதைகளை ஆசார்யனைப்போல், ஜனங்களால் கொண்டாடப்படும் வேறு பெரியோர்களிடமும் செய்யவேண்டும்.

ஸயநாஸநஸ்தோ நாநி விஹாய ப்ரதிஸ்ருவணம் ॥ ஈ ॥

ஆசார்யனுடன் பேசும்போது, அல்லது பதில்சொல்லும் போது, படுக்கை, ஆஸனம், இடம் இவைகளை விட்டு எழுந்து ஸமீபம் போய்ச் சொல்லவேண்டும். படுக்கை ஆஸனத்திலிருந்த படியே பேசக்கூடாது. தான் இருந்த இடத்திலிருந்தே பதில் சொல்லவும் கூடாது.

கஹிகூ₃ணம் வயநாஉ₃ஷ்வேந ।। நக ।।

ஆசார்யன் மறைவிலிருந்து சிஷ்யனுடன் பேசினால், சிஷ்யன் அந்த இடத்தில் நேரில் போய்க் கேட்க வேண்டும். அநாதரவாயிருக்கலாகாது.

கயஃஷ்டா நாஸநஃ கிய-கூ²வாதஹைவாயாம ஹ்ரூ²உ
உ₃ரு-நெ வொத்திஷ்டெ ।। நஉ ।।

ஆசார்யன் தாழ்ந்த ஆஸனத்தில் இருந்தால் சிஷ்யன் உயர்ந்த ஸ்தானத்தை விட்டு எழுந்திருக்கவேண்டும். மேலும் ஆசார்யனைத் தர்சிக்கும் போதும் எழுந்திருக்கவும். மூத்ர புரீஷாதி அசுத்தம் செய்யும் காலத்தில் காற்றுக் குறுக்காக ஆசார்யன் மேல் படாமலிருக்கும்படி எழுந்திருக்கவும்.

ஹ்ரூ²ஜ்ஜநி-வ்ரு²ஜெத் ।। நந ।।

ஆசார்யன் போகும்போது பின்னால் கூடப் போகவும்.

கரி-கு விஜ்ஞாவ்ரு²வ்ரு²ய ।। நச ।।

ஆசார்யன் ஸம்பந்தமான கார்யத்தைச் செய்யுமுன் விஜ்ஞாபிக்க வேண்டும். செய்த பிறகும் தெரிவிக்க வேண்டும். தீர்த்தம் கொண்டு வருதல் முதலியது கார்யம்.

ஆஹ-தொzஜ்ஞாயீ ।। நடு ।।

அத்யயனம் செய்ய ஆசார்யன் அழைத்த பிறகே அதைச் செய்யவேண்டும். தானாக வலுவில் கேட்கக்கூடாது.

ய-ஆதஃ ப்ரியஹிதயொஃ ।। நசு ।।

ஆசார்யனுடைய ப்ரியம், ஹிதம் இரண்டிலும் ச்ரத்தையுள்ளவனாயிருக்கவும். தற்கால ப்ரீதி ப்ரியம். நீண்டகால ப்ரீதி ஹிதம்.

தஜ்ஜாயா-வ-தெஷ-வெவழ ।। நள ।।

ஆசார்யனுடைய பார்யை, புத்ரன் ஆகியவர்கள் விஷயத்திலும் இப்படியிருக்க வேண்டும்.

நொஹ்விஷ்டாஸந ஸ்நாவந வ்யாயந வாஉ₃வ்ரு²ஷாஉந
உந்நு₃-நொவஸம்ஹ்ரு²ஷணாநி ।। நஅ ।।

ஆசார்ய பத்நீ, புத்ர விஷயத்தில் கீழ்க்கண்ட கார்யங்களைச் செய்யக்கூடாது. உச்சிஷ்ட போஜனம், ஸ்நானம் பண்ணி வைத்தல், அலங்காரம் செய்தல், கால் அலம்பி விடுதல், உடம்பைப் பிடித்து

விடுதல், பாத உபஸங்க்ரஹணம் ஆகியவைகளைச் செய்யக் கூடாது. மேற்கண்டவைகளை ஆசார்யனுக்கு மட்டும் அவச்யம் செய்ய வேண்டும்.

விப்ரோஷ்யாவஸம்ஸ்ருஹணம் ப்ரத்யாஹ்ருத்ய சாரணாதி ॥ ஈக ॥

சிஷ்யன் வெளியூர் போய்த்திரும்பியவுடன் ஆசார்யன், அவர் பத்நி ஆகியவர்களை பாத உபஸங்க்ரஹணம் செய்து நமஸ்கரிக்கவும்.

நைநகே யுவதீநாம் வ்யவஹாரஸ்த்ரியாவைத ॥ சம ॥

பதினறு வயது ஆகி லோக வ்யவஹாரம் அடைந்த மாணவகன் யுவதிகளான ஆசார்ய பத்நிகளை மேற் சொன்னபடி நமஸ்காரம் செய்யக்கூடாதென்று சிலர் நினைக்கிறார்கள்.

வாவ சுவணி சுகம் ஹைகஷ்வரணஜிஹ்ரஷ்வதிதவஜ சுழி ॥ சக ॥

பதிதன், உபபாதகீ நீங்கலாக எல்லா வர்ணத்தாரிடமும் பிக்ஷை வாங்கலாம்.

சூதிஜ்ஞாதைஷ ஸவஸ்வஃ ஸ்ரியொஜ்ஞா வண சுநஸ்கு ஸ்ரேண ॥

பிக்ஷா மந்த்ரமான "பவதி பிக்ஷாம் தேஹி" என்பதில் "பவத்" என்ற பதமானது வர்ண வாரியாக முறையே ஆதி, மத்யம், கடைசி பாகத்தில் சேர்க்கப்பட வேண்டும். பிக்ஷை வாங்குகிறவன் ப்ராம்ஹணனாயிருந்தால் "பவதி பிக்ஷாம்" என்றும், க்ஷத்ரியனாயிருந்தால் "பிக்ஷாம் பவதி" என்றும், வைச்யனாயிருந்தால் "பிக்ஷாம் தேஹி பவதி" என்றும் மாணவகன் சொல்ல வேண்டும். பிக்ஷை போடுகிறவர் புருஷனாயிருந்தால் "பவந்" என்று புல்லிங்கமாக மாற்றிச் சொல்லவும்.

சுவாயசுஜ்ஞாதிஸ்ரோ(ஹ்வை)ஷ சுவாஹைநயுத்ர ॥ சக ॥

பிக்ஷை செய்யுமிடமாவது. ஆசார்யன், தாயாதி, மாதுலாதி குருக்கள் இவர்களிடம் பிக்ஷிக்கவும். தன் வீட்டிலும் பிக்ஷிக்கலாம். இவர்களிடம் கிடைக்காவிட்டால் வேறு இடத்தில் பிக்ஷிக்கலாம்.

தெஷாம் வ்ருத்தம் வ்ருத்தம் பரிஹரேத் ॥ சச ॥

மேற்சொன்ன ஆசார்யாதிகளில்முன் முன் உள்ளவரை விலக்கி மற்றவரிடம் பிக்ஷிக்கவும். அதாவது வேறு இடத்தில் பிக்ஷையில்லையானால், தன் வீட்டில், அங்கில்லையானால் மாதுலாதிகளிடம், அதன் பிறகு ஜ்ஞாதி. பிறகு ஆசார்யனிடம் என்று வரிசையாகும்.

நிவெஹ மாரவெ சுந்ஜூரதொ ஹுஜீத ॥ சடு ॥

பிக்ஷை செய்து வந்த அந்நாதி வஸ்துக்களை ஆசார்யனிடம் தெரிவித்து, அவருடைய அநுக்ஞை பெற்றுப் புஜிக்கவும்.

சுவஸ்ரியள தஹ்ராயஹ வந்து வஷ்வஹுவாரிஹ்யோ ॥ சசு ॥

ஆசார்யன் ஸந்நிஹிதனுயில்லாவிட்டால், அவனுடைய பார்யை, புத்ரன், அல்லது கூட அத்யயனம் செய்கிறவர்கள் இவர்களிடம் தெரிவித்து அநுக்ஞை பெற்றுப் புஜிக்கவும்.

வாஹுதஷ்டவுளுமொயவுசாஸ்ரியாயொஹுழி ॥ சள ॥

அந்நத்தைப் புஜிக்கையில் மௌனமாயும், த்ருப்தியுடனும், அதி ஆசையின்றியும் புஜிக்கவும். ஸமீபத்தில் தீர்த்த பாத்ரம் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஸிஷ்யஸிக்ஷாவயெந ॥ சஅ ॥

ஆசார்யன் சிஷ்யனைச் சிக்ஷிப்பதில், வதம், அதாவது அடிப்பது, தவிர மற்ற உபாயங்களால் அதைச் செய்ய வேண்டும்.

சுமஸ்துள ரஜ்ஜுவெணுவிஹரஹ்யாம தந்துஹ்யாழி ॥ சக ॥

அதட்டல் முதலிய உபாயங்களால் சிஷ்யனை அடக்கச் சக்தியில்லையானால், மெல்லிய கயிறு, மெல்லிய மூங்கில் பிளாச்சு இவைகளால் மெதுவாக அடிக்கலாம்.

சுநெந்ந வந்து ராஜ்ஞா ஸாஹ்யாம ॥ ருo ॥

மேற்கண்ட இரண்டு ஸாதனம் தவிர வேறு ஸாதனங்களாலோ தனது கை கால்களாலோ சிஷ்யனை ஆசார்யன் கோபவசத்தால் அடித்தால், அந்த ஆசார்யன் அரசனால் சிக்ஷிக்கத் தக்கவன்.

ஆஹுய வஷ்டாணி வாகுவெஹெ வ்ரஹுவயஷ்ம வரொக ॥ ருக ॥

ஒரு வேதத்தை அத்யயனம் செய்து முடிக்கப் பன்னிரண்டு வர்ஷங்கள் குரு குலத்தில் ப்ரம்ஹசர்யம் அநுஷ்டிக்கவும். ஒரு வேதத்திற்குப் பல சாகைகள் இருந்த போதிலும் பரம்பரை ஸம்ப்ரதாயப்படி எவ்வளவு குரு முகமாக வழக்கமோ அதை மட்டும் க்ரஹிக்கவும்.

வ்ரதி ஆஹுய வா ஸவெஷ்டா ॥ ருஉ ॥

எல்லா வேதங்களையும் க்ரஹிக்க விருப்பமும் சக்தியும் உள்ளவன், ஒவ்வொரு வேதத்திற்கும் பன்னிரண்டு வர்ஷம் ப்ரம்ஹசர்யம் அநுஷ்டிக்கவும்.

ஸ்ருஹ்மணாஜ்ஞம் வா ॥ ருஹ ॥

அல்லது, ஒவ்வொரு வேதத்தையும் க்ரஹிக்க எவ்வளவு காலம் போதுமோ அல்வளவு காலம் ப்ரம்ஹசர்யம் அநுஷ்டித்தால் போதும். பன்னிரண்டு வர்ஷங்களுக்கு முன்னதாகவே பூர்ணமாக ஒரு வேதம் க்ரஹிக்கப்பட்டு விட்டால் அத்துடன் ப்ரம்ஹசர்ய நிவ்ருத்தி.

விஜ்ஞாதே முரூரூயேஷூந நிஜ்ஞ்ஞ்ஞ: ॥ ருச ॥

ஆசார்யனிடமிருந்து பூர்ணமாக வேத வித்யை கற்று முடிந்த பின் ஆசார்யனிடம் தக்ஷிணை விஷயமாக ஞாபித்து அவர் எண்ணத்தை அறிய வேண்டும்.

கூகூவா சுந்ஜ்ஞாதஸ்ய வா ஷ்ஷாந்ஜ ॥ ருரு ॥

ஆசார்யன் எண்ணம் தெரிந்தால் அதன்படி தக்ஷிணை செய்து விட்டோ, அல்லது அவன் அபேக்ஷியாவிடில் அவனிடமிருந்து அநுக்ஞை பெற்றோ திருப்பி ஸமாவர்த்தனமென்கிற ஸ்நாநத்தைச் செய்யவும்.

கூவாயஜ்ஞ ஸ்ருஷ்டோ முரூஹிணாம் சாதெதெதூகெ ॥ ருசு ॥

பிதா, ப்ராதா, மாதுலன் முதலிய குருக்களில் வேதாத்யயனம் செய்துவைத்த ஆசார்யன் உத்க்ருஷ்டன். ஆனால் மாதாவே உயர்ந்தவள் என்று சில ருஷிகள் நினைக்கிறார்கள்.

முதல் ப்ரச்னத்தில் இரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

முதல் ப்ரச்னம் மூன்றாவது அத்யாயம்.

தஸ்யாzzஸ்ரமவிகல்ஜ்ஞகெ வ்யாக்யாத ॥ க ॥

இப்படி அத்யயநம் முடிந்த ப்ரம்ஹசாரிக்கு மேலே சொல்லப் படும் ஆச்ரமங்களில் ஏதாவது ஒன்று விகல்பமாக அநுஸரிக்கப் படலாமென்று சில சிஷ்டர்கள் சொல்லுகிறார்கள். சிலர் எல்லா ஆச்ரமங்களும் வரிசையாக உண்டு என்கிறார்கள்.

வ்யவஹார்ய ஸ்ருஹவ்ஷ்டோ ஹிக்ஷு வைகாநஸவ: ॥ உ ॥

ப்ரம்ஹசாரியாகவே யாவதாயுஷம் இருப்பவன், க்ருஹஸ்தன், ஸந்யாஸீ, வைகாநஸனென்கிற வானப்ரஸ்தன் ஆகிய நான்கு ஆச்ரமங்கள்.

தெஷாம் ஶ்ரஹ்ஷ்ரோ யொநி ரவ்ரஜநக்வாஹிதரெஷாழி ॥ ஈ ॥

இந்த நான்கு ஆச்ரமங்களுக்கும் உத்பத்தி காரணமாயிருப்பவன் க்ருஹஸ்தனே. மற்ற மூவரும் ப்ரஜோத்பாதனத்தில் அதிகாரமற்றவர்களாகையால்.

தத்ரூகதம் வ்ரஹ்மசாரிணஃ ॥ ச ॥

அதில் ப்ரம்ஹசாரிக்கு வேண்டிய தர்மங்கள் முன் சொல்லப்பட்டுவிட்டன. யாவதாயுஷம் நைஷ்டிக ப்ரம்ஹசாரியாக இருக்க விரும்புகிறவனுக்கும் அந்தத் தர்மங்களே க்ராஹ்யம்.

கூவாயஶ்சீநக்வசாகெழி ॥ ஞ ॥

ஆனால் நைஷ்டிகனுக்கு ஆயுஸ்வரை ஆசார்ய சுச்ரூஷாதிகளால் ஆசார்யாதீனமாயிருக்கவேண்டியது அதிகப்படி நியமம்.

ஶ ரொஃ கூஜ்ரூஹெஷெண ஜவெகூ ॥ கூ ॥

ஆசார்யன் ஸம்பந்தமான கார்யங்கள் செய்யும் காலம் தவிர மற்றப் பாக்கி காலத்தில் வேதத்தை ஜபிக்க வேண்டியதே கார்யமாகும். இங்குக் குரு என்பது பிதா மாதாக்களையும் சொல்லுகிறது. அந்தச் சுச்ரூஷையும் நியதம்.

ஶ ஸ்வஹாவெ தஜ்வதெ வ்ரூத்தீ, தஜ்ஹாஸ்வ வ்ரூஜெ ஸ வ்ரஹ்மசாரிணஜ்ஹுள வா ॥ எ ॥

ஆசார்யனில்லாவிட்டால் நைஷ்டிகன், ஆசார்யபுத்ரனை அண்டி நிற்கலாம். அவனில்லாவிட்டால் யாராவது ஒரு சிஷ்டனை வ்ருத்தனிடம், அவனில்லாவிட்டால், ஸஹாத்யாயியிடம், அவனில்லாவிட்டால் அக்னியின் சுச்ரூஷையால் காலம் போக்கலாம்.

வஸவம்வ்ரூத்தா வ்ரஹ்மலொகூவாவ்ரூதி ஜிதெந்த்ரியஃ ॥ அ ॥

இம்மாதிரி நைஷ்டிகன் இருந்தால் ஜிதேந்த்ரியனாகி ப்ரம்ஹலோகத்தை அடைகிறான்.

உத்தரெஷாம் ஸ்வெதஜ்விரொயி ॥ கூ ॥

ப்ரம்ஹசாரிக்குச் சொல்லிய தர்மங்கள் இதர ஆச்ரமிகளுக்கும் சில க்ராஹ்யம். ஆனால் அது அந்த ஆச்ரமத்திற்கு விருத்தமாயிருந்தால் க்ராஹ்யமன்று. அவிருத்தமே க்ராஹ்யம்.

சுநிஜயொ லிக்ஷ்ஷஃ ॥ சஂ ॥

ஸங்யாஸிதர்மம் சொல்லப்படுகிறது.

பிக்ஷுவானவன், த்ரவ்ய ஸங்க்ரஹம் செய்யாதவனுயிருக்க வேண்டும். பணம் முதலியன சேமிக்கக்கூடாது.

உபஜுஹுயாதீ ॥ ஈக ॥

இந்த்ரியத்தை அடக்கி ஜிதேந்த்ரியனுக இருக்கவேண்டும்.

ப்ரவர்ஷீஜோ வஷாஸு ॥ கஉ ॥

வர்ஷருதுவில் ஓரிடத்தில் ஸ்திரவாஸம் செய்கிறவனுயிருக்க வேண்டும்.

பிக்ஷாயை க்ராமமபியாத் ॥ சஈ ॥

பிக்ஷை வாங்கும் பொருட்டே க்ராமத்திற்குள் போகலாம். மற்ற ஸமயம் வ்ருக்ஷ மூலத்திலோ தேவாலயத்திலோ வஸிக்கவும்.

ஜவநயோநிவ்ருத்தம் வர்ஜயேத் ॥ கச ॥

பிக்ஷா காலத்தில் பிக்ஷைபோட வந்த வீட்டில் தாமதம் ஏற்பட்டதோ அந்த வீட்டில் அன்று மறுபடி பிக்ஷைக்காகப் போகக்கூடாது.

நிவ்ருத்தாயீ ॥ சஉ ॥

பிறருக்கு ஆசீர்வாதம் செய்வதை விடவேண்டும். பிக்ஷைக் காகப் பிறரை ஆசீர்வாதம்செய்து பெற முயலக்கூடாது.

வாக்சக்ஷுரஹிம்ஸாஸம்யதோ ॥ கஈ ॥

வாக்கு, கண், கர்மம் இவைகளில் நியமத்துடன் கூடியவனுயிருக்கவேண்டும். வாக்கு நியமம் மௌனம். கண் நியமம் பார்க்கக் கூடாதவைகளைப் பார்க்காமலிருப்பது. கர்ம நியமம் அவச்யமற்ற கார்யங்களைச் செய்யாமலிருப்பது.

கௌபீநமாச்சாதநார்தம் வாஸோ பிப்ரியாத் ॥ கஎ ॥

கௌபீனமெனப்படுகிற குஹ்ய ப்ரதேசத்தை மறைப்பதற் காக மட்டும் வஸ்த்ரம் தரிக்கவும்.

பரிஹீணமேகே நிர்ணுத்ய ॥ சஅ ॥

கௌபீநாச்சாதனார்த்தமான அந்த வஸ்த்ரமும் பிறரால் உடுத்தி எறியப்பட்ட ஜீர்ணவஸ்த்ரத்தை எடுத்து அலம்பி, தரிக்க வேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள்.

நாரவிப்ரயுக்தம் சோஷயீத்வா ஜுஹுயாதீத ॥ கஈ ॥

தானுக உதிராத, ஓஷதிகளுடைய கிளை இலை பழங்களைப் பறிக்கக் கூடாது.

ந த்ரிராத்ரா தத்ரைவ க்ராமே வஸேத் ॥ உ0 ॥

வர்ஷா கால ருது காரணமின்றி, ஒரு க்ராமத்தில் இரண்டாவது ராத்ரியில் தங்கி வஸிக்கக் கூடாது. க்ராமைகராத்ரமாக ஸஞ்சரிக்கும்படி விதி.

உண்டீ ஶிகீ வா ॥ உக ॥

ஸன்யாஸீ சிரஸைப் பூர்ணமாக முண்டனம் செய்து கொள்ளவும். அல்லது சிகையை மட்டும் வைத்து மற்றக் கேசங்களை எடுத்துச் சிகையுள்ளவனுயிருக்கலாம்.

"சிகை என்பது ஞானமயமான சிகையே. அது அக்நி சிகை போன்றது. இஃதுள்ளவனே சிகீ எனப்படுகிறான், கேசம் தரிப்பவன் சிகியல்ல"

"சிகையுடன் வபநம் செய்து (முண்டனம் செய்து) யக்ஞோபவீத ஸூத்ரத்தையும் ஞானீ த்யஜித்து ஏக தண்டம் க்ரஹித்து ஸந்யாஸ தர்மம் சரிக்கவும்".

"அல்லது ப்ரத்யக்ஷமாக சிகையைத் தரித்தும், யக்ஞோபவீதம் தரித்தும், த்ரிதண்ட க்ரஹணம் செய்தும் ஸந்யாஸ தர்மம் அநுஷ்டிக்கவும்" என்று ஶ்ருதி ஸ்ம்ருதி விதிகள் இருப்பதாக ஹரதத்தர் காட்டியுள்ளார்.

வஜ்யேஸு ஜீவயந் ॥ உஉ ॥

நெல் முதலிய விதைகளை உலக்கை முதலிய ஸாதனங்களால் குத்துவது வதம். அதை ஸந்யாஸீ செய்யக் கூடாது. இதனுல் அரிசியைச் சமைப்பது முதலியதும் ஹிம்ஸையாகையால் அதை ஸந்யாஸீ செய்யக் கூடாது. பக்வாந்நம் பெறவே அவன் அதிகாரீ.

ஸர்வ ஸத்வேப்ய ஸ்தேப்ய ஹிம்ஸாநிவ்ருத்தயே ॥ உங ॥

தன்னை ஹிம்ஸிப்பவனிடமும், அனுக்ரஹிப்பவனிடமும் ஸந்யாஸீ ஸமமாக இருக்க வேண்டும். கோபமோ, ஸந்தோஷமோ கொள்ளக்கூடாது.

ந நாஸீஸம் ॥ உச ॥

இஹலோக ஸாதகமாகவோ, பரலோக ஸாதகமாகவோ எவ்வித கார்யாரம்பங்களையும் ஸந்யாஸீ செய்யக்கூடாது.

வைகானஸோ வநே ஸ்வயமாஸீ தவஸ்ஸீலஃ ॥ உரு ॥

வைகாநஸன் வானப்ரஸ்தன், காட்டில் வஸித்து, மூல பலங்களே ஆஹாரமாகப் புஜித்து, தபஸ்ஸீலனாக இருக்கவேண்டும். சரீரசோஷணம் தபஸ்.

ஸ்ரோவணகெநாக்நிராயாய ॥ உசு ॥

ச்ராவணகமென்கிற வைகாநஸ ஸூத்ரப்படி அக்நி ஆதானம் செய்து ஸாயம் ப்ராதர் ஹோமம் செய்யவும்.

கூடாயுஜீவீ ॥ உஎ ॥

பல மூலாதிகளைக்கூட க்ராமத்திலிருப்பவைகளைப் புஜிக்கக் கூடாது. காட்டிலிருப்பவைகளையே புஜிக்கவும்.

தெவ விதூ உநுஷ்ய பூதவிம்ருகேப்யஃ ॥ உஅ ॥

காட்டில் கிடைத்த பல மூலாதி த்ரவ்யங்களைக் கொண்டே தேவ, பித்ரு, மனுஷ்ய, பூத, ருஷி பூஜைகளைச் செய்யவும். வைச்வதேவமென்றபடி.

ஸவ்நாதீயிஃ ப்ரதிஷிஜவஜேத் ॥ உக ॥

இவனிடம் வருகிற எவரையும் இவன் அதிதியாகக் கொள்ளவும். ஜாதி நியமமில்லை. பதிதாதிகள் தவிர.

வைஷ்கவி உவயுஞ்ஜீத ॥ நஂ ॥

பல மூலாதிகள் கிடைக்காத ஸமயத்தில் புலி முதலிய துஷ்ட ம்ருகங்களால் கொல்லப்பட்ட ப்ராணி மாம்ஸத்தையும் உபயோகிக்கலாம். க்ஷத்ரிய வைகாநஸனுக்கு இந்த அநுமதி.

நாவாமாரூய்ய பயிதீஷேத ॥ நக ॥

காட்டில் வஸிக்கும்போது உழுது பயிரிட யோக்யமுள்ள க்ஷேத்ரத்தில் இருக்கக்கூடாது.

க்ராமம் வா நாவிஸேத ॥ நஉ ॥

காட்டிலிருந்து க்ராமத்திற்குள் ப்ரவேசிக்கலாகாது.

ஜடிலஃ ஸ்ரோத்ரியவாஸாஃ ॥ நங ॥

வபநமின்றி, ஜடை தரித்து, மரவுரி க்ருஷ்ணஜிநங்களை வஸ்த்ரமாகக் கொள்ளவும்.

நாதீயம்வத்ஸரம் யுஞ்ஜீத ॥ நச ॥

ஒரு வர்ஷம் தாண்டி, பழயதாகிய தான்யத்தைப் புஜிக்கக் கூடாது.

வைகாநஸ்யம் கவாவாயஸ்ஸ் பூதகவியாநாஸ் ஸாஹஸ் ஸ்ஸஸ் ஸாஹஸ்ஸஸ் ஸ்ஸ ॥ ங ॥

ஆசார்யர்கள், அதாவது தர்மசாஸ்த்ர கர்த்தாக்களாயிருந்து, தர்ம நிர்ணயம் செய்யும் ருஷிகள், க்ருஹஸ்தாச்ரமம் ஒன்றையே முக்ய ஆச்ரமமாக நிச்சயிக்கிறார்கள். ஏனெனில் க்ருஹஸ்த தர்மங்களான அக்நிஹோத்ராதிகள் வேதங்களில் ப்ரத்யக்ஷமாக விதிக்கப் படுவதால் அதுவே ப்ரதானம். அக்நிஹோத்ராதி க்ருஹஸ்த தர்மங்களில் அசக்தரான மூகன், பதிரன், கண் இல்லாதவன் ஆகிய அநதிகாரிகள் ஸந்யாஸாதிகளுக்குப் போகலாம் என்று நிர்ணயிக்கிறார்கள். ஸூத்ரத்தில் கடைசி பதம் இரட்டித்திருப்பது அத்யாய ஸமாப்தி சிஹ்னமாகும்.

முதல்ப்ரச்னத்தில் மூன்றாவது அத்யாயம் முற்றிற்று.

முதல் ப்ரச்னம் நான்காவது அத்யாயம்.

ஸ்ரூஹஸ்ஸ் ஸஸ்ரூஸ்ஸ் ஸாயஸ்ஸ் விஜ்ஞாத ஸஜாதயவ ஸ்ஸாயஸ்ஸீ ॥ க ॥

க்ருஹஸ்தனாக இருக்க விரும்புகிறவன் ஜாதி குலாதிகளால் ஸமமான பார்யையை அடைய வேண்டும். தன்னை விட வயதில் சிறியவளும், ஏற்கனவே பிறனுக்குக் கொடுபடாதவளுமானவளை.

ஸஸஜாதயவ்யஸ்ஸ் விவாஹஸ் ॥ உ ॥

ஸமானப்ரவரமில்லாதவர்களுடன் தான் விவாஹம் செய்யலாம்.

ஊர்த்வம் ஸப்தமாத் விதஸ்தாயாஸ்ஸ் ஸீஜிநஸ்ஸ் ஸாதஸ்ஸ் வாஸ்ஸ் வஸ்ஸாத் ॥ ங ॥

பிதாவை ஆரம்பித்து, கணக்குச் செய்து, அதில் ஏழாவது தலைமுறைக்கு மேல் உண்டான கந்யகையையே விவஹிக்கலாம். அது போல் மாத்ரு வர்க்கத்திலும் ஐந்தாவது தலைமுறைக்குப் பிறகு பிறந்தவளே விவாஹ யோக்யை. இது போல் பீஜிக்கும் ஐந்தாவது வரையில் நிஷேதம்.

வ்யாஹ்ருதா விஸ்ருஷ்டாஸ்ரீ ரஸம்வஸ்ராய ஸ்ரோத்ரியாஸ் ஸ்ரூயாஸ்ஸ் ॥ ச ॥

வேதவித்தை, கர்மானுஷ்டானம், பந்துக்ரமம், சீலம் இவைகள் பொருந்தியவனுக்குக் கன்யகையை அலங்காராதிகளுடன் மூடிக் கொடுப்பது ப்ராம்ஹ விவாஹமாகும்.

ஸம்பொ2ஜ்ஞ: வ்ராஜாவதை3 ஸஹ யஜே2யுதாதி3தி ॥ ரு ॥

ப்ராஜாபத்யம் என்கிற விவாஹ முறையில் "ஸஹதர்ம: சர்யதாம்". (சேர்ந்து தர்மம் செய்யவும்) என்பதுதான் மந்த்ரம். மற்ற விவாஹங்களிலும் இது உண்டாகிலும் வேறு ஆச்ரமமோ, வேறு ஸ்த்ரீயோ கூடாது என்பது இந்த ப்ராஜாபத்யத்தின் நியமம்.

கூஷெ2 மொதி3யூ3நம் கந்யாவதெ ஊ3ர்ஹ ॥ கூ ॥

ஆர்ஷமென்கிற விவாஹத்தில் கன்யாபிதாவுக்கு அல்லது பந்துவுக்கு, பசு மிதுனம் கொடுத்துக் கன்யகையைப் பெற வேண்டும்.

கூதவெ2தி3 ஜ்ஞிஜே ஊ3ரும் தெ3வொ3ஸ்ஜ்ஞ்ய ॥ எ ॥

யாகத்தில் வேதியில் ருத்விக்காயிருப்பவனுக்குக் கன்யகையை அலங்கரித்து, தானம் செய்வது தைவம் என்ற விவாஹ முறை.

ஊ3ஹ்யூர்ஹ: ஸபா ஸாபொமொ மானவ2: ॥ அ ॥

கன்யகை இஷ்டப்பட்டுத் தானுகவே பர்த்தாவுடன் சேருவது காந்தர்வம் என்ற முறை.

விதே3நாநாதி3: ஸ்ரீ3தாரோஸ்ரூர்ஹ: ॥ கூ ॥

கன்யகையை வைத்துக் கொண்டிருக்கிற பிதா முதலிய பந்துக்களுக்கு அபேக்ஷையுள்ள தனத்தைக் கொடுத்துப் பெறுவது ஆஸுர முறை.

ப்ரஸஹ்யாzzஹாநாஸ் ராக்ஷஸ: ॥ கo ॥

பலாத்காரமாகக் கன்யகையை எடுத்துக் கொண்டு வருவது ராக்ஷஸம்.

கஸம்விஜ்ஞாதெ3தாவஸ்ஜ்ஞாஸ் தை3ஸாச: ॥ கக ॥

நித்ராதி காலத்தில் முன் அறிவிப்பில்லாமலேயே கன்யையை அநுபவிப்பது பைசாச முறை.

உக்வாரோ யஜே2ர்ஹ: ப்ரயோக: ॥ சஉ ॥

மேற்கண்ட விவாக முறைகளில் முதலிலுள்ள நான்கு முறைகள் தார்மிகமான முறைகள். ப்ரசஸ்தங்கள்.

ஷஷ்டிதமகே ॥ கஉ ॥

ஆறு விவாஹங்கள் தார்மிகங்களென்று சில ருஷிகள் சொல்லுவார்கள்.

சூந்ரொசாநதைரேகாதரஆதரஸ்ரா ஜாதாஃ ஸவ
ணாஸ்வஷ்டோ்ரகிஷாஉக்ரஷ்துவாரஸ்ரவாஃ ॥ கச ॥

அநுலோம ஜாதி, அடுத்த ஜாதி, ஒன்று விட்டது, இரண்டு விட்டது ஆகியவைகளில் பிறந்தவர்கள் முறையே ஸவர்ணன், அம்பஷ்டன், உக்ரன், நிஷாதன், தௌஷ்மந்தன், பாரசவன் என்ற ஜாதிப் பெயருள்ளவர்களாவார்கள்.

வ்ரதியொசாஷ்ட்ர ஸ்ரூத ஸாமய கூயொமவ கூத வைதெஹக வண்ணாஃ ॥ கடு ॥

ஸ்ரூதன், மாகதன், ஆயோகவன், க்ருதன், வைதேஹகன், சண்டாளன் என்பவர்கள் வரிசையாக ப்ரதிலோமஜாதியில் பிறந்தவர்கள். அவர்களுக்கு அந்த ஜாதிப் பெயர்.

ப்ராஹ்மணீஜாநஸு ட்ரூநு வணாஸ்வ கூந்ரவ்ய வ்யாசு ப்ராஹ்மணஸ்ரூதஸாமயவண்ணாஸ்வாநு ॥ கசு ॥

ப்ராம்ஹண ஸ்த்ரீயானவள், ப்ராம்ஹண, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ர ஜாதியில் ஸம்பந்தப்பட்டால் வரிசையாக ப்ராம்ஹணன், ஸ்ரூதன், மாகதன், சண்டாளன் என்கிற ஜாதியை உற்பத்தி செய்கிறாள்.

தெஹ்ய வஸ்ய க்ஷத்ரியா ஸ்ரூஜ்ஜாவஸிக்த க்ஷத்ரிய யீவாஸ்ர வ்ரூஷலாநு தெஹ்ய வஸ்ய வைஸ்ரூயா ஸ்ரூஜ்ஜக்ஷ்ணோஹிஷ்ய வைஸ்ரூ வைதெஹாநு வாராஸ்ரவ யவந கரண ஸ்ரூத்ரூநு ஸ்ரூத்ரூதெகே ॥ கள ॥

ப்ராம்ஹணீ நான்கு வர்ணங்களுடன் ஸம்பந்தப்பட்ட க்ஷத்ரியஸ்திரீ, மூர்த்தாவஸிக்தன், க்ஷத்ரியன், தீவரன், புலகஸன் என்ற ஜாதிகளையும், வைச்ய ஸ்த்ரீ ப்ராம்ஹணீ ஸம்பந்தத்தால், ப்ருஜ்ஜகண்டன், மாஹிஷ்யன், வைச்யன், வைதேஹன் என்கிற ஜாதிகளையும், சூத்ரை பாரசவ, யவந, கரண, சூத்ராதி ஜாதிகளையும் பெறுவார்கள்.

வண்ணாத்ரயாநாந ஷ்டக்ஷ்ரவக்ஷ்ரூாம் ஸவ்ரூதே வத்ரூதே வாzzவாய்ரூாஃ ॥ கஅ ॥

ஒருவன் நடவடிக்கையின் உயர்வு தாழ்வுகளால் வேறு வர்ணத்தை அடைவதென்பது ஏழாவது அல்லது ஐந்தாவது தலை முறையில் தான் என்று ஆசார்யர்கள் நினைக்கிறார்கள்.

வ்ருஷ்ட்யுத்ராதாநாம் வ ॥ சசு ॥

நான்கு வர்ண ஸ்ருஷ்டியின் இடையில் கலப்புகளால் ஏற்பட்ட அநுலோம ஜாதிகளுக்கும் உயர்வு தாழ்வு ஏழு அல்லது ஐந்து தலை முறைக்குப் பிறகே ஏற்படும்.

ப்ரதிலோமாஸ்வ யோநிஷு ॥ உ ஂ ॥

ப்ரதிலோமஜாதியில் பிறந்த ஸ்த்ரீதாதிகளுக்கு உபநயநாதி தர்மங்கள் கிடையா.

ஸ்த்ரீஷ்வாயாம் வ ॥ உக ॥

சூத்ர ஸ்த்ரீயிடம் பிறந்த பாரசவாதிகளும் தர்மஹீநர்கள்.

சுஸோநாயாம் து ஸ்த்ரீஷ்வாசு வதிதவ்ராத்யாஃ ॥ உஉ ॥

சூத்ரனிடம் ஸமானமில்லாத ஜாதிக்குப் பிறந்த ஆயோக வாதிகள் பதிதர்கள் போல் நடவடிக்கையுள்ளவர்கள்.

சுத்ர்யாஃ வாவிஷ்டாஃ ॥ உங ॥

சூத்ரனுக்கு ப்ராம்ஹணியிடம் பிறந்தவன் அந்த்யஜன். அவன் பாபிஷ்டன். எவ்வகையிலும் விலக்கத்தக்கவன்.

வைநஷி ஸாயவஃ வைதூராஃ ॥ உச ॥

மேற்சொன்ன வகையின்றிச் சாஸ்த்ர முறைப்படி பிறந்த புத்ரர்கள் ஸாதுக்கள். குலத்தைப் பரிசுத்தமாக்குகிறார்கள்.

த்ரிவ்ருத்ஷோஷ்டாசு ॥ உரு ॥

ஆர்ஷ விவாஹத்தில் பிறந்த புத்ரன் மூன்று தலை முறையைப் பரிசுத்தமாக்குகிறான்.

உஸ ஜ்யைவாசு உஜ்யைவ வ்ராஜாவத்யாசு ॥ உசு ॥

தைவ விவாஹத்தினுல் பத்துத் தலைமுறை பரிசுத்தமாக்கும் புத்ரன் பிறப்பான். ப்ராஜாபத்ய விவாஹத்தால் பிறந்தவனும் அப்படியே.

உஸ வ்ருஷபோநு உஸ வராநு கூதாநாம் வ ப்ராஹ்மீவ்ருத்யா ப்ராஹ்மீவ்ருத்யாஃ ॥ உள ॥

ப்ராம்ஹ விவாஹத்தால் பிறந்த புத்ரன், தனக்கு முன் பின் பத்துத் தலை முறைகளையும் தன்னையும் ஆக இருபத்தொரு தலை முறையைப் பரிசுத்தமாக்குவான்.

முதல் ப்ரச்னத்தில் நான்காவது அத்யாயம் முற்றிற்று.

முதல் ப்ரச்னம் ஐந்தாவது அத்யாயம்.

ஸீதாவைவயாகூ ॥ க ॥

ரஜஸ் தோன்றியது முதல் பதினாறு தினம் ருதுகாலம். அது கர்ப்ப க்ரஹண காலம். அதில் பார்யையை அடைய வேண்டும். இதில் முதல் மூன்று தினங்கள் நிஷித்தங்கள். வேறு பல நியமங்களை ஸ்ம்ருதிகளில் அறியவும். ருதுகமனம் நித்யம். செய்யாவிடில் தோஷமுண்டு.

ஸவஸ்துரா வ்ருதிஷிஜவஜஸ்ழி ॥ உ ॥

ருதுகாலமின்றி மற்ற எல்லாக் காலத்திலும் கமனம் செய்யலாம். ஆனல் பர்வ முதலிய நிஷித்த காலம் தவிர.

ஷெவவித்ருஷ்டஸ்ஷுஷ்ருதஷிஸ்வஜிஜகூஃ ॥ ங ॥

க்ருஹஸ்தன், தேவ பித்ரு மனுஷ்ய பூத ருஷிகளை ப்ரதி தினம் பூஜிக்க வேண்டும். அதாவது வைச்வதேவம் பஞ்சமஹாயக்ஞும் செய்ய வேண்டும்.

நிதர்ஷாஜ்ஞாயஃ ॥ ச ॥

அவை சொல்லப் படுகின்றன. வரிசையை விவக்ஷிக்காமல் முதலில் ப்ரம்ஹயக்ஞும் சொல்லப் படுகிறது. ஸ்வாத்யாயமென்கிற ப்ரம்ஹயக்ஞும் வேதாத்யயனம் நித்யம் செய்யத்தக்கது.

விதர்ஹுஷொஷுஷாநம் யஷொதாஹஃநஸு ॥ ஞ ॥

பித்ருக்களுக்கு உதகதானம் நித்யமும் செய்யவும். அன்னம், பழம், மூலம் முதலியவைகளால் தானம் செய்வதைச் சக்திக்கேற்ற படி செய்யவும்.

ஹாயஸாதிர்ஹிஸ்ருயாதீவஸ்ர ॥ கூ ॥

க்ருஹஸ்தன் அக்நிபரிசர்யை செய்ய ஆரம்பிப்பது பார்யையை அடைந்தவுடனே, அதாவது விவாஹம் முதற் கொண்டோ, அல்லது குடும்ப ஸ்வத்துப் பிரிந்து தனியாகக் கிடைத்த காலம் முதலோ செய்யப்பட வேண்டும். எந்த அக்நியில் விவாஹம் நடந்ததோ அதைப் பரிசர்யை செய்ய வேண்டும்.

தஷ்டிஸு ஸ்ருஹ்யாணி கூஃஸ்ருணி ॥ எ ॥

அந்த அக்நியில் க்ருஹ்ய கர்மாக்களாகிய ஔபாஸன, வைச்வதேவ பும்ஸவனாதிகளைச் செய்ய வேண்டும்.

ஔவவித்ரஃந-ஷ்ரபஜாஃ ஷ்வாஹ்ராயஸ்ய வமிகஃபு ॥ அ ॥

அந்த அக்நியில் தேவயக்ஞும், பித்ருயக்ஞும், மநுஷ்யயக்ஞும், ஸ்வாத்யாயம் இவைகளைச் செய்ய வேண்டியது. பித்ரு மனுஷ்ய யக்ஞத்திற்கு அக்நியில் பாகம் செய்வதால் ஸம்பந்தம். ப்ரம்ஹ யக்ஞத்தை அக்நி ஸமீபத்தில் செய்யும்படி விதியுள்ளது. அக்நி பரிக்ரஹம் செய்யாத வரையில் லௌகிகாக்நி.

சுஹாவஹ்நிஃ-ங்ஞதரிவி-ஸ்வைதெவாஃ ப்ரஜாவதிஃ ஷ்விஷ்டகூதி ஹொஃஃ ॥ கூ ॥

தேவ யக்ஞத்தில் அக்நியில், அக்நி, தன்வந்தரி, விச்வே தேவர்கள், ப்ரஜாபதி, அக்நிஸ்விஷ்டக்ருத் இவர்களுக்கு ஸ்வாஹா காராந்தமாக ஹோமம்.

திஷ்வதாஹ்ரஸ்ய யஶாஷ்டி ॥ கஂ ॥

எட்டுத் திக்குகளுக்கும் யார் யார் தேவதைகளோ அவர்களுக்கு அவரவர் திக்கில் பலி போடவும், அந்தந்தப் பெயர்களைச் சொல்லி.

ஆஷ்-ந ஃஹஃஹ்ரஃ ॥ கக ।

க்ருஹத்தில் எவ்வளவு வாசற்படிகளோ அவைகளில் 'மஹத்ப்ய:' என்ற மந்த்ரத்தால் பலிஹரணம். இங்கும் ஸ்வாஹாகாரம் உண்டு.

ஸ்ருஹெவதாஹ்ரஃ ப்ரவிஸ்ரு ॥ கஉ ॥

க்ருஹத்திற்குள் ப்ரவேசித்து 'க்ருஹதேவதாப்ய:ஸ்வாஹா' என்று பலி போடவும்.

ப்ரஹ்மணெ ஃஜ்ரை ॥ கஙு ॥

க்ருஹத்தின் மத்தியில் 'ப்ரம்ஹணே ஸ்வாஹா' என்று பலி. ப்ருதிவீ, வாயு, ப்ரஜாபதி, விச்வேதேவா: என்ற தேவதைகளுக்கும் ப்ரம்ஹாவுக்குப் பிறகு பலிஹரணம் உண்டு.

ஆகாஸாயெத்யுதரிக்ஷெ வலிந-ஸ்கெஷ்வ்ரஃ ॥ கச ॥

ஆகாசாய ஸ்வாஹா என்று ஆகாசத்தில் பலியைத் தூக்கி எறிய வேண்டும்.

நக்தம்வரெஹ்ரஸ்ய ஸாயஂ ॥ கடு ॥

ஸாயங்காலத்தில் 'நக்தம்சரேப்ய:ஸ்வாஹா' என்று பலி ஹரணம். மற்ற தேவதைகளுக்கும் ஸாயங்காலத்தில் பலி உண்டு.

ஸஹ்ஸிவாவ்ருʼ ஹிக்ஷாஹ்ரந்ʼ ஹ்வ்ருʼ ஹ்வயேத் ॥ ஈஈ ॥

பலிஹரணம் முடிந்த பின் பிக்ஷாதானம் செய்யவும். ஸ்வஸ்தி என்று பிக்ஷுவைச் சொல்லச்செய்து, அவன் கையில் முதலில் தீர்த்தம் சேர்த்து, பிறகு பிக்ஷை போடவும். இது மநுஷ்ய யஜ்ஞமாயும் ஆகும்.

ஹ்ரீதிஷு வைவம் யதேʼ்வஷு ॥ சள ॥

தானங்கள் எங்கு விஹிதங்களோ அந்தத் தர்ம தானங்களில் இது போல் தீர்த்த பூர்வமாகவே தானம் விஹிதம்.

ஸதீமுʼணவாஹ்ஸ்ராநஞ்ʼ்ராநி மயாநி சுவ்ராஹ்மண
வ்ராஹ்மண ப்ரோதீய வைஹவாரமெஹ்ʼ ॥ கஅ ॥

க்ஷத்ரிய வைச்யர்கள், ப்ராம்ஹ்மணன், அதில் வேதாத்யாயீ, அதிலும் ஸாங்காத்யயனம் செய்த வேதபாரகன் ஆகியவர்களுக்குச் செய்த தானங்கள், வரிசையாகவே முறையே, ஸமம், இருமடங்கு, ஆயிரம் மடங்கு, அநந்தம் என்ற பலன் உள்ளவைகள்.

முʼவ்யேʼ நிவெஸ ஔஷயாயேʼ வ்ருʼத்திக்ஷீண யக்ஷ்யோண
கூர்யந கூர்வம்யொம வைஸஜிதேஷு ப்ரவ்ருʼவ்ருʼஷ்வாவிஹா
மொ வஹிவெʼ்ஹி ॥ ஈஈ ॥

ஆசார்ய தக்ஷிணை, விவாஹம், மருந்து சாப்பிட உதவி, ஜீவநமில்லாதவன், யாகம் செய்யப்போகிறவன், வேதாத்யயநம் செய்கிறவன், வழிநடப்பவன், விச்வஜித் யாகம் செய்து பணமற்றவன் ஆகிய இவ்விஷயங்களில் யதாசக்தி ஹிரண்யாதி த்ரவ்ய தானம் செய்யவேண்டும். செய்யாவிட்டால் ப்ரத்யவாய முண்டு. யாக மத்தியில் தவிர மற்ற இடத்தில் எங்கும் இந்த விதி.

ஹிக்ஷோணைஷ்ʼ கூர்தாளஜிதரைஷ்ʼ ॥ உ0 ॥

மேற்கண்டவர்கள் தவிர இதரர்கள் யாசனம் கேட்டால் அவர்களுக்கு பக்வாந்நத்தைத் தானமாக அவச்யம் கொடுக்கவும்.

வ்ருʼதிர்ʼ்ரோʼ்தர்யவ்ருʼஸேʼ்வம்யʼ்ஹாய நஉவ்ராஈ ॥ உக ॥

கொடுக்கிறதாக ஒப்புக் கொண்டிருந்த போதிலும், அதர்மம் கூடியவனுக்குக் கொடுக்கக் கூடாது, பிறகு தெரிந்தால். இதனால் தர்ம விஷயத்தில் இது தோஷமென்பது விளங்குகிறது.

கூர்ʼஉ ஹ்ரூஷ்ட லீதாதʼ மூவ்ய வாஉ ஷ்ருவிர உஹ்ய
உதாந்தவாகூர்ந்ருʼ்தாந்ருʼவாதகாமி ॥ உஉ ॥

கோபமடைந்தவன், அதிக ஸந்தோஷீ, பயந்தவன், துக்கப் பட்டவன், க்ருபணன் அல்லது ஆசைக்காரன், பாலன், கிழவன், மூடன், மதம் பிடித்தவன், பைத்தியம் இவர்களுடைய வார்த்தை கள் பொய்யாகிலும் பாதகங்களாகா.

ஹோமபசு வபவ்ருத்தியி கூஶாஸ்த்ர வ்யாயித முஹ்ருணீ
ஷ்வாஹி நீஷ்வித்யாஸு ஜபந்யாஸ்து ॥ உக ॥

அதிதி, குமாரர்கள், வ்யாதிஸ்தன், கர்ப்பிணீ, தங்கை தமக்கை பெண் இவர்கள், கிழவர்கள், பரிசாரகாதிகள், இவர்களை க்ருஹஸ்தன் தனக்கு முன்னடியே சாப்பிடச் செய்ய வேண்டும். பிறகு தான் சாப்பிடவும்.

கூவாயஸ்விதஸ்ஸவீநாம வ நிவேஶ வயநகீர்யா ॥ உச ॥

போஜன காலத்தில் ஆசார்யன், பிதா, ஸகா ஆகியவர்கள் ஸ்நிஹிதர்களாயிருந்தால் அவர்களுக்குத் தெரிவித்து அவர்கள் இச்சைப்படி கார்யம் செய்யவும்.

ஜ்ஞாதிராசார்யஸ் ஶ்வஶுர விதஸ்யஸ் தத்ஸகாஶாத்வஸ்த்ரநை
யக்ஞோபகரணம் ॥ உஞ ॥

ருத்விக், ஆசார்யன், மாமனார், பித்ரு ஸஹோதரன், மாமா ஆகியவர்கள் க்ருஹத்திற்கு வந்தால் அவர்களுக்கு மதுபர்க்கத் துடன் பூஜை.

ஸம்வத்ஸர உத்தரம் ॥ உசு ॥

மேற்கண்டவர்கள் ஒரு வர்ஷத்திற்குப் பிறகு மறுபடி வந்தால் மறுபடி மதுபர்க்கம் உண்டு.

யஜ்ஞவிவாஹயோஸ்த்வகர்த் ॥ உள ॥

ஆனல், யாகம், விவாஹம் காரணமாக அவர்களுக்கு ஒரு வர்ஷத்திற்குள்ளும் மறுபடி மதுபர்க்கமுண்டு.

ராஜ்ஞஸ் தத்ராதிகாரஸ் ॥ உஅ ॥

வேதாத்யாயியான ராஜாவுக்கும் மதுபர்க்கம் உண்டு.

அதத்ராதிகாரஸ்யாஸனோதகே ॥ உக ॥

அத்யயனம் செய்யாத அரசனுக்கு ஆஸனமும், அர்க்ய தீர்த்த மும் மட்டுமுண்டு. மதுபர்க்கமில்லை.

தத்ராதிகாரஸ் தத் வாஸ்ருஷவஸ்ருஷ்டவிஶேஷாம்ஸ் தத்காரயேத் ॥

ச்ரோத்ரியரான ப்ராம்ஹணர்களுக்கு, பாத்யம், அர்க்யம், அந்நம் ஆகிய விசேஷங்களைச் செய்யவும். பல தாம்பூலாதிகளும்.

நித்யோ வா ஸம்ஹாரவிஶிஷ்டே ॥ ஈக ॥

அசக்தனுயிருப்பவன் ப்ரதிதினம் க்ருஹத்தில் நடக்கும் மிளகு ஜீரக முதலிய ஸம்ஸ்காரமுள்ள அந்நத்தைக் கொடுக்கலாம்.

உபயதொஉஸுஏநஉவெஏ வாயுவுதே ॥ ஈஉ ॥

வேதாத்யயனுதி யோக்யதையில்லாதிருந்தாலும், ஸதாசார முள்ள அதிதி வந்தால் அவனுக்கு நடத்தரமான ரீதியில் அந்ந ஸம்ஸ்காராதிகள் செய்து பூஜை நடத்தவும்.

விவரீதெ த ு தபுணொஉகுஹ்ணிஷ்வாமதஉஞ்ஞதஃ வை ஜாஉநபுராஶு ॥ ஈஈ ॥

வேதாத்யயநாதி யோக்யதையிருந்தும் ஸதாசார ஸம்பந்நனு யில்லாதவன் வந்தால், தர்ப்பம், தீர்த்தம், இடம், நல்வரவு வார்த்தையுமே பூஜை. மத்யம்ரீதியில் அந்நதானமும்.

ஶயுவாஸநாவஸயுாந்வுஜ்யாவாஸநாநி ஸஂயுகு ரூயவஏஃ ஸஂநாநி ॥ ஈச ॥

க்ருஹஸ்தன் தனக்கு ஸமமான கௌரவமோ, அல்லது அதிக கௌரவமோ உள்ள அதிதி வந்தால் அவனுக்கு, தனக்கு ஸமமாகப் படுக்கை, ஆஸனம், வீட்டில் இடம், கூடப்போய் கௌரவிப்பது முதலியவைகளைச் செய்யவேண்டும்.

கூவுஶொஉவி ஹீநெ ॥ ஈஉ ॥

தன்னைவிடக் கொஞ்சம் தாழ்ந்தவனுயிருந்தாலும் மேற்கண்ட படி செய்யவும். குறைந்தவனென்பதற்காகக் குறைக்கக்கூடாது.

கஉஸாநஹ்யாஶொஉதியிரெகுஹாதி கொ உயிவுகுஷஉ யெஏவஹ்யாயீ ॥ ஈகு ॥

அதிதியென்பவன் வேறு க்ராமத்தியவனுயிருக்கவேண்டும். ஒருநாள் வஸிப்பவனுக இருக்கவேண்டும். ஸ்ரௌத ஸ்மார்த்த அக்நிகளின் நுனியில் நிற்கும் காலமாகிய ஸாயங்காலத்தில் வந்தவனுயிருப்பவன் உயர்ந்தவன்.

கஉஶுஸாநாஸபாஸொஹ்வாணாஉந்வுஶ்நீஃ ॥ ஈள ॥

ஒருவருக்கொருவர் ஸந்திக்கும்போது ப்ராம்ஹணன் 'குசல'

சப்தத்தாலும், க்ஷத்ரியன் 'அநாமய' பதத்தாலும் வைச்யன் 'ஆரோக்ய' பதத்தாலும் விசாரிக்கவேண்டும்.

சுஜ்யம் ஸுஶ்ரூஷா ॥ ஈஅ ॥

கடைசியாகவுள்ள "ஆரோக்யம்" என்பதே சூத்ரனுக்கும் உபயோகப்படும்.

ப்ராஹ்மணஸ்யாநதியாஸ்ப்ராஹ்மணஃ ॥ ஈஈ ॥

க்ஷத்ரிய வைச்ய சூத்ராதிகள், ப்ராம்ஹ்மணனுக்கு அதிதியாக வரத்தக்கவரல்லர்.

யஜ்ஞே ஸம்யுதஸ்ஸ்யுஃ ॥ ஈ0 ॥

க்ஷத்ரிய வைச்யாதிகள் யாகார்த்தமாகக் கூப்பிடப்பட்டு வந்திருந்தால் அவர்களை அதிதிபோல் பூஜிக்கவும்.

ஹோஜநம் து க்ஷத்ரியஸ்யாப்யம் ப்ராஹ்மணைஃ ॥ ஈக ॥

அதிதியாக க்ஷத்ரியன் வந்தாலும் அவனுக்கு ப்ராம்ஹ்மண போஜனம் ஆகிய பிறகு போஜனம் செய்விக்கவும்.

ஸநியாந ஜ்ஞாதீந்ப்ராஹ்ம ணாம்ஸ்யாம்ஶ்ச ஸாம்ஸ்யாம்ஶ்ச வ்யாம்ஶ்ச ॥ ஈஉ ॥

அதிதிபூஜாகாலத்தில் வந்த வேறு ஜாதியார்களையும் தனது வேலைக்காரர்களுடன் சேர்த்துப் போஜனம் செய்விக்கவும். பக்ஷபாதமின்மை, தயை காரணமாக.

முதல் ப்ரச்னத்தில் ஐந்தாவது அத்யாயம் முற்றிற்று.

முதல் ப்ரஸ்னம் ஆறுவது அத்யாயம்.

வாஹ்யாவஹ்யம்ஶ்ச ப்ராஹ்மணம் ஸர்வாயேஷ்வஹ்ஸு ॥ க ॥

மேலே சொல்லப்படப்போகிற பெரியோர்களை ஸந்திக்கும் போது ப்ரதிதினமும் பாதோபஸங்க்ரஹணம், (பாதஸ்பர்சாதி நமஸ்காரம்) விதிப்படி செய்யவும்.

க்ருஹாத்ஸு து விப்ரோஷ்ஸு ॥ உ ॥

தானே, ஆசார்யாதிகளோ வெளியூர் போய்த் திரும்பிய வுடன் அவர்களிருக்குமிடம் போய், சிஷ்யன் பாதோபஸங்க்ரஹ ணம் செய்யவேண்டும்.

ரதாவிதாதரஸ்வஸுராம வஸுவாஜாநாம விஶ்வாமி
ரஸுணாம தரூரஸுணாம ச ॥ ஈ ॥

மாதா, பிதா, மாத்ரு பந்துக்களாகிய மாதுலன், சிறிய தாயார் வகை, பித்ரு பந்துக்களான சிற்றப்பன், அத்தை முதலியவர்கள், ஜ்யேஷ்ட ப்ராதாக்கள், வித்யோபதேசம் செய்த ஆசார்யன், உபாத்யாயன் முதலிய குருக்கள் அவர்களுடைய குருக்கள் ஆகியவர்களை முன் ஸூத்ரங்களில் சொல்லியபடி பாதோபஸங்க்ரஹணம் செய்யவும்.

வஸிவாதெ வரவஸ்ய ॥ ச ॥

மேற்கண்ட பெரியோர்கள் ஓரிடத்தில் சேர்ந்திருந்தால் அப்போது உத்க்ருஷ்டர்களுக்கு முன்னடி நமஸ்காராதிகள் செய்ய வேண்டும்.

வஸநாஶ வைரஸ்ய கரஹபதிதி கரிவாதொ ஜுஷவாபெ ॥ ஞ ॥

ப்ரதி அபிவாதனுதி சாஸ்த்ர நியமங்களை அறிந்தவர்களை ஸந்திக்கும்போது அபிவாதனம் செய்யவேண்டும். சிஷ்யன் தனது பெயரைச் சொல்லி, "அத்தகைய நான் அபிவாதனம் செய்கிறேன்" என்று.

ஸ்ரீவ்ரம்பொமெzலிவாஹதொzநியஃஜெகெ ॥ ரு ॥

பர்த்தாவும், பார்யையும் சேரும் ஸந்தர்ப்பத்தில் அபிவாதன நியமமில்லையென்று சிலர் சொல்லுகிறார்கள். பர்த்தாவைப் பார்யை நமஸ்கரிக்கும் விஷயத்திலும் இது உண்டு.

நாzவிவைரஷ்ய ஸ்ரீணாம சுரதாவிதாவ்யஹாயஸுலமிநீநாழ ॥

ஸ்த்ரீகளை நமஸ்கரிப்பதில் நியமம் சொல்லப்படுகிறது. ஸ்த்ரீகளில், தாயார், சிற்றப்பன் பார்யை, ஸஹோதரீ இவர்கள் தவிர மற்ற ஸ்த்ரீகளை வெளியூர் போய்வந்த ஸந்தர்ப்பம் தவிர மற்ற ஸமயங்களில் நியதமாக பாதோபஸங்க்ரஹணம் செய்ய வேண்டியதில்லை. தாயார் முதலியவர்களுக்கு எப்போதும் உண்டு.

நொவஸஂஹணம ஸுராதாஹாயஸுணாம ஸுஷ்ரூஸு ॥ ஆ ॥

ப்ரவாஸத்திலிருந்து வந்தவன், ப்ராதாக்களின் பார்யைகளுக்கும், மாமியாருக்கும் உபஸங்க்ரஹணம் செய்யவேண்டியதில்லை.

ஸ்வஸ்ரூஸ்வஸ்ரீத்ரவ்யஸாதகுரூணாம் தத் யவீயஸாம்
வ்ருத்தகுரூணாஞ்சாபிவாதயேத் ॥ கூ ॥

ருத்விக், ச்வசுரன், சிற்றப்பன், மாதுலன் இவர்கள் தன்னை விடச் சிறிய வயதுள்ளவர்களாகில் அவர்களுக்குப் ப்ரத்யுத்தானம் செய்து பூஜிக்கவும். அபிவாதனமில்லை.

தயாதந்யே வ்ருத்தபூர்வே ராஜஸ்ரோத்ரியாசார்யேஷு
ஸ்வவ்ருத்தவத்வ்ருத்தஸ்தே ॥ கo ॥

மேற்கண்டவர்கள் தவிர வேறு மனிதன் வயதில் பெரியவனாயிருந்தாலும் நகரவாஸியாயிருப்பவனுக்கு ப்ரத்யுத்தானம் மாத்ரமே. நமஸ்காரமில்லை. எண்பது வயதுக்குக் குறைந்த சூத்ரனுக்கும் பாலர்களால் ப்ரத்யுத்தானமுண்டு. நமஸ்காரமில்லை.

கவிராஜவ்யாயஸே ஸ்வஸ்தி ॥ கக ॥

சூத்ரனைவிடச் சிறிய வயதுள்ளவனை ஆர்யனையும் அந்தச் சூத்ரன் ப்ரத்யுத்தானம் செய்து பூஜிக்கலாம். அபிவாதனம் செய்ய வேண்டியதில்லை.

நாம க்ராஹ்ய மஜாநதேஷு ॥ கஉ ॥

அந்தந்த உயர்வுள்ளவனுடைய பெயரை நிக்ருஷ்டன் சொல்லக்கூடாது. உபசாரப் பெயரிருந்தால் சொல்லலாம்.

ராஜ்ஞஸ்தாஜவஸ வ்ருஷ்ணாம் ॥ சங ॥

வேதாத்யயனம் செய்யாதவனும், வேலைக்காரனும் ராஜாவின் பெயரைச் சொல்லக்கூடாது.

ஸஹ ஸவயஸி வயஸ்யாம் ஸஹாத்யாயிநி ஜாதம் । கச ॥

ஒரே வர்ஷத்தில் பிறந்து ஸமான வயதுள்ளவர்கள் "போ", "பவந்" என்ற மர்யாதை வார்த்தையால் அழைத்துக் கொள்ளவும்.

உபவஷ்டாரம் வ்ருத்தம் வணிஜம் கோபம் ஸ்ரோத்ரிய
ஸ்தாரணவ்ருத்தம் ॥ கடு ॥

பத்து வயது அதிகமுள்ள பட்டணவாஸியும், ஐந்து வயது அதிகமுள்ள கலா நிபுணனும், அத்யயனம் செய்த ச்ரோத்ரியனும், ஸஹாத்யாயியான சாரணனும் இவர்கள் மூன்று வயது அதிகமுள்ளவர்களும், கீழ் ஸூத்ரத்தில் சொல்லியபடி, "போ" "பவந்" என்ற மர்யாதைப் பதங்களால் ஸம்பாஷிக்கத் தக்கவர்கள்.

ராஜந்யவைஶ்யகர்மபி: விஜ்ஞாஸ்ய: ॥ ஈஈ ॥

க்ஷத்ரிய கர்மத்தாலும், வைச்ய கர்மத்தாலும் ஜீவிக்கும் ப்ராம்ஹணரும், வித்யையால் குறைந்தவனும், வ்ருத்தனுயிருந்தாலும், "போ" "பவ" பதங்களால் வ்யவஹரிக்கத்தக்கவர்.

தீக்ஷிதஸ்ய ப்ராகர்ஷ்யாஸ் ॥ ஈள ॥

ஸமாந வயதுள்ள யாக தீக்ஷிதனும், லோம க்ரய கார்யத்திற்கு முன்பு மேற்கண்டபடி வ்யவஹரிக்கத்தக்கவன். லோம க்ரயத்திற்குப் பிறகு வ்ருத்தர்களைப் போல் கௌரவிக்கத்தக்கவன்.

வித்த வயஸ் கர்ம ஜாதி விஜ்ஞா வயாம்ஸி ஶாஸ்த்ராணி வஸ்து வீயாம்ஸி ॥ ஸஅ ॥

பணம், சிஷ்டர்களான பந்துக்கள், கர்ம, ஜாதி, வேதாதிவித்யை, வயஸ், ஆகியவை மனிதனுக்குக் கௌரவ ஹேதுக்கள். இவைகளில் பணம் முதல் உள்ள வரிசையில் மேல் மேல் உள்ளது ப்ரபலம்.

ஶ்ருதம் து வஸ்து விஜ்ஞாயா ஜ்யாயஃ ॥ ஈஈ ॥

வேத வேதார்த்தங்களை யதாவத்தாக அறிந்துள்ள யோக்யதையானது மற்ற எல்லா மான்ய ஸ்தானங்களைவிடப் பெரிது.

தந்நிமித்தத்வாத் யஜ்ஞஸ்ய ஶ்ருதேஸ்து ॥ உ0 ॥

ஏனெனில், தர்மம், ச்ருதி ஆகியவை மேற்கண்ட ச்ருதத்தை மூலமாகக் கொண்டிருப்பதால். ச்ருத மூலமாக அநுஷ்டானம், அநுஷ்டான மூலமாகத் தர்மம் என்றிப்படி.

ரதி ஶகடீஷ்வாநஶ்வாரூட வயஸ்விஸ்வாதகராஜஸு: வயோ ஜாதி ॥

வண்டி, அல்லது வண்டியிலுள்ளவன், பத்தாவது தசை என்கிற வ்ருத்த தசையிலுள்ள கிழவன், ரோகாதிகள் காரணமாக ரக்ஷிக்கத்தக்கவன், கர்ப்பிணீஸ்த்ரீ, வித்யாவ்ரத ஸ்நானம் செய்த ஸமாவ்ருத்தன், ராஜா ஆகியவர்கள் மார்க்கங்களில் ஒன்று சேர்ந்தால் மேற்கண்டவர்களுக்கே வழி கொடுத்து மற்றவர் விலக வேண்டும்.

ராஜ்ஞா து ஶ்ரோத்ரியாய ஶ்ரோத்ரியாய ॥ உஉ ॥

ராஜாவும், வேதாத்யாயியான ச்ரோத்ரியனும் சேரும்போது ராஜா ச்ரோத்ரியனுக்கு முதலில் வழி கொடுக்கவேண்டும்.

முதல் ப்ரச்னத்தில் ஆறுவது அத்யாயம் முற்றிற்று.

முதல் ப்ரஶ்னம் ஏழாவது அத்யாயம்.

ஸர்வதஸ்த்வ ப்ராஹ்மண ஏவ ப்ராஹ்மணாத் வித்யாமாதத்யாத் ॥

வேதம் தவிர மற்ற வித்யைகளை ப்ராம்ஹணன், க்ஷத்ரிய வைஶ்யர்களிடமிருந்தும் நியமபூர்வமாக க்ரஹிப்பது ஆபத்கல்பமாக அங்கீகரிக்கப்படுகிறது. இதுபோல் க்ஷத்ரியனும் வைச்யனிடம் க்ரஹிக்கலாம்.

ஸந்நமேந்நம் ஸ்ரூயுஷா ॥ உ ॥

ப்ராம்ஹணன் க்ஷத்ரிய வைஶ்யர்களிடம் வித்யாக்ரஹணம் செய்யும்போது அந்த ஆசார்யனுக்குப் பாதஸம்வாஹநாதி சுச்ரூஷைகள் கிடையா. வித்யாக்ரஹணம் முடியும்வரை அந்த ஆசார்யனுடன் அநுகமனம் செய்வதே சுச்ரூஷை. அவன் போகும்போது கூடவே போகுதல் அநுகமனம்.

ஸமாவ்ருத்த ப்ராஹ்மண வனவ ஸ்ரூயாத் ॥ ங ॥

வித்யாக்ரஹணம் முடிந்தபின் ப்ராம்ஹணனே குருவாகிறான்.

யாஜநாத்யாவநயந்தி ஹ்யேநாம் ஸவைஷாம் ॥ ச ॥

ஆபத் காலத்தில் எல்லா வர்ணத்தார்களுக்கும், யாஜந, அத்யாபன, ப்ரதிக்ரஹங்கள் தர்மங்களாகும். அல்லது ஆபத் காலத்தில், எல்லோரையும் அத்யயனம் செய்து வைக்கலாம், யாகம் செய்து வைக்கலாம், எங்கும் ப்ரதிக்ரஹம் செய்யலாமென்று மற்றொரு அர்த்தம்.

வ்ருத்யர்தம் வ்ருத்யபாவே ஸ்ரூயாத் ॥ ஞ ॥

மேற்கண்ட யாஜநாதி ஆபத் தர்மங்களில் முன் முன் உள்ளது பெரிது. ப்ரதிக்ரஹத்தைவிட அத்யாபநம், அதைவிட யாஜனம் என்று.

தஸ்யாஸ்ய க்ஷத்ரவ்ருத்திः ॥ ட ॥

ப்ராம்ஹணனுக்கு மேற்கண்ட ஆபத்தர்மஜீவநம் கூடக் கிடைக்கவில்லையானால் அவன் க்ஷத்ரிய வ்ருத்தியை அவலம்பித்து ஜீவிக்கலாம்.

தஸ்யாஸ்ய வைஶ்யவ்ருத்திः ॥ ண ॥

க்ஷத்ரிய வ்ருத்தியால் ஜீவனம் கிடைக்காவிடில் வைஶ்யவ்ருத்தியைக் கைக்கொள்ளலாம்.

தஸ்யாவஜ்ஞ ॥ அ ॥

மேற்கண்டபடி வைஸ்ய வ்ருத்தியை அவலம்பித்த ப்ராம்ஹ ணன் விற்பனை செய்யக்கூடாத வஸ்துக்களாவன.

முரமஹரூதாளுதிலமாணகக்ஷளலாஜிநாநி ॥ கூ ॥

சந்தனுதி வாஸனை த்ரவ்யம், நெய், எண்ணெய், உப்பு, வெல் லம் ஆகிய ரஸங்கள், பக்வாந்நம், மோதக அபூபாதிகள், எள்ளு, சணலால் செய்யப்பட்ட சாக்குப்பை, வெண்பட்டு, பலவித தோல் கள் இவைகளை ஆபத்காலத்திலும் ப்ராம்ஹணன் விற்கக்கூடாது.

ரக்தநிணி-ருக்தவாஸஸீ ॥ கo ॥

சிவப்புச்சாயம் போட்ட வஸ்த்ரம், வண்ணான் வெளுத்த வஸ்த்ரம் இவைகளையும் விற்பனை செய்யக்கூடாது.

கூரம் லவிகாரஜ்ஞ ॥ கக ॥

பாலும், பாலிலிருந்து உண்டாகும் தயிர் முதலிய த்ரவ்யங் களும் ப்ராம்ஹணன் ஆபத்காலத்திலும் விற்கக்கூடாது.

உஞ்ச வம்ச வ்ருஷளஷய மயாம்ஸ தூணொஷகாவயூநி ॥

மஞ்சள் முதலிய மூலம், பாக்குப்பழம் முதலிய பழம், சம்ப காதி புஷ்பம், திப்பிலி முதலிய ஔஷதம், தேன், மாம்ஸம், புல், ஜலம், அபத்யங்களான விஷத்ரவ்யங்கள் இவைகளும் விற்கக்கூடா தவை ப்ராம்ஹணனுக்கு.

வபாவஜ்ர ஹிங்ஹாயொமெ ॥ கஙு ॥

ஹிங்ஸாகார்யார்த்தமாகப் பசுக்களையும் விற்பனை செய்யக் கூடாது. மாம்ஸக் கடைக்காக என்றபடி.

வ்ருஷ வஸா கூஜீ வெஹதஜ்ர நிதூஜ்ஞ ॥ கச ॥

மனிதன், மலட்டுமாடு, பெண் கன்றுக்குட்டி, கர்ப்பத்தை நாசமாக்கும் மாடு, இவைகளையும் விற்கக்கூடாது கட்டாயமாக. இங்கு நித்யமென்று சொல்லப்படுவதால் கீழ்ச்சொல்லியவை அநித்யமென்று விளங்குவதாகச் சிலர் நினைக்கிறார்கள்.

ஹரிஜி வ்ரீஹி யவாzஜாzவ்ருஜ்ர ம ஔஷஹ யெஙநயஹ மொகெ ॥ சரு ॥

பூமி வீடு, நெல், யவதான்யம், அஜம், அவி (செம்மறி), குதிரை, நாய், ருஷபம், பசுமாடு, வண்டியிழுக்கும் காளை இவை

களையும் விற்கக்கூடாதென்று சில ருஷிகள் கூறுகிறார்கள். கௌதமருக்கு இது இஷ்டமென்று ஏற்படுகிறது.

நியஹ்ஹ ॥ ஸ்ரு ॥

மேலே சொல்லிய வஸ்துக்களை விற்கக்கூடாதென்று ப்ராம்ஹணனுக்கு நிஷேதம் சொல்லப்பட்டபோதிலும், அந்த வஸ்துக்களை விநிமயம் செய்துகொண்டு வியாபாரம் நடத்த அனுமதிக்கப்படுகிறது. ஒரு வஸ்துவைக்கொடுத்து மற்றொரு வஸ்துவை வாங்குவது விநிமயம், அதாவது பண்டமாற்றம்.

ரஸாநாம ரவிக்ரய ॥ ஸ்ர ॥

உதாஹரணபூர்வமாக அதைச் சொல்லுகிறார்:—ரஸங்களெனப்படுகிற எண்ணெய், நெய், வெல்லம் முதலியவைகளில் ஒன்றைக்கொண்டு ஒன்றை மாற்றிக்கொள்ளலாம் எண்ணெயுள்ளவன் அதைக்கொடுத்து நெய் வாங்கலாம். நெய் உள்ளவன், எண்ணெயை மாற்றிக்கொள்ளலாம். இந்தமாதிரி.

வஸ்த்ரநாம ச ॥ ஸ்அ ॥

பசுக்களையும் பண்டமாற்று நியமப்படி க்ரய விக்ரயம் செய்யலாம்.

ந ஆவணிக்யாதாரபோஷ ॥ ஸ்ரு ॥

உப்பு, பக்வாந்நம், ஆகியவைகளுக்கு விநிமயத்தால்கூட விற்பனை அனுமதி கிடையாது.

தீர்காநாம ச ॥ உ0 ॥

எள்ளுகளுக்கும் பண்டமாற்ற மூலமும் விற்பனை கூடாது.

ஸமீநாzzஸந்த வ்ருஷ்ய ஸம்யுக்தயோ ॥ உக ॥

தற்கால உபயோகத்திற்காக ஸம அளவுள்ள அரிசியால் பக்வாந்நத்தை விநிமயம் செய்துகொள்ளலாம். அரிசியைக்கொடுத்து, பக்வாந்நத்தை மாற்றிக்கொள்ளலாம். இந்த நிஷேதங்கள் யாவும் வ்யாபாரார்த்தமில்லாமல் அவச்யமான உபயோகத்திற்காக ஒரு குறிப்பிட்ட அளவு வாங்குவதையோ விற்பதையோ தடுக்கா.

ஸவ்யா வ்ருத்திராஸாதாவஸ்ஸ்வேஷு ॥ உஉ ॥

குடும்பரக்ஷணார்த்தமாக விதிக்கப்பட்டுள்ள சாஸ்த்ரீய வ்ருத்திகளோ, ஆபத்வ்ருத்திகளோ ஒன்றும் கிடைக்காவிடில் எல்லாவித நிஷித்த வ்ருத்திகளையும் கைக்கொள்ளலாம். ஆனால் அப்போதும்

சூத்ர வ்ருத்தியை அவலம்பிக்கக்கூடாது. அதன்றி மற்றவைகளால் ஜீவிக்கலாம்.

தஜ்வி வனகே வ்ராணஸம்ஶயே ॥ உக ॥

ப்ராணதாரணம் செய்ய முடியாதென்று தோன்றியபோது ஜீவனுர்த்தமாகச் சூத்ர வ்ருத்தியையுப் கைக்கொள்ளலாமென்று சில ஆசார்யர்கள் நினைக்கிறார்கள்.

தத்ரண-ுவஸ்ஹராzலகூஸ்ரு நிடஶஹ்ஷ ॥ உச ॥

சூத்ரவ்ருத்தியால் ஜீவிக்க நேர்ந்தபோதிலும், அந்த, சூத்ர வர்ணத்தோடு ஸ்பர்சாதிக் கலப்புக்களும், வெங்காயம் முதலிய அபக்ஷ்ய வஸ்து உபயோகமும் அவச்யம் நிவ்ருத்திக்கத்தக்கது. சூத்ரவ்ருத்தி யென்பதற்காக இச்சைப்படி செய்யக்கூடாது.

வ்ராணஸம்ஶயே வ்ராவழணொzவி ஶஷ்ரூஶஹீத ॥ உரு ॥

அபாயநிலைமை ஏற்பட்டு ப்ராண ஆபத்து நேரும்போல் தோன்றினுல் அச்சமயம் ப்ராம்ஹணனும் ஆயுதம் உபயோகிக்கலாம்.

ஸாஜந்யா வைஶ்யகூஶ ॥ உக ॥

க்ஷத்ரியன், வ்ருத்தியின்றி ஜீவன சங்கடம் ஏற்பட்டால் வைஶ்ய தர்மமான க்ருஷி வாணிஜ்யாதிகளை அவலம்பித்து ஜீவிக்கலாம்.

முதல் ப்ரச்னத்தில் ஏழாவது அத்யாயம் முற்றிற்று.

முதல் ப்ரச்னம் எட்டாவது அத்யாயம்.

ஆள யொகெ யூத்வ தள ஸாஜா வ்ராவழணஶ்ச வஹுஶ்ருதஃ ॥

ராஜ்யத்தில், ராஜாவும், பஹுஶ்ருதனன, அதாவது பலவற்றை அறிந்த, ப்ராம்ஹணனும், ப்ரஜாரக்ஷணமென்கிற வ்ரதத்தைத் தரிப்பவர்கள். அரசன், ரக்ஷணம், தண்டம், இவைகளாலும், ப்ராம்ஹணன் உபதேசாதிகளாலும் ப்ரஜைகளை ஸர்வவித ஆபத்திலிருந்தும் காப்பாற்ற வேண்டிய அதிகாரபுருஷர்களாவார்கள்.

தயொஶ்ச தவி யுயவ்ய உந்வஷ்ய ஜாதவ்ய ஈதவ்ஸஜ்ஜா
நாம யஜ்ந வதந வவ-ுணர்நா ஶயதம் ஜீவதந ॥ உ ॥

நான்கு வித மனிதப்பிரிவுக்கும் (ப்ராம்ஹணாதி நான்கு வர்ணங்களுக்கு) உள் நிலவுள்ள வ்ருக்ஷாதி ஸ்தாவரங்களுக்கும், நடக்கும் பசு முதலியவைகளுக்கும், பறக்கும் பக்ஷிகளுக்கும், ஊர்ந்துசெல்லும் ப்ராணிகளுக்கும், ஆகிய ஸகல சராசர ப்ராணிகளுக்கும் ஜீவனமானது ராஜாவினுடையவும் ப்ராம்ஹணனுடையவும் அதீனமாக இருக்கிறது. அரசன் தண்டநீதி ரக்ஷணாதிகளால் ப்ரஜைகளின் ஜீவன ஹேதுவாகிறான். ப்ராம்ஹணன், யாகம், தபஸ் முதலியவைகளால் தேவர்களை த்ருப்தி செய்து மழை பெய்யச் செய்து ஸஸ்ய ஸம்ருத்தி, அன்ன ஸம்ருத்தியுண்டாகச் செய்வதன் மூலம் தேச ஜனங்களுடைய ஜீவந ஹேதுவாகிறான். நான்கு ஜாதி என்பதில் உள் பிரிவுகளும் சேர்ந்தவை. "ப்ராம்ஹணன் செய்யும் யாகத்தால் ஸ்ரீர்யன் த்ருப்தியடைந்து மழையை வர்ஷிக்கிறான். அதிலிருந்து அந்நம் ஏற்படுகிறது. அந்நத்தால் ப்ரஜைகள் க்ஷேமமடைகிறார்கள்" என்று மனு கூறுகிறார்.

ப்ரஸ்துதியென்றால் தேச அபிவ்ருத்தி. அரசன் ந்யாய நிர்வாஹத்தாலும், ப்ராம்ஹணன், மழை பெய்யச் செய்வது, ரோகம் வராமல் ப்ரார்த்திப்பது ஆகியவைகளாலும் தேசத்தை அபிவ்ருத்தி செய்ய வேண்டும். மேலும், சோராதி பயமின்றி ரக்ஷிப்பதும், ஜாதிக்கலப்பு ஏற்படாமல் கவனிப்பதும், விதி நிஷேத ரூப தர்மங்களை ஜனங்கள் ஒழுங்காகப் பின்பற்றச் செய்வதும், இவ்விருவர்கள் வசம் இருக்கின்றன. அதற்குக் கடமைப் பட்டவர்கள்.

பஹ்வ்ருதன் என்று சொல்லப் பட்டது. அந்தப் பஹ்வ்ருதன் லக்ஷணமென்ன? அவன் மேலே சொல்லப் படுகிறான்.

பஹ்வ்ருதனென்பவன் லோக வ்யவஹாரங்களை அறிந்தவனாயிருக்க வேண்டும். அதாவது தேசத்தில் ஸமூஹ லௌகிக ராஜ்ய நடவடிக்கைகளை அறிந்தவன். அதோடு வேதம், அதன் அர்த்தம், வேதாங்கங்களான மீமாம்ஸாதி சாஸ்த்ரங்களையும் அறிந்திருக்க வேண்டும். அவனையே பஹ்வ்ருதன் என்று சொல்லப் படுகிறது.

வேதசாஸ்த்ர ஸம்பந்தமான உக்தி ப்ரத்யுக்திகள் வாகோவாக்யங்கள். அவைகளையும் இதிஹாஸ புராணதிகளையும் அறிந்து அவைகளில் ஸாமர்த்யமுள்ளவனுயிருப்பவன் "பஹ்வ்ருதன்".

தஹவெகூஹ்ஹ்வ்ருதிஃ ॥ எ ॥

பஹ்வ்ருதன் கீழ்ச்சொன்ன, லோக, வேத வேதாங்காதிகளையே அவலம்பித்து நிற்பவனுயிருப்பதுட்ன் அவைகளின்படியே அநுஷ்டிப்பவனுயுமிருக்க வேண்டும்.

வகவாரிம்ஹ்தம்ஹ்ஹாவெஹ்ஸம்வ்ருதஃ ॥ அ ॥

மேலே சொல்லப் போகிற நாற்பது வைதிக ஸம்ஸ்காரங்களால் ஸம்ஸ்கரிக்கப்பட்டவனுயிருக்க வேண்டும் பஹ்வ்ருதன்.

த்ரிஷ்கூ கூஜ்ஹ்வஹிரதஃ ॥ க ॥

யாகம், அத்யயனம், தானம் என்கிற மூன்று தர்மங்களில் நிலையுள்ளவனுயிருக்கவேண்டும்.

ஷட்வா ॥ சஂ ॥

அல்லது யாகாதி மூன்றுகளுடன் யாஜநம், அத்யாபநம் ப்ரதிக்ரஹம் என்ற மூன்று தர்மங்களையும் சேர்த்து ஆறு கர்மங்களில் நிரதனுயிருக்கவேண்டும்.

ஹாயாவாரிகெஷ்வலிவிநீதஃ ॥ கக ॥

வேதாதிகளுக்கு விரோதமின்றி மனித ஸமூஹ க்ஷேமத்திற்காகச் செய்து கொள்ளப்பட்ட பொதுவ்யவஸ்தை ஸமயம் எனப்படும். அந்த ஸமயம் மூலமாக மனு முதலியவர்கள் நிர்ணயித்த ஆசாரங்கள் ஸமயாசாரங்கள். அவைகளிலுள்ள தர்மங்களில் பஹ்வ்ருதன் நன்கு பயிற்சி செய்யப்பட்டவனுயிருக்க வேண்டும். ஆசார்யாதிகளால் சிக்ஷிக்கப்பட்டவனுயிருக்க வேண்டும்.

ஷஷ்டிஃ வரிஹாபெஹ்ரா ராஜ்ஞா ॥ சஉ ॥

அந்தப் பஹ்வ்ருதனை அரசன் ஆறுவித தண்டனை, அல்லது உபத்ரவத்திலிருந்து விலக்க வேண்டும்.

கவஜ்ரஹ்வஜ்ரஹ்ணஜ்ரஹ்வஹிஷ்யஹ்ரஹ்வரிவாஹ்ரு
ஹ்ரஹ்வரிஹாயஹ்ரஸ்ரெதி ॥ கங ॥

பஹ்வ்ருதன், வதம் செய்யத்தக்கவனல்ல. விலங்கு முதலியவைகளால் கட்டத் தக்கவனன்று. பணத்தை அபஹரித்து,

தண்டிக்கத் தகாதவன். ராஜ்யத்திலிருந்து நிரஸனம் செய்யத் தகாதவன். வீண் தோஷங்கள் சொல்லத் தக்கவனல்ல. த்யாகம் செய்யத்தக்கவனல்ல. அபுத்தி பூர்வமான குற்றமிருப்பினும் பஹுச்ருதனுக்கு மேற்கண்ட சலுகைகளை ராஜா செய்யவேண்டும்.

முஹூர்யாந வாம்ஸவந வீக்ஷணொளுயந ஜாதகர்ம-

நாமகரணாளுவ்ராஹ்மந வளலொவநயநழ் ॥ கச ॥

நாற்பது ஸம்ஸ்காரங்கள் வரிசையாகச் சொல்லப்படுகின்றன. இந்த ஸூத்ரத்தில் க்ருஹ்ய விதியை அநுஸரித்து, கர்ப்பாதானம், பும்ஸவநம், ஸீமந்தம், ஜாதகர்மம், நாமகரணம், அந்நப்ராசனம், சௌளம், உபநயநம் என்ற எட்டு ஸம்ஸ்கார கர்மாக்கள் செய்யப் படவேண்டியவையாகக் காட்டப்பட்டன.

வகுாரி வெஉவ்ரதாநி ॥ கடு ॥

நான்கு வேதங்களுக்குமாக நான்கு வேத வ்ரதங்களும் ஸம்ஸ்காரங்களாக விதிக்கப்பட்டுள்ளன.

ஸ்நாநம் ஸஹயதர்மிணீஸம்பொகம் ॥ ககூ ॥

ஸமாவர்த்தனமும், தர்மாசரணத்திற்கேற்ற பத்நியை விவாஹம் செய்து கொள்வதும் ஸம்ஸ்காரமாகும்.

வஞ்ஞாநாம யஜ்ஞாநாந்ருஷ்யாநம் தெவ விதர்ய ந்ருஷ்ய

ஸ்ருத வ்யாழணாழ் ॥ கள ॥

தேவ, பித்ரு, மநுஷ்ய, பூத, ப்ரம்ஹ என்கிற ஐந்து யக்ஞங்களையும் அநுஷ்டிக்க வேண்டும். இவைகளுமே ஸம்ஸ்காரங்கள்.

வநதெஷாம் வ ॥ கஅ ॥

மேலே சொல்லப்படுகிற ஸம்ஸ்காரங்களையும் அநுஷ்டிக்க வேண்டும்.

கூஷ்டகா வாவ-ணீ ஸ்ராஜம் ஸ்ராவண்யாக்ரஹாயணீ

தைத்ரீ சூர்வ-ஜீதி ஸவ தாகயஜ்ஞஸம்ஸ்தாஃ ॥ ககூ ॥

அஷ்டகை, ஸ்தாலீபாகம், மாஸிச்ராத்தம், ச்ராவணீ என்கிற ஸர்ப்பபலி, ஆக்ரஹாயணீ என்கிற ஸர்ப்பபலி உத்ஸர்கம், சைத்ரீ என்கிற ஈசானபலி, ஆச்வயுஜீ என்கிற சூலகவகர்ம, என்கிற பாகயக்ஞ ஸம்ஸ்தை என்ற பெயருள்ள ஏழுகர்மாக்களும் ஸம்ஸ்கார கர்மாக்கள்.

சுஹ்ருயைபஹிஹோத்ரம் உபஸ்வகணபிண்டபிதாயஜ்ஞ
ணம் சாதுர்மாஸ்யானி நிரூடபசுபந்தஸ்ஸௌத்ராமணீ
ணீதி ஸப்த ஹவியஜ்ஞஸம்ஸ்தாஃ ॥ உ0 ॥ —:

அக்ன்யாதானம், அக்நிஹோத்ரம், தர்சபூர்ணமாஸங்கள், ஆக்ரயணம், சாதுர்மாஸ்யங்கள், நிரூடபசுபந்தர், ஸௌத்ராமணீ என்ற பெயருள்ள ஏழு ஹவிர்யஜ்ஞங்களும் ஸம்ஸ்காரகர்மாக்கள்.

சுஹிஷ்டாதோऽதஹிஷ்டாத உக்த்ய ஷோடஶீவாஜபேயோ
ऽதிராத்ரோऽப்தோர்யாம உதி ஸப்த ஸோமஸம்ஸ்தாஃ ॥ உக ॥

அக்நிஷ்டோமம், அத்யக்நிஷ்டோமம், உக்த்யம், ஷோடசீ, வாஜபேயம், அதிராத்ரம், அப்தோர்யாமம் என்ற பெயருள்ள ஏழு ஸோமஸம்ஸ்தாகர்மாக்களும் ஸம்ஸ்காரங்கள்.

ஏதைரேதே ஸகுணாஸ்ஸம்ஸ்காராஃ ॥ உஉ ॥

இவ்வாறுகக் கீழ்ச் சொல்லியவைகள் நாற்பது ஸம்ஸ்காரங்கள் எனப்படுகின்றன.

சுயாஷ்டாவாத்மகுணாஃ ॥ உங ॥

இனி எட்டுவித ஆத்மகுணங்கள் சொல்லப்படுகின்றன.

தயா ஸர்வபூதேஷு க்ஷாந்திரநஸூயா ஶௌசமநாயாஸோ
ऽமங்களமகார்ப்பண்யமஸ்ப்ருஹேதி ॥ உச ॥

ஸர்வப் பிராணிகளிடமும் தயை, க்ஷாந்தி, அநஸூயை, சௌசம், அநாயாஸம், மங்களம், அகார்ப்பண்யம், அஸ்ப்ருஹா ஆகியவை எட்டுவித ஆத்மகுணங்கள்.

தயை:— தன்னைப் போல் எல்லா ப்ராணிகளிடமும் ஹிதமாயும் க்ஷேமமாயும் எப்போதும் ஸந்தோஷத்துடனிருப்பது.

க்ஷாந்தி:— க்ஷமா:— பிறன் கோபித்தாலும், நிந்தித்தாலும் பதில் கோபிக்காமலும் அடிக்காமலும் வாக் மனஸ் சரீரங்களால் பொறுத்துக் கொள்வது.

அநஸூயா:— ஒருவன் தர்மார்த்தகாமமோக்ஷாதி புருஷார்த்தங்களில் உயர்ந்தவனாயிருந்தால், அவனைப் பார்த்து த்வேஷம் கொள்ளாமலிருப்பது.

சௌசம்:— சுத்தி. பணத்தில் சுத்தி, மனச் சுத்தி, வாக் சுத்தி, சரீர சுத்தியென்று சொல்லப்படுவது.

அநாயாஸ: :— எந்தக் கார்யத்தை ஆரம்பிக்கையில் கஷ்டமும் ச்ரமமும் அதிகமாக ஏற்படுகிறதோ அந்தக் கார்யத்தை வர்ஜிப்பது.

மங்களம்:— ப்ரசஸ்தமான ஆசாரங்களை அவலம்பித்து அச் லீலங்களை விலக்குவது.

அகார்ப்பண்யம்:— ஆபத்காலத்திலும், கஷ்ட தசையிலும் தீனனுயிராமல், தன் சக்திக்கேற்ப த்ரவ்யாதிகளைப் பிரித்து உப கரிப்பது.

அஸ்ப்ருஹா:— ஆசையின்மை. பிறருடைய த்ரவ்யத்தில் ஆஸ்தை வைப்பதை விட்டு, எப்போதும் ஸந்துஷ்டியுடனிருப்பது. அஸந்தோஷத்தை விலக்குவது.

யஏஷைதே சகுவாரிம்ஶதம்ஸம்ஸ்காராஃ நசாத்மகுணாஃ நஸ ப்ரஹ்மணஃ ஸாயுஜ்யம் ஸாலொக்யம் ஜயதி ॥

எவனுக்குக் கீழ்ச்சொல்லிய நாற்பது வைதிக ஸம்ஸ்காரங்கள் மட்டும் இருக்கின்றனவோ, இந்த எட்டு ஆத்மகுணங்கள் இல்லை யோ, அவன் ப்ரம்ஹத்தின் ஸாயுஜ்யத்தையோ, ஸாலோக்யத்தை யோ அடையமாட்டான். ஆத்ம குணங்கள் அவ்வளவு உயர்ந்தவை.

யஸ்ய தை வை ஸம்ஸ்காராணா சகுஶ்சத்வாரிம்ஶதா வாத்மகுணாஃ சுய ஸ ப்ரஹ்மணஸ்ஸாயுஜ்யம் ஸாலொக்யம் ஜயதி ஜயதி ॥ உசு ॥

எவனுக்கு மேற்கண்ட வைதிக ஸம்ஸ்காரங்கள் முழுவது மில்லாமல் ஏகதேச மட்டுமிருந்தபோதிலும், ஆத்மகுணங்கள் எட்டும் இருக்கின்றனவோ அவன் ப்ரம்ஹஸாயுஜ்ய, ஸாலோக்யாதி களைப் பெறுவான்.

முதல் ப்ரஶ்னத்தில் எட்டாவது அத்யாயம் முற்றிற்று.

முதல் ப்ரஶ்னம் ஒன்பதாவது அத்யாயம்.

ஸ வியிவமுகும் ஹாகுவா ஸாயம்ஶமஶ்நியாத்ஸாயம்ஶமஶ்நியாத் ப்ராதர்ப்ராதர்ப்ரஜாபதிர்ப்ரஜா ஸ்ருஜ்யாதா ப்ரஜாஸ்ருஜதே ॥ க ॥

கீழ்ச்சொன்ன ப்ராம்ஹணனும், க்ஷத்ரியனும் அத்யயனம் முடிந்த பின் சாஸ்த்ர விதிப்படி ஸ்நானம், அதாவது வ்ரதங்

களுடன் ஸமாவர்த்தனம் செய்து, விவாஹ மூலம் பார்யையை அடைந்து, சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட க்ருஹஸ்த தர்மங்களை அநுஷ்டித்து வருகையில் இனி மேலே சொல்லப்போகிற நியமங்களையும் ஆசரிக்கவேண்டும்.

ஸ்நாதகஃ ॥ உ ॥

க்ருஹஸ்தனுகாமல் ஸ்நாதகனுக இருப்பவனும் மேலே சொல்லப்படுகிற தர்மங்களை அநுஷ்டிக்கவும்.

நித்யம் ஶுசிஃ ஸுகந்திஃ ஸ்நாநஶீலஃ ॥ ஊ ॥

எப்போதும் சுத்தனுகவே இருக்கவேண்டும். சந்தனாதிகளால் நல்ல வாஸனையுடையவனும், ஸ்நான சீலனுயுமிருக்கவும். ஸுகந்திஃ என்பதற்கு நல்ல சீலமுடையவன் என்றும் ஓர் அர்த்தமுண்டு.

ஸதி விஹவே ந ஜீணஃஶவஃவாஸாஃ ஸ்யாத் ॥ ச ॥

கிழிந்ததோ, அழுக்கோ உள்ள வஸ்த்ரத்தைத் தரிக்கலாகாது. ஆனல் வேறு வஸ்த்ர ஸௌகர்யமிருந்தால்தான்.

ந ரக்தஶுக்லவாஸாஃ நாத்யுச்ரிதம் வாஹோ விஹ்ரியாத் ॥ டு ॥

சிவப்புச் சாயமுள்ள வஸ்த்ரத்தையும், சக்திக்கு மீறிய விலையுள்ளதையும், பிறர் உடுத்தியதையும் தரிக்கக்கூடாது.

ந ஸ்ரஜமாவாநஹ்யேத் ॥ கூ ॥

புஷ்பமாலை, பாதரக்ஷை இவைகளையும் பிறர் உபயோகித்தவற்றை உபயோகிக்கக்கூடாது.

நிர்ணிக்தஶுஷ்கஸ்ய ॥ எ ॥

வேறு வஸ்த்ரமில்லாமல் பிறருடையதையே தரிக்க நேர்ந்தால், அதைச் செவிட்டு மண் கலந்த ஜலத்தால் நன்கு துவைத்துப் பிறகு தரிக்கவும். பாதரக்ஷைக்கும் இப்படியே.

ந ரக்தஶுஷ்கரூக்ஷாணி ॥ அ ॥

அகாரணமாக நகம், தாடி மீசைகள் வளர்க்கக்கூடாது. கர்ப்ப, விவாஹ, உபநயநாதி தீக்ஷை நிமித்தம் தவிர.

நாக்நிமுதகம் யாமயேத் ॥ கூ ॥

அக்நி, ஜலம் இரண்டையும் ஒரே காலத்தில் சேர்த்து வைத்துக்கொள்ளக்கூடாது.

நாஞ்ஜலிநா வபிவேத் ॥ கம் ॥

தீர்த்தம், பால் முதலிய பானீயங்களை அஞ்ஜலியால் (இரு கைகள்) பானம் செய்யக்கூடாது.

ந திஷ்டன்னப்ஸுதோயகேநாऽऽசாமேத் ॥ கக ॥

நதீ, தடாகாதிகளில்லாமல் க்ருஹாதிகளில் எடுத்து வைக்கப் பட்ட ஜலத்தை இடது கையால் விட்டுக்கொண்டு ஆசமனம் செய்கையில் நின்றுகொண்டு செய்யக்கூடாது. உட்கார்ந்தே செய்யவும். நதீ தடாகாதிகளில் முழங்கால் அளவுக்குக் குறையாத ஜலத்தில் நின்றுகொண்டு செய்யலாம்.

ந ஶூத்ரஶூத்ரைகவாண்யாவஜுஹுயாந் ॥ கஉ ॥

சூத்ரன், அசுத்தன் இவர்களால் விடப்பட்ட ஜலத்தா லும், ஒரு கையால் விடப்பட்டதாலும் ஆசமனம் கூடாது. தானுகவே இடது கையால் ஜலம் விட்டுக்கொண்டு ஆசமனம் செய்வது சிஷ்டாசாரமாயிருப்பதால் அதை இது பாதிக்காது.

ந வாயவக்நிப்ராஹ்மணாவைஷ்ணவம் தீர்த்தம் தைவபைத்ர்யம் வா உபஹதவதுன்மேஷாமந்யாநி வ்யவஹாரயேத் ॥ கங ॥

வாயு, அக்நி, ப்ராம்ஹணன், ஸ்ரீர்யன், தீர்த்தம், தேவ பிம்பம், பசுமாடு இவைகளுக்கு எதிரிலோ, இவைகளைப் பார்த்துக் கொண்டபடியோ மூத்ர, புரீஷவிஸர்ஜனம், எச்சில் துப்பல் முதலிய அசுத்த கார்யங்களைச் செய்யக்கூடாது.

நைதாந் தைவதாந் ப்ரதி வாஸ்ய ப்ரஸாரயேத் ॥ கச ॥

மேற்சொன்ன தேவதைகளுக்கு எதிராகக் கால்களை நீட்டக் கூடாது. ஒரு காலையும் நீட்டக்கூடாது. இங்கு ப்ராம்ஹணனையும் பசுவையும்கூட, தேவதாபதத்தால் நிர்த்தேசிக்கப்பட்டுள்ளது.

ந வணபலாஷாஶ்மபிர் உபதவ்யாவஸுஷ்கணம் கூயப்ராஸ் ॥ கஞ ॥

இலைகள், கல்லிகள், கற்கள் இவைகளால் மல மூத்ரங்களைத் துடைப்பது கூடாது.

ந லோஹ்ம கோம நவ தாஷ கவாயாஸ்யாந்யயிதிஷ்டேத் ॥ கஞ ॥

சாம்பல், கோசம், நகம், உமி, ஓட்டுப்பாளம், மல மூத்ராதி அசுத்தங்கள் இவைகளை மிதிக்கக்கூடாது.

ந ஜ்ஞாஸ்வ்யாஜ்ஞிகை: ஸஹ ஸம்ஹாஷேத ॥ கள ॥

வர்ணச்ரமநியமமின்றி யிருப்பவனும், கோமாம்ஸ பக்ஷியும் ம்லேச்சன். அவனுடனும், நித்யமான ஸந்த்யாதி கர்மாக்களைச் செய்யாத அசுத்தர்களுடனும், பதிதர்களுடனும் ஸம்பாஷணம் கூடாது. மார்க்கப்ரயாணம் முதலிய அவஸர ஸந்தர்ப்பம் நீங்கலாக.

ஸம்ஹாஷ்ய வ்ரூணூயாதோ ஸநவாயுர்யாயேஷு ॥ கஅ ॥

கார்ய நிர்ப்பந்த வசமாக அவர்களுடன் பேச நேர்ந்தால் பேசிவிட்டுப் புண்யஶீலர்களான வஸிஷ்டாதி மஹான்களை மனதால் த்யானிக்கவேண்டும். இது ப்ராயஶ்சித்தம்.

ஹ்ராவஜ்ஞை.ந வா ஸஹ ஸம்ஹாஷேத ॥ ககூ ॥

புண்யஶீலனை ஸாதாரண ப்ராம்ஹணனுடனாவது ஸம்பாஷிக்கவும்.

கூயேநாம் யேநாஹவ்ருதி ஹ்ருயாஷு ॥ உ0 ॥

பால் கறக்காத பசுவை "தேனுபவ்யா" என்று கூறவும். அதேனு என்று சொல்லக்கூடாது. பால் கறந்து பிறகு நின்று போன பசுவை நிந்திக்கக்கூடாதென்று கருத்து.

கூஹ்ரூம் ஹ்ரூஜிதி ॥ உக ॥

அச்லீலமான, அபத்ரமான வஸ்துவையும் "பத்ரம்" என்றே சொல்லவும்.

கூவாஷ்ம் ஹராஷிதி ஹ்ருயாஷு ॥ உஉ ॥

கபாலத்தை (மண்டையோடு) நேரிடச் சொல்லாமல், "பகாலம்" என்று சொல்லவும்.

ஶிஞ்யநாரிதீஜ்யநாஶ் ॥ உங ॥

இந்த்ரதனுஸ் என்கிற வானவில்லை, "மணிதனுஸ்" என்று பேசவும்.

ஹாம் யயஜீம் வாஹ்ரைஷ நாவக்ஷீத ॥ உச ॥

கறக்குமுன், கன்று பசுவை ஊட்டினால் அதைப் பிறனிடமும் யஜமானனிடமும் சொல்லக்கூடாது. பிறர் அறியாமல் கன்று ஊட்டும்போது இந்த விதி.

ந வைநாம் வாரயேத ॥ உரு ॥

தானும் அதைத் தடுக்கக்கூடாது.

நஶியுஂநீஹ்ரகூவா ஶளஹம் வ்ரூதி விஜ்ஞாயதே ॥ உசு ॥

ஸ்த்ரீயுடன் ஸம்ஸர்க்கம் செய்தவுடனேயே சுத்தி செய்து கொள்ளவும். அதற்கு விளம்பிக்கக் கூடாது.

நஹ்ய தஷ்டிநு ஶயநே ஷ்வாஜ்யாயஶ்சீயீத ॥ உள ॥

ஸ்த்ரீ புருஷர்கள் ஸம்யோகம் செய்த படுக்கையில் உட்கார்ந்து இரவில் வேதாத்யயனம் செய்யக்கூடாது.

நாவாஸ்ராத்ரூஶ்சீத்ய வ்ரூநீ வ்ரூதிஹஂவிஶ்சு ॥ உஅ ॥

அபராத்ரியில், அதாவது விடியற் காலையில், வேதாத்யயனம் செய்துவிட்டு மறுபடி படுத்துத் தூங்கக்கூடாது.

நாகூவாம நாரீஜிஹ்ரஶியேசு ॥ உக ॥

ரோகாதிகளால் அசக்தையான ஸ்த்ரீயை காம இச்சையால் நிர்ப்பந்திக்கக் கூடாது.

நரஜஷ்வலாஂ ॥ ஈ0 ॥

ரஜஸ்வலையாயிருக்குப் ஸ்த்ரீயையும் காம இச்சையால் அணுகக் கூடாது.

நவைநாஂ ஶ்ஶிஷ்யாசு நகுர்யாத் ॥ஈக॥

ரஜஸ்வலையை காமத்தால் ஆலிங்கனமும் செய்யலாகாது. கந்யகா ஸ்த்ரீயையும் ஆலிங்கனம் செய்யக் கூடாது.

கூஹ்ரூவொவயஶ்ச விஶ்ரூஹ்ரூவாஶ் வஹிர்மூலோஷ்ய யாரூண வாவீயஸாவவைவ நாயூயாஸஹ் ஸோஜநா ஞ்ஜைவிவக்ஷண கூஷாரவ்ரூவெஶ்ச வாஶ்வாஶ்யாவநாவஸ்ஜ் ஷ்ஸோஜந நஜீவாஹ்ரூதாரண வ்ரூக்ஷவிஷிசாரொஹணாவ ரொஹணவ்ரூணவ்ரூயவநாஜி வஜ்ரூபெசு ॥ ஈஉ ॥

கீழ்க்கண்ட கார்யங்களை வர்ஜிக்கவும். அக்நியை வாயால் ஊதி ஜ்வலிக்கச் செய்வது, வாக்குவாதங்கள், வெளிப் படையாகச் சந்தனபுஷ்பம் தரித்தல், அசுத்த காஷ்டாதிகளால் சரீரத்தைச் சொரிந்து கொள்ளுதல், பார்யையுடன் சேர்ந்து சாப்பிடுவது, பார்யை எண்ணெய்தேய்த்துக்கொள்ளும்போது அவளைப்பார்ப்பது, கெட்ட வழியால் தேவாலய, க்ருஹாதிகளில் ப்ரவேசித்தல், ஒரு காலால் மற்றொரு காலைத் தேய்த்து அலம்புதல், கட்டில் முதலிய ஆஸநங்களிலிருந்து புஜிப்பது, அவைகளில் வைத்துப் புஜிப்பது,

கையால் நீந்தி நதியைத் தாண்டுவது, வ்ருக்ஷத்தில் ஏறுவது, விஷமத்தில் அதாவது ஆழமுள்ள கிணற்றில் இறங்குவது, ப்ராணோபரோதமுண்டாகக்கூடிய செய்கைகள், இவைகளை விலக்கவும்.

நவநிஷ்டாம் நாவமீரோஹேத் ॥ ஈஈ ॥

கரைக்குச் செல்வதில் சக்தியில்லாததாக ஸங்கேதஹிக்கப்படும் ஓடத்தில் ஏறக் கூடாது.

ஸவஸ்த வனவாஸ்தாநம் மொவாயேத் ॥ ஈச ॥

பலவித, எல்லாவித உபாயங்களாலும் (தன்னை) ஆத்மாவை ரக்ஷித்துக் கொள்ளவும்.

ந வ்ரூவ்யாத் ஸிரோ ஹநி வயஸ்டேத் ॥ ஈடு ॥

பகலில் சிரஸ்ஸை மூடிக் கொண்டு நடமாடக் கூடாது. மழை வெயிலுக்காக மட்டும் மூடலாம்.

வ்ரூவ்யாத் தூராத்ரள ॥ ஈக ॥

இரவில் சிரஸ்ஸை வஸ்த்ராதிகளால் மூடிக்கொண்டுதான் நடமாட வேண்டும்.

உத்தராஸ்ய ஏ ॥ ஈள ॥

மூத்ரம், உச்சாரமென்கிற புரீஷகார்யம் இவைகளிலும் சிரஸ்ஸை மூடிக் கொள்ளவும்.

நஹ்யாவநஸ்ய ॥ ஈஅ ॥

மல மூத்ர கார்யங்களை, புல் முதலியவைகளால் மூடாத பூமியில் செய்யக் கூடாது. மூடியே செய்ய வேண்டும்.

நாராஸ்ராவஸ்யாஸ் ॥ ஈக ॥

க்ருஹத்திற்கு ஸமீபமான இடத்திலும் மூத்ர புரீஷங்களை விஸர்ஜனம் செய்யக் கூடாது.

ந ஸஸ்ய கரீஷ கர்ஷ ஸ்யா வயி காஷ்ட்ய ॥ சo ॥

சாம்பல், கோமயம், உழுத வயல், ஜனங்களுக்கு உபயோகப்படும் நிழல், வழி, அழகிய இடம் இவைகளிலும் மூத்ர புரீஷ கார்யம் செய்யக் கூடாது.

உஷ உத்தவ்ரீஷ தர்ஹிவா கர்யாத்ஸ்வஸ்த ॥ சக ॥

மூத்ரம் புரீஷம் இரண்டையும் பகலில் வடக்கு முகமாயிருந்து விஸர்ஜனம் செய்யவும்.

ஸந்த்யயோஸ்து ॥ சஉ ॥

ஸந்த்யா காலங்களிலும் (காலை மாலை) வடக்கு முகமாயிருந்து செய்யவும்.

ராத்ரௌ உத்தராஸ்யஃ ॥ சஊ ॥

ராத்ரியில் இவ்விரு கார்யங்களையும் தெற்கு முகமாயிருந்து செய்யவும்.

பாலாஸமாஸநம் பாதுகே உதகும்பாவஸதிர் உபவீதம் ॥ சச ॥

பலாசமரத்தால் (புரசு) செய்யப்பட்ட ஆஸனத்தையும், கால் கட்டையையும், பல் விளக்கும் குச்சியையும் விலக்கவும். அவைகளைப் பலாசமரத்தால் செய்யக் கூடாது என்றபடி.

ஹோபாந்தர்தாஸநாஸிவாதநதர்ஷாராந் வர்ஜயேத் ॥ சடு ॥

காலில் செருப்பு, பாதரக்ஷை, கட்டை முதலியவைகளைத் தரித்த படியே, ஆஸநத்தில் உட்காருவதோ, ஆசார்யாதிகளை அபிவாதனம் செய்வதோ, தேவதைகளை நமஸ்கரிப்பதோ கூடாது. அப்படிச் செய்வதை வர்ஜிக்கவும்.

நவ ஏவ பூர்ணே ஜுஹுயாத் நாவபரார்தே நவயாந் கூபபூர்ணே
யதாஸக்தி யதாபூதம் ॥ சஎ ॥

காலை, மத்யாஹ்னம், மாலை இக்காலங்களில் வீணுகப் பொழுது போக்கக் கூடாது. யதாசக்தி தர்ம, அர்த்த, காமாதிகளால் அந்தப் பொழுதுகளை ஸபலமாகச் செய்ய வேண்டும்.

தேஷு தர்மயதோ பூயிஷ்டம் ॥ சள ॥

மேற்சொன்ன தர்ம, அர்த்த, காமங்களில் தர்மத்தையே ப்ரதானமாகக் கொண்டு நடக்கவும். மற்ற இரண்டும் முக்யமல்ல.

ந நக்நாம் பராயோஷித ஈக்ஷேத ॥ சஅ ॥

பிற ஸ்த்ரீகள் எவரையும் நக்நையாயிருக்கும் (வஸ்த்ரமில்லாத) ஸமயத்தில் பார்க்கலாகாது.

ந வஹேத் ஸஸநகோகஷ்டம் ॥ சகூ ॥

உட்காரும் ஆஸநத்தைக் காலால் இழுக்கக் கூடாது, தன் ஸமீபத்திற்கு.

ந ஶிஶ்னோதர வாணி வாஜ வாகூ ஶ்ரோத்ரசக்ஷுர்க்⁻ராணாநி கூ⁻பூர்ணாநி ॥

சிச்நம், வயிறு, கை, கால், வாய், கண், இவைகள் வசமாகி, சாபலத்தை அடையக்கூடாது. அகாலத்தில் மைதுனேச்சை சிச்நசாபலம். எப்போதும் ஏதாவது உதரத்திற்காகச் சாப்பிடுவது உதர சாபலம். அநாவச்யகமான சில்பம் எழுத ஆசைப் படுவது கைசாபலம். வீணாக ஊர்சுற்றுவது பாத சாபலம். அவச்யமற்ற விஷயம் பேசுவது வாக் சாபலம். நாட்யாதி தர்சனம் கண் சாபலம். இவைகளை விடவும்.

ஹொஜ ஹொஜ வியெவ நவிஜூ நாவஹ்வொடூ நாநீ நாக ஹ்ராஶ கூ⁻யபூர்ஶ ॥ நுக ॥

வெட்டுவது, பிளப்பது, கீறுவது, விமர்த்தனம் (சூர்ணம்) செய்வது, விரல்களைச் சொடுக்குவது ஆகியவைகளை அகாரணமாகச் செய்யக் கூடாது.

நொவாரி வத்ஸதந்தீம் மஹ்ஸ ॥ நுஉ ॥

பசுவின் கன்று கட்டுவதற்காக உள்ள கயிறு மீது நடக்கக் கூடாது. இது மாடுகளுக்கும் பொருந்தும்.

ந கூ⁻ஶ்மஶாகூ⁻ஶ்வஹ்யாஶ ॥ நுக ॥

ஒரு குலத்திலிருந்து மற்றொரு குலத்திற்குப் போகிறவனாக இருக்கக் கூடாது. ஸ்வீகாராதி வழிகளால்.

ந யஜ்ஞாய்வ்ரதோ மஹ்ஸ ॥ நுச ॥

வரணம் செய்யாதிருக்கையில் ஆர்த்விஜ்ய ஆசையால் யக்ஞத்திற்குப் போகக் கூடாது.

ஊர்தூநாப தூ⁻ காஶே ॥ நுந ॥

வாணமில்லா விட்டாலும் யாகதர்சனத்திற்காக இஷ்டப்படி போகலாம். தடையில்லை.

ந லக்ஷாந்⁻தஹ்ஜ லக்ஷயேத ॥ நுக ॥

அவல் முதலிய பக்ஷ்யங்களை மடியில் வைத்துக் கொண்டு சாப்பிடக் கூடாது.

ந ராத்ர்யா ஹ்ருஷ்யாஹ்ருதே ॥ நுள ॥

இரவில் வேலைக்காரனால் கொண்டு வரப்பட்ட எந்த வஸ்துவையும் புஜிக்கலாகாது.

உஷ்ணதஷ்டஹ விலயந விண்ணாக யசித வ்ருஷ்ணதீநி வ
ஸூதவீயஸ்ணி நாஸ்ரீயாக ॥ ருஅ ॥

ஸாரத்தை எடுத்த வஸ்துக்கள், நெய் காய்ச்சிய கசண்டு, எள்ளு முதலியவைகளின் பிண்ணாக்கு, ஜலம் விடாமல் கடைந்த தயிர் முதலியவை வீர்யமற்றவை. அவைகளைச் சாப்பிடக் கூடாது. ஜலம் சேர்ந்து கடைந்த தயிர் மோர் இவைக்கு நிஷேதமில்லை. சிஷ்டாசாரமுமுண்டு.

ஸாயம்ப்ராதஸ்ஸுஹிவஜித உநிஷந்நு ஸ்ஜீத ॥ ருக ॥

அந்நத்தை ராத்திரி பகல் இருவேளைகளில் புஜிக்கவும். நடுவில் புஜிக்கலாகாது. அந்த அந்நத்தைப் பஹுமானித்தும் நிந்திக்காமலும் புஜிக்கவும்.

ந கஷாஹிக ராத்ர நக்நஃ ஸ்வபெக ॥ கo ॥

ஒரு போதும் இரவில் நக்நனாக (வஸ்த்ரமில்லாமல்) தூங்கக் கூடாது. பகலில் நிச்சயமாக நித்ரை கூடாது. இரவில் நேராக் கூடுமாகையால் நிஷேதம்.

ஸ்நாயாத் ॥ கக ॥

நக்நனாக ஸ்நானம் செய்யக் கூடாது. வஸ்த்ரத்துடனேயே செய்யவும்.

யஷ்டாதவஷ்டௌ வ்ருஷாஃ ஸர்வதீதாஃ ஷண்ட மோஹ மோஹ
ஷ வியஸ்தா வெஷ்டிஷ சூவக்ஷத்ர தக ஸர்வமேக ॥கூ॥

மேலும், எந்த வேறு பல தர்மங்களையும், ஜிதேந்த்ரியர்களும், வயது சென்ற வ்ருத்தர்களும், சாஸ்த்ர அநுஷ்டானங்களில் நல்ல சிக்ஷை பெற்றவர்களும், டம்பம், லோபம், மோஹம், மதம் முதலிய துர்க்குணங்களற்றவர்களுமான பெரியோர்கள் வேத வேதார்த்தக் ஞான முள்ளவர்கள் நியமிக்கிறார்களோ அந்தத் தர்மங்களையும் அநுஷ்டிக்கவேண்டும்.

யொகக்ஷேமாயாத்மநோ ராஜ்ஞோ நிவேதயெக ॥ கூக ॥

குடும்ப யோக க்ஷேமார்த்த ஸௌகர்யத்திற்காக அரசனிடம் போய் தெரிவிக்கவும் இல்லாததைப் பெறுவது யோகம். இருப்பதைக் காப்பது க்ஷேமம்.

நாந்ய உந்ய்த்ர ஔவஹ்ரார்யாத்ஸ்வகெஷ்வஃ ॥ கூச ॥

ராஜாவைத் தவிர வேறு யாரிடமும் குடும்ப கார்யார்த்தமாகப்

போகக் கூடாது. ஆனல் தேவர்கள், பிதா முதலிய குருக்கள், தார்மிகன் இவர்களைத் தவிர.

ஸுஶ்ரூஷேதையொஷு யவஸ கூஶ ஸாயைர்வ நிஷ்ட்ரண
ஸாயஂஜநஸ்ஸுயிஷ்ட ஸநஸவஸஸ்ரஸ்ஸுயாதுகாயிஷ்டம் நிகே
தந ஸாவஸிதஂயதேத ॥ கூடு ॥

ப்ராம்ஹணர்கள் வஸிக்கத் தக்க இடமாவது. நிரம்ப காஷ்டங்கள், சுத்த தீர்த்தம், புல், தர்ப்பம், புஷ்பம் இவையுள்ளதாயும், வெளியில் ஸஞ்சரிக்கத்தக்க, அதாவது உலாவ, நல்ல இடவெளியுள்ளதாயும், ஆர்ய ஜநங்களால் நிரம்பியதும், சோம்பேறியல்லாதவர்கள் நிறைந்ததும், தார்மிகர்களால் வஸிக்கப் பெற்றதுமான வாஸஸ்தானத்தை அடைந்து வஸிக்க முயற்சிக்கவும்.

ஸுஶ்ரூஷேஜூஷ்டரூதேவதாயதநவதஂவஷ்யம் ஸுஶ்ரூஷேணாஸ
வதேதுத ॥ கூகூ ॥

ச்ரேஷ்டமான வஸ்து, மங்களகர வஸ்து, தேவாலயம், நாலு சந்து கூடுமிடம் இவைகளை ப்ரதக்ஷிணமாகப் போக வேண்டும்.

உநவா வா தத்ஸுஶ்ரூஷேந்நவாஸயேதஸ்ரவதத்ஸுஃ ॥ கூள ॥

அநுஷ்டிக்க முடியாத ஆபத்காலத்தில் எல்லா ஆசாரங்களையும் மானஸிகமாகவாவது அநுஸரிக்கவும். இது ஆபத்கல்பம்.

ஸத்யஸீலா ॥ கூஅ ॥

ஸத்யம் பேசுவதையே தர்மமாக (சீலமாக) உடையவனுயிருக்க வேண்டும்.

ஸுயுக்தாஃ ॥ கூகூ ॥

ஆர்யஜாதியார்களுக்குச் சொல்லப்பட்ட வ்ருத்தம், நடவடிக்கையுள்ளவனுயிருக்கவும். அல்லது ஆர்யமான வ்ருத்தம்.

ஶிஷ்டாஶ்சாவகஃ ॥ எ0 ॥

சிஷ்டர்களுக்கே அத்யயனம் சொல்லிவைக்கிறவனுயிருக்க வேண்டும்.

ஸர்வஶிஷ்டஃ ॥ எக ॥

எல்லாவித சாஸ்த்ர விஹித ஸௌசங்களாலும் சிறந்தவனுயிருக்க வேண்டும்.

த்ரயீநிரதஶ்சாகு ॥ எஉ ॥

வேதாப்யாஸ நிரதனுயிருக்கவும்.

நித்யஹிம்ஸ்ரோ ஸ்யாத் ஸ்ருதிஸ்மார்த ஸ்நாதகஸீலஸ்ச ॥ எந ॥

எப்போதும் ஹிம்ஸையை வர்ஜித்தவனுயிருக்கவும். அபரா தத்தை ஸஹிப்பவனுயும், உறுதியாகக் கார்யம் செய்பவனுயும், இந்த்ரிய நிக்ரஹமுள்ளவனுயும், தான சீலனுயுமிருக்க வேண்டும்.

வனவாஸாத்ரோ மாதாபித்ரோர் வ்யபேக்ஷ்யாசார்யாம்ஸ்ச ஸ்வாந் ஜ்ஞாதீந் ஹித்வா ஸோக்ஷயிஷ்ணு ஸ்தாதகஃ ஸ்வர்க ஸ்வர்கதே ந ஸ்வர்கதே ॥ எச ॥

இவ்வாறு ஆசாரமுள்ள ஸ்நாதகன் தனது மூன்பந்துக்களான மாதா பிதாக்களையும், பின்பந்துக்களான புத்ராதிகளையும் பாபங்களி லிருந்து விடுவித்துக் கொண்டு ஸாச்வதமாக ப்ரம்ஹ லோகத்தி லிருந்து நழுவுவதில்லை. இரட்டிப்பு ப்ரச்ன ஸமாப்தியைக் குறிக் கிறது.

முதல் ப்ரச்னத்தில் ஒன்பதாவது அத்யாயம் முற்றிற்று.

முதல் ப்ரச்னம் முற்றிற்று.

இரண்டாவது ப்ரச்னம் முதல் அத்யாயம்.

த்விஜாதீநாமத்யயந மிஜ்யா தாநம் ॥ க ॥

இனி வர்ணதர்மங்கள் சொல்லப்படுகின்றன. த்விஜாதிகளுக்கு, அதாவது ப்ராம்ஹண க்ஷத்ரிய வைச்யர்களுக்கு, அத்யயனம் யாகம், தானம் என்கிற மூன்று தர்மங்கள் நியதங்கள்.

ப்ராஹ்மணஸ்யாயிகாஃ ப்ரவசந யாஜந ப்ரதிக்ரஹாஃ ॥உ॥

ப்ராம்ஹணனுக்கு மாத்திரம், அத்யயனம் செய்துவைத்தல், யாகம்செய்துவைத்தல், ப்ரதிக்ரஹம்செய்தல் (தானங்களைப்பெறு வது) இவைகள் மூன்றும் அதிகப்படியான தர்மங்கள். ஆக ஆறு.

ப்ரதிக்ரஹோ நித்யஸ்து ॥ ந ॥

முதலில் சொன்ன அத்யயனாதிகளில் நியமமுண்டு. அதாவது அவை அவச்யமாகச் செய்யத்தக்க நித்ய தர்மங்கள். இரண்டா வதாகச் சொன்ன மூன்றும் அநியதங்கள். செய்யாவிட்டால் தோஷம் ஏற்படாதவை.

சூவாயஜ்ஞாதிவ்யமந்ரயநவிஹ்யாநியஷேஷ வ்யஹ
ணஷ்வவூஹநஹநுகு யயொஜ்ஞாஸு ॥ ச ॥

ஆசார்யன், ஞாதி, மித்ரன், மாதுலாதி குருக்கள் இவர்கள் விஷயத்திலும், தனத்தாலும், வித்யையாலும் மற்றொரு வித்யையை மாற்றிக் கொள்ளும் விஷயத்திலும் யதோக்த நியமமில்லாவிடினும் வேதத்தை ப்ரதாநம் செய்யவும், வ்ருத்தி நிமித்தமாக.

கூஷி வாணிஜ்யே வா கூஷ்யயம்கூதெ ॥ ரு ॥

ப்ராம்ஹணனுக்கு க்ருஷியும், வ்யாபாரமும் ஜீவனார்த்தமாக விதிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அவைகளை இவன் நேரில் செய்யாமல் பிறரைக் கொண்டு செய்விக்கவும்.

கூஷீஹம் வ ॥ கூ ॥

தனத்தின் வ்ருத்திக்காக வட்டி முதலிய ப்ரயோகங்கள் குஸீதம் எனப்படும். இதையும் தான் நேரில் செய்யாமல் பிறரைக் கொண்டு செய்வித்து ப்ராம்ஹணன் வ்ருத்தியாகக் கொள்ளலாம்.

ராஜ்ஞோ ரக்ஷணம் ஸவ்ஹ்ரதாநாழி ॥ எ ॥

சராசராதி ஸகல ப்ராணிகளையும் ரக்ஷிப்பது அரசனுக்கு அதிகப் படியான தர்மமாகும்.

நாயஹ்ணக்வழ ॥ அ ॥

ராக, த்வேஷ, பக்ஷபாதாதிகள் இல்லாமல் சாஸ்த்ர விஹிதமான தண்டமும் ராஜாவுக்குத் தர்மமாகும்.

விஹ்யாஸ வ்யாவஹரணாநு ஹ்ரொத்ரியாநு ॥ கூ ॥

வேதாத்யயநம் செய்த (ச்ரோத்ரிய) ப்ராம்ஹணர்களை அந்ந வஸ்த்ராதி தானங்களால் ரக்ஷிக்க வேண்டியதும் க்ஷத்ரிய தர்மமாகும்.

நிர்ஹாஹாம்ஸ்ச வ்யாவஹரணாநு ॥ கo ॥

ஜீவநார்த்தமாக முயற்சி எடுக்க ஸௌகர்யமில்லாத ப்ராம்ஹணர்களையும் போஷிக்க வேண்டும்.

கூரராம்ஸ்ச ॥ சக ॥

பூர்விக அரசர்களால் ப்ராம்ஹணருக்கு வரியில்லாமல் கொடுக்கப்பட்ட ஸ்வத்துக்களையும் அரசன் அப்படியே பாதுகாக்க வேண்டும். அத்துடன் புதிய வரியும் எதுவும் விதிக்கலாகாது.

உவகுர்வாணாஸ்து ॥ கஉ ॥

அத்யயனம் செய்து கொண்டு வரும் ப்ரம்ஹசாரிகள் உபகுர்வாணர்கள் எனப்படுகிறார்கள். அந்த ப்ரம்ஹசாரிகளையும் அந்நவஸ்த்ராதி தானங்களால் ராஜா ரக்ஷிக்க வேண்டும். அல்லது லோகோபகாரிகளான வைத்யாதிகளை என்றும் அர்த்தம் செய்யலாம்.

பௌரஸ்து விஜயே ॥ கங ॥

யுத்தத்தில் ஜயம் பெறும் விஷயமாகவும் உபாயங்களைத் தேட வேண்டும். இதுவும் க்ஷத்ரிய தர்மம்.

ஹயே விபரிஷேண ॥ கச ॥

சத்ரு ராஜாக்களாலும், சோர வ்யாதிகளாலும் பயம் ஏற்படும் போது அதை நிவர்த்திக்க விசேஷமாக முயற்சி எடுக்க வேண்டியதும் ராஜதர்மம்.

ரதாத் அவரோஹணம் பூமௌ ॥ சஞ ॥

ரதத்துடனும் தனுஸ்ஸுடனும் நகரக்ராம வெளி ப்ரதேசங்களில் ஸஞ்சரிப்பதும் ஆவச்யகம்.

ஸம்ப்ராப்தே ஸம்க்ராமே நிவர்தேத ॥ கஞ ॥

யுத்தத்தில் ப்ராண த்யாகம் செய்ய வேண்டும். அது போல் யுத்தத்திலிருந்து பயாதிகள் காரணமாகப் பின் வாங்கித் திரும்பி ஓடுவதும் கூடாது. இவ்விரண்டும் க்ஷத்ரிய தர்மம்.

ந ஹிம்ஸா ஹிம்ஸாயாமாஹவே ॥ கட ॥

யுத்தத்தில் ப்ராணி ஹிம்ஸை செய்வது தோஷமாகாது. காயப்படுத்துவது, கொல்லுவது எல்லாம் ஹிம்ஸையெனப்படும். அந்தத் தோஷம் கிடையாது.

கூநரதே வ்யூஹாரோஹாயோத்யாய கூதாஜீவிகூணகுகுஷ
வராஜ்ஞாவிவிஷ ஸ்ரஷ்டாக்ஷாயிரஷ்டி ஹித மொஷ்டா
வஜ்ஞவாஹிஷ்ட: ॥ கஅ ॥

யுத்தத்தில் ப்ராணிஹிம்ஸை தோஷமில்லையாயினும் கீழ்க் கண்டவர்கள் விஷயத்தில் அதற்கு விலக்கு. ரதத்தில் குதிரையில்லாதவன், ஸாரதியில்லாதவன், ஆயுதமில்லாதவன், பயத்தால் கை கூப்பியவன், யுத்தத்தில் தலை மயிர் அவிழ்ந்து சிதறியிருப்பவன், புறம் காட்டியோடுகிறவன், சண்டையை நிறுத்தி உட்கார்ந்து

விட்டவன், உயர்ந்த வேறு இடத்திற்கோ, மரத்திலோ ஏறியிருப்பவன், ஸமாசாரம் கொண்டு வந்த தூதன், "நான் பசு, ப்ராம்ஹணன்" என்று சொல்லுகிறவன் இவர்களை யுத்தத்தில் ஹிம்ஸிக்கக் கூடாது. கொல்லக் கூடாது. ஹிம்ஸித்தால் தோஷமுண்டு.

க்ஷத்ரியஸ்ய து நிர்ஜிதவதஸ்தத்தனம் ॥ ௪௬ ॥

அரசனை வேறு ஒரு க்ஷத்ரியன் ஜீவனுத்தபாக ஆச்ரயித்திருந்தால், அவனும் அரசனுடைய வ்ருத்தியை அநுஸரித்து நடந்து ஜீவிக்கவும்.

ஜேதா ஹரேத வாம்ராஜிகம் விதழ் ॥ ௪௦ ॥

யுத்தத்தில் சத்ருவை ஜயித்து அடைந்த தனத்தை, யுத்தம் செய்து ஜயித்த ராஜபடன் அடைய வேண்டும். ராஜா அல்ல.

வாஹநம் து ராஜ்ஞ: ॥ ௪௪ ॥

மேற்படி விதி பணவிஷயம். யுத்த ஜயத்தால் யானை, குதிரை முதலியவை ராஜாவுக்கே ஸ்வந்தம். படனுக்கு அல்ல.

ஸர்வாஸ்ஸாவ்யக்ஷ ஜபே ॥ ௪௫ ॥

தனியாக இல்லாமல் எல்லோரும் சேர்ந்து ஜயம் பெற்றுக் கிடைத்த பணம் முதலியவைகளில் அரசனுக்கு விசேஷாம்சமாகத் தனியாகக் கொடுத்து விட வேண்டும்.

கரதூ யயாஹரம் ராஜயெ ராஜா ॥ ௪௬ ॥

யுத்தத்தில் கிடைத்த மேற்கண்ட வஸ்துக்கள் தவிர மற்றதை ராஜாவே அந்தந்தப் படர்களின் ஊழியத்திற்கும் ஸௌர்யாதிகளுக்கும் ஏற்றபடி பிரித்துக் கொடுத்துவிடவும்.

ராஜ்ஞோ வை ஹாரம் க்ருஷிகெப்ரு ஸிஷ்டம் ஷஷ்டம் வா ॥ ௪௭ ॥

க்ருஷி செய்கிறவர்கள் தங்கள் க்ஷேத்ரத்தில் விளைந்த ஸஸ்யாதி த்ரவ்யங்களிலிருந்து பத்து, அல்லது எட்டு, அல்லது ஆறில் ஒரு பாகத்தை ராஜாவுக்கு வரி தானமாகக் கொடுக்கவும். நன்றாக விளைந்தால் பத்திலொன்று, நடுத்தர விளைவில் எட்டு, கீழ்த்தரமான பலனில் ஆறு என்று வ்யவஸ்தை. ஸஸ்யாதிகளையும் நெல் முதலியவைகளையும் பாதுகாத்துக் கொடுப்பது அரசன் கடமை.

வஸ்ஹிரண்யயொ ரவெகெ வஷ்டாஸ்ஹாரம் ॥ ௪௯ ॥

ஆடு மாடு முதலியவைகளால் வ்யாபாரம் செய்து ஜீவிப்பவன் ஐம்பதில் ஒரு பாகத்தை வரியாகக்கொடுக்கவும். அது போல் தங்க வ்யாபாரிகளும் ஐம்பதில் ஒரு பாகம் வரி கொடுக்கவும். இது வர்ஷத்தில் ஒரு தடவை.

விம்ஶதிஹாகஃ ஶுல்கஃ வணிஜே ॥ உகூ ॥

வ்யாபாரிகள் தாங்கள் விலைக்கு வாங்கும் விற்பனைப் பொருள்களுக்கும் அரசனுக்கு இருபதில் ஒரு பாகம் வரி கட்டவும்.

உத்³ப⁴வஃ வ்ருக்ஷளக்ஷயஃ ஸோமஃ தைலஃ மாம்ஸஃ பலம் விஷம் ॥

கிழங்குகள், பழம், புஷ்பம், ஔஷதி, மது, மாம்ஸம், புல், விறகு இவைகளை வ்யாபாரார்த்தமாக வ்யாபாரி வாங்கினால் இதில் அறுபதில் ஒரு பங்கு ராஜாங்க வரியுண்டு.

தத்ர க்ஷணயஃ ஸூசகாஃ ॥ உஅ ॥

மேற்கண்ட பண்டங்களுக்காக ராஜாங்க வரி எதற்காகச் செலுத்தவேண்டும்? அரசன் அவைகளைக் காவல் புரிந்து ரக்ஷித்துக் கொடுக்கும் தன்மையுள்ளவனுகையால் அதற்கு ப்ரதி ப்ரயோஜனமாக அந்த வரி என்றபடி.

தேஷு தம் நித்யமுத்³யுக்தாஃ ஸ்யுஃ ॥ உக ॥

மேற்கண்ட க்ருஷிகர், வ்யாபாரி போன்றவர் விஷயத்தில் அரசன் எப்போதும் ச்ரத்தையுடன் கவனித்து ஹிதம் செய்கிறவனுயிருக்க வேண்டும். அல்லது அந்த வரிகளை வஸூலிப்பதில் ச்ரத்தையுள்ளவனுயிருக்க வேண்டும், என்றும் அர்த்தம் கூறலாம்.

ஸுயிகஸ்ய வ்ருத்திஃ ॥ ஈ0 ॥

ராஜாவும் அவனுடைய குடும்பஸ்தர்களும், ராஜாவிற்கென்றே தனியாக வரும் அதிகப்படி வருமானத்தைக் கொண்டே குடும்ப ரக்ஷணைகள் செய்யவேண்டும். ராஜாங்க பொக்கிஷ பணத்தாலோ, வரிப் பணத்தாலோ ஜீவிக்கக் கூடாது. ஆபத்காலத்தில் இந்த நியமமில்லை.

ஶில்பினோ ரூபஜீவினஃ ப்ரதிமாஸம் ஏகதி³வஸம் கர்ம குர்யுஃ ॥ ஈக ॥

உலோஹவேலை முதலியவை செய்யும் சில்பிகள் ஒவ்வொரு மாதமும் ஒருநாள் இனமாகக் கூலியின்றி வேலை செய்யவும். இதுவே அவர்களுக்கு வரி. வேறு வரி இல்லை.

வனேதராத்³தனோபஜீவினோ வ்யாவ்ருதாஃ ॥ ஈஉ ॥

பாரம் தூக்குவது முதலிய சரீராயாஸ கார்யங்களால் ஜீவிக்கும் உழைப்பாளிகளும் மேற்கண்டபடி ஒரு நாள் இனமாக வேலை செய்யவேண்டும், வரிக்குப் பதிலாக. நட நர்த்தகாதிகளுமிப்படியே.

நளவகீவஞ்ஜு ॥ நந ॥

ஓடம், வண்டி இவைகளால் ஜீவிப்பவர்களும் ஒரு மாதத்தில் ஒரு நாள் இனம் வேலை செய்யவும்.

ஸஹம் தெஹ்யா ஹ்யாஸு ॥ நச ॥

கீழ்ச் சொன்ன சிற்பி, உழைப்பாளி முதலிய வேலைக்காரர் களுக்கு ப்ரதி தினமும் பகல் போஜனத்தை ராஜா இனமாக அளிக்கவேண்டும்.

வணூ வணிஹ்ரயூவயெந ஹெயு ॥ நரு ॥

வ்யாபாரிகள் இருபதில் ஒரு பங்கைச் சுல்கம் அல்லது வரியாகக் கொடுக்க வேண்டு மென்று கீழே சொல்லப்பட்டது. அத்துடன் வ்யாபாரிகள் தாங்கள் வாங்கிய விலைக்குச் சிறிது குறைந்த விலைக்கு அந்தப் பண்டங்களில் சிறுபாகத்தை ராஜாங்கத் திற்கும் விற்கவேண்டும்.

வுணஷ்டவாதிகுயிமஹு ராஜ்ஞே வுஷ்டிபாஃ ॥ நசு ॥

சொந்தக்காரனில்லாத வஸ்துக்கள் கிடந்து அகப்பட்டால் அதை ராஜாவிடம் தெரிவிக்கவும். எடுத்தவர்கள் சொல்லவும், அல்லது காவற்காரனும்.

விவ்யாவு ஸம்வத்ஸரம் ராஜ்ஞா ரக்ஷ்யு ॥ நள ॥

சொந்தக்காரனில்லாத அந்த வஸ்துவை ராஜா வாங்கிக் கொண்டு, படஹம் (தண்டோரா) மூலமாகப் பஹிரங்கப்படுத்தி விட்டு, ஒரு வர்ஷம் வரை அதைப் பாதுகாத்து வரவேண்டும்.

ஊஹ்யுயிமஞ்ஜாஃ யதாயூம் ராஜ்ஞஸ்ஸ்வாஃ ॥ நஅ ॥

ஒரு வர்ஷத்திற்கு மேலும் சொந்தக்காரன் தெரியாவிட்டால், முதலில் அதைக் கண்டெடுத்தவனுக்கு நாலில் ஒருபாகம்கொடுத்து விட்டு பாக்கியை ராஜா அடையவும். ஒரு வர்ஷத்திற்குள் சொந்தக்காரன் வந்தால், அது தன்னுடையதென்பதை ஸாக்ஷி யுடன் நிரூபித்துத் திரும்பிப் பெறலாம். தன்னுடையதென்று பொய் சொன்னவனுக்குத் தண்டனை, என்று யாஜ்ஞவல்க்யர் கூறுகிறார்.

ஷாதீ நிக்ருயவம்வீஹாமவரிஹ்ருஹாயிமஷேஷ ॥ நக ॥

குடும்ப தனம், விலக்கு வாங்கிய வஸ்து, பிரிவினையால் கிடைத்த த்ரவ்யம், முன்னால் பாத்யத்துடன் அடைந்த தனம், தானாகக் கிடைத்த த்ரவ்யம் இவைகளில் அந்தந்தக் கார்ய ஸம்பந்த முள்ளவனே அந்தத் த்ரவ்யங்களுக்கு ஸ்வாமியாவான், பாத்யஸ்தனு வான். மேற்கண்டவை த்ரவ்ய பாத்ய காரணங்கள்.

ப்ராஹ்மணஸ்யாயிகம் ஔழ்த ॥ சம ॥

ப்ராம்ஹ்மணனுக்கு, தானத்தில் கிடைத்த த்ரவ்யமும் அவனுடைய பாத்யத்திற்கு மூலமாகும்: கீழ்ச்சொன்ன பாத்ய மூலம் தவிர இது அதிகப்படி.

க்ஷத்ரியஸ்ய விஜிதம் ॥ சக ॥

யுத்த ஜயத்தால் கிடைத்த த்ரவ்யத்தில் க்ஷத்ரியனுக்கு பாத்யமேற்படும். அது பாத்ய மூலம்.

நிவிஷ்டம் வைஶ்யஶூத்ரயோஃ ॥ சஉ ॥

வைஶ்யன், சூத்ரன் இவர்கள் க்ருஷி, சுச்ரூஷாதிகளால் ஸம்பாதித்த த்ரவ்யத்தில் அவர்களுக்குப் பாத்யம்.

நிக்ஷேபோ ராஜ்ஞஏ ॥ சங ॥

புதையல் கிடைத்தால் அது ராஜாவின் தனமாகும்.

ப்ராஹ்மணஸ்யாஹிரண்யவஸ்த்ர ॥ சச ॥

ஷட்கர்ம நிரதனான ப்ராம்ஹ்மணனுக்கு நிதி (புதையல்) கிடைத் தால் அது அந்த ப்ராம்ஹ்மணனுடையதே.

ஸ்வாவமேனாவ்யாவ்யாதா ஷஷ்டம் ஔபததெயுகே ॥ சஞ ॥

அப்ராம்ஹ்மணனும் நிதி கிடைத்ததை ரஹஸ்யமாக வைக்காமல் ராஜாவிடம் தெரிவிப்பானால் அவனுக்கு அதில் ஆறில் ஒருபங்கு அடைய பாத்ய முண்டு, என்று சிலர் நிர்ணயிக்கிறார்கள்.

ஔபஹ்ருதஸ்வஜிதம் யஜ்ஞார்தம் ப்ரயச்சேத் ॥ சஎ ॥

திருடர்களால் அபஹரிக்கப்பட்ட ஸ்வத்தை ஜயித்து மீட்டு ஸொந்தக்காரருக்குச் சேர்க்கவும்.

கொஶாத் ஹரந்தம் ॥ சஏ ॥

தேடிப் பார்த்தும் திருட்டுப்போன த்ரவ்யம் திரும்பிக்

கிடைக்காவிட்டால் ராஜாங்க பொக்கிஷத்திலிருந்து அந்தத் த்ரவ்யத்தை ஸொந்தக்காரனுக்குக் கொடுக்க வேண்டும்.

ரூக்ஶ்ம் வாஜ்யஶ்வ்யவஹாரவ்யாவணாஸு ।। சஅ ।।

பதினாறு வயது பூர்த்தியாகாதவன் பாலன். அவனுக்குப் போஷகர்களில்லாவிட்டால் ராஜாவே அவனுடைய தனங்களை ரக்ஷித்துக் கொடுக்க வேண்டும். அந்தப் பாலன் யௌவநம் அடையும் வரையில். கார்யங்களில் ஸம்பந்தப்பட யோக்யதையுள்ள வயது வ்யவஹாரம்.

வஶாவ்ருத்தவ்ருா ।। சகூ ।।

வேதாத்யயனம் முடிந்து குருகுலத்திலிருந்து திரும்பும் வரையிலாவது அவன் ஸ்வத்தை ராஜா பாதுகாக்க வேண்டும். பிறகு அவனிடம் சேர்க்கவும்.

வைஶ்யஸ்ய க்ருஷி வணிக் வாஶுவாஶ் குஸீதம் ।। ருo ।।

வைஶ்யனுக்கு ஸ்வகர்மாவைக் காட்டிலும் அதிகமாக க்ருஷி, வாணிஜ்யம், பசுபாலனம், பணம் கொடுத்து வாங்கல் முதலியவைகளும் உண்டு. அவைகளால் கிடைக்கும் தனத்தில் அவனுக்குத்தான் பாத்யம்.

ஶூத்ரஸ்ய ஸுஶ்ரூஷயைவ வர்ண வகுஜாதிः ।। ருக ।।

நான்காவது வர்ணத்தைச் சேர்ந்த சூத்ர ஜாதியானது ஏக ஜாதி, ஒரே ஜன்மமுள்ளது. த்விஜாதியாகாது. உபநயந மென்கிற இரண்டாவது ஜாதி கிடையாது, என்று கருத்து. மற்ற மூன்று வர்ணத்தாரும் த்விஜாதிகளாவர். சூத்ரனுக்கு உபநயனமில்லாவிடினும், கர்ப்பாதான, ஸீமந்த, ஜாதகர்ம, நாமகரண, அந்ந ப்ராஶந, சௌளாதி ஸம்ஸ்காரங்கள் மந்த்ரமில்லாமல் உண்டு. விவாஹ ஸம்ஸ்காரமுமுண்டு, என்று க்ருஹ்யகாரர்களின் அபிப்ராயம்.

தஸ்யாவி ஸத்யமக்ரோத ஶௌசமிதி ।। ருஉ ।।

அந்த சூத்ர ஜாதிக்கும், ஸத்யம் பேசுதல், கோபமின்மை, மனச்சுத்தி, த்ரவ்ய சுத்தி போன்றவை தர்மங்களாகும்.

சூஉஶாயைவ வாணிவாஹுக்ஷாஉநஶேவெகெ ।। ருக ।।

சூத்ர ஜாதிக்கு ஆசமன கர்மாவிற்குப் பதிலாக, கை கால்களை ப்ரக்ஷாளனம் செய்து கொள்வதே போதுமென்று சிலர் நினைக்கிறார்கள். மனு சூத்ரனுக்கு ஆசமனம் ஒப்புகிறார். நித்ய ஸ்நானமும் ஸத்சூத்ரனுக்கு உண்டு.

ஸ்ராத்தகர்ம ॥ ருச ॥

சூத்ரஜாதிக்கு அமாவாஸ்யாதி ச்ராத்தகர்மாவும் விதிக்கப் பட்டுள்ளது. மந்த்ரமின்றியோ, நமஸ்கார மந்த்ரத்துடனே ச்ராத்தம் செய்யவேண்டும், என்று ஸ்ம்ருதிகள்.

ஸ்வகுடும்பரக்ஷண ॥ ருருு ॥

குடும்பத்திலும் வெளியிலும் உள்ள போஷ்ய வர்க்கங்களைப் பரிக்கவேண்டியதும் அந்த ஜாதி தர்மமாகும். அதற்காக த்ரவ்யார்ஜனதிகள் செய்யலாம்.

ஸஹாயவ்ருத்தி: ॥ ருகூ ॥

தன் பார்யையிடமே நியதனாக இருக்கவேண்டியதும் தர்மம். ஸந்யாஸமும் கூடாதென்றபடி.

வரிவஸ்யா ஸொத்ருஷ்டி ॥ ருள ॥

மேல் வர்ணத்தாருக்கு வேண்டிய கார்யங்களையும் செய்து கொடுக்கவும். இதுவும் தர்மம். தொழில்கள் மூலம் சுச்ரூஷை.

தெஷ்வா வ்ருத்திம் விஷ்வெத ॥ ருஅ ॥

அந்த வர்ணத்தாரிடமிருந்து, அந்தத் தொழில்களிலிருந்து ஜீவனத்தை விரும்பவும்.

தது வஸ்வ்யம் வஸ்வ்யம் வரிஷ்யஸே ॥ ருகூ ॥

அந்தச் சுச்ரூஷையை முன்பு முன்புள்ள வர்ணத்திடம் செய்யவும். ப்ராம்ஹண க்ஷத்ரிய வைச்ய வரிசையில்.

ஜீர்ணாநி உவாநயுர்வாஸாம்ஸி வ்யூதீநி ॥ கூ० ॥

பாதரக்ஷை, குடை, வஸ்த்ரம், புல்பாய் முதலியவைகள் பழையனவானால் அவைகளை வேலைக்காரனிடம் கொடுக்கவும். ஏழைத்தனமிகுதியால் வேலை செய்து ஜீவிக்கிறவனுக்கே இந்தச் சலுகை. த்ரவ்ய சக்தியுள்ளவனுக்கு இந்த விதி தகாது.

உச்சிஷ்டாந்நம் ॥ கூக ॥

யஜமானன் வீட்டில் மிகுந்துள்ள அந்நாதிகளால் போஜனம் செய்வதும் ஏழை வேலைக்காரனுக்கு ஏற்றது.

ஸில்பைர்வ்ருத்திம் ॥ கூஉ ॥

சித்ரமெழுதுவது போன்ற பலவித சில்பங்களாலும் சூத்ர ஜாதி ஜீவிக்கலாம். சுச்ரூஷைக்குப் பதிலாக இந்த வ்ருத்தி.

யம் யாயோஜயெ ஹதுவ்யஷ்ஷ கூஷீணொ ஸவி ।। கூஈ ।।

சூத்ரஜாதீயன் எந்த யஜமானனிடம் வேலைக்கு அமர்ந்து ஆச்ரயித்திருந்தானோ அந்த யஜமானன், இந்த வேலைக்காரன் சரீர சக்தியற்று வேலைசெய்ய முடியாதபடி கூஷீணனாகிவிட்ட பிறகும் அவனை ரக்ஷிக்கவேண்டியவன். அந்த வஸ்த்ராதிகளால் போஷிக்க வேண்டும், முன் உபகாரநிமித்தமாக.

தெந ஹொ தூரஃ ।। கூச ।।

அதே மாதிரி யஜமானன் சரீர த்ரவ்ய சக்தியால் கூஷீணித்து விட்டாலும், இந்த வேலைக்காரன் அந்த யஜமானனை முன்போலவே சுச்ரூஷை செய்து உபசரிக்கவும். முன் உபகார நிமித்தமாக.

தஊயெ ஸவ்ய நிஷ்பவ்யாஈ ।। கூடு ।।

தனது முன் யஜமானனைக் குடும்பத்துடன் காப்பாற்ற வேண்டி, சூத்ரன் அதற்காக த்ரவ்ய ஸங்க்ரஹமும் செய்துகொள்ள லாம்.

கூந ஜ்ஞாதெ தவ்ய நிவ்ஹாரொ ஹ்யஃ ।। கூஈ ।।

சூத்ரனுக்கு விஹிதமான வைச்வதேவாதிகளில் "நமஃ" என்ற மந்த்ரத்தைக் கடைசியில் வைத்து அந்தந்த தேவதா பதங்களைக் கொண்டு கர்மாவைச் செய்யவும். அல்லது "தேவதாப்ய: பித்ருப் யஸ்ச" என்ற மந்த்ரத்திற்கு "நமஸ்கார மந்த்ரம்" என்று பெயர். இதைக்கொண்டு அவன் ச்ராத்தாதிகள் செய்யலாம்.

வாகயஜ்ஞை ஸ்வபம யஜெதெதெ ஏகெ ।। கூள ।।

பக்வாந்நங்களால் விதிக்கப்பட்டுள்ள பாக யக்ஞங்களாலும் சூத்ரன் தானே யஜிக்கலாமென்று சில தர்மக்ஞர் கருத்து. தூஷ்ணீமாகவோ, நமஸ்கார மந்த்ரத்தாலோ.

ஸவெ ஷொ தூரொ தூரம் வர்ணெயுஃ ।। கூஅ ।।

எல்லா வர்ணத்தினரும் தம் தமக்கு மேல் மேல் உள்ள வர்ணத்தைச் சுச்ரூஷையால் உபசரிக்க வேண்டும்.

ஸூயாநாயாயொ வ்ருத்திக்ஷெவெ கூடுணை ஸாத்ம்யம் ஸாத்ம்யே ।।

ஆர்யர்களான மூன்று வர்ணத்தினரும், சூத்ர ஜாதியும் தம் தமக்கு விதிக்கப்பட்ட தர்மங்களை மாற்றி அநுஷ்டித்தால் அப்போது அவர்கள் ஸமானவர்களே. உயர்வு தாழ்வு கிடையாது. ஆர்யன் நிக்ருஷ்ட கர்மாவைச் செய்தால் அவனைச் சூத்ரன் உபசரிக்க வேண்டியதில்லை.

சூத்ரன் ஸத் கர்ம நிஷ்டனாயிருந்தால் அவனை மற்ற ஸாமான்ய சூத்ரர்களுடன் ஸமமாக நினைக்காமல் அவனிடம் பஹுமானம் காட்டவும். அத்யாய ஸமாப்திக்காகக் கடைசி பதம் இரட்டிப்பு.

இரண்டாவது ப்ரச்னத்தில் முதல் அத்யாயம் முற்றிற்று.

இரண்டாவது ப்ரச்னம் இரண்டாவது அத்யாயம்.

ராஜா ஸர்வபூம்யதிபதி ப்ராஹ்மணவர்ஜம் ॥ க ॥

ராஜா தனது ராஜ்யத்திலுள்ள எல்லாவித ப்ரஜைகளுக்கும் நிக்ரஹ அநுக்ரஹாதிகளில் ஈச்வனாயிருப்பான். ஸ்வதந்த்ரனாயிருப்பான். ஆனால் ப்ராம்ஹணர்களைத் தவிர்த்து.

ஸாயம்காரீ ஸாயம்வாதீ ॥ உ ॥

சாஸ்த்ராவிருத்தமான ஆசாரங்களை அநுஷ்டிப்பவனும், வ்யவஹார காலத்தில் ந்யாயமாகப் பேசுகிறவனும் அரசன் இருக்க வேண்டும்.

த்ரயீராஜீக்ஷிகீநாம் வாக்விவிநீதஃ ॥ ங ॥

ருக், யஜுஸ், ஸாம மென்கிற மூன்று வேதங்களிலும், ராஜ நீதி சாஸ்த்ரத்திலும் பெரியோர்களிடமும் நல்ல சிக்ஷை (பயிற்சி) பெற்றவனாயிருக்கவேண்டும்.

ஸுவிஜ்ஞாதேந்த்ரியஃ குணவத்ஸஹாயோபாயஸம்பதஃ ॥ ச॥

மனஸ்சரீர சுத்தியுள்ளவனும், இந்த்ரியங்களை வசப்படுத்தியவனும், சாந்தி முதலிய குணமுள்ளவர்களுடன் கூடியவனும், ஸாம தானாதி உபாயங்களுடன் கூடியவனாயிருக்கவேண்டும்.

ஸர்வே ப்ரஜாஸு ஸ்யாத் ॥ ஞ ॥

சத்ரு, மித்ரன், பந்து ஆகிய ஸகல ப்ரஜைகளிடமும் ஸமமாக (பக்ஷபாதமின்றி) இருக்கவேண்டும். ந்யாயம் வழங்குவதிலும் ஸமமாயிருக்கவும்.

ஹிதோபாயம் குர்வீத ॥ ரு ॥

இந்த ப்ரஜைகளுக்கு எப்போதும் ஹிதத்தையே செய்யவும்.

தத்ரோபபூர்வீம் ஸ்வயம்ப்ரபாவாபீரவ்ருதாம் ப்ராஹ்மணைஃ ॥

அரசன் ஸிம்ஹாஸனம் முதலிய உயர்ந்த ஆஸனத்தில் உட்காரவேண்டும். மற்ற ப்ரஜைகள் அவனுடைய ஆஸனத்திற்குத் தாழ்வானபடி உட்கார்ந்து மர்யாதை செய்யவும். இது ப்ராம்ஹணர்கள் தவிர.

தெzவ்ருநம ஶெந்ரஸு ॥ அ ॥

ப்ராம்ஹணர்களும் அரசனை ஆசீர்வாதாதிகளால் பஹுமானிக்கவேண்டும்.

வணஂாநாஸுரோம்ஶு நியதொzஸிஸுக்ஷஸு ॥ கூ ॥

அரசன் ப்ராம்ஹணேதிகளான வர்ணங்களையும், ப்ரம்ஹசர்யாதி ஆச்ரமங்களையும் சாஸ்த்ர முறைப்படி ரக்ஷிக்கவேண்டும். தேச தர்மாதி விரோதமில்லாமல்.

ஜுதஶ்ரெஂதாநு ஷுயுஶெஂ ஷ்டாஜபெஸு ॥ கo ॥

ப்ரஜைகள் ஸ்வதர்மத்திலிருந்து நழுவினால் அவர்களை நிர்பந்த மூலமாக ஸ்வதர்மத்தில் நிலைக்கச் செய்யவும்.

யஶெஷ்ய ஹ்யம்ஶஹாஸ்ஜவதி ॥ கக ॥

அரசன் ப்ரஜைகள் செய்யும் தர்மத்தில் பாகஸ்தனுயிருப்பதால், அவன் ப்ரஜைகளை ஸ்வதர்மத்தில் ஸ்தாபிக்க வேண்டியவன். ப்ரஜைகளின் அதர்மத்திலும் அரசனுக்குப் பங்கு உண்டு.

ஷ்டாஹுணம வவ்ரொஜீத விஜ்ஞாஜிநவாந்ரூவவய
ஸ்ரீஷஂவளும் நியவ்ருத்தம் தவஷ்டிநிழ ॥ கஉ ॥

அரசன் தனக்கு ப்ராம்ஹணனை புரோஹிதனாகக் கொள்ளவும். அந்த ப்ராம்ஹணன், வேத வித்தையுள்ளவனும், நற்குலத்தில் பிறந்தவனும், நல்ல வாக்மியாயும் (பேசும் திறமை), அழகு, நடுத்தர வயது, நல்ல சீலம், ந்யாயமான நடத்தை, வைராக்யம் இவை யுள்ளவனுயு மிருக்கவேண்டும். ராஜாவின் வைதிக ஹிதங்களை முன்னணியில் கவனிப்பவன் புரோஹிதன்.

தஸுவ்ரஷ்டிதஂ கூஜுாணி கூவீதத ॥ சங ॥

அரசன், ச்ரௌத, ஸ்மார்த்த பௌராணிகாதி கர்மங்களை அந்தப் புரோஹிதனின் உபதேசப்படி செய்யவும்.

வ்ரவ்ரவ்ரஷ்டிதம ஹி கூத்ரஷ்ரீர்ஜுதெ ந வ்ரயுத
உதி வ விஜ்ஞாயதெ ॥ கச ॥

ப்ரம்ஹ என்கிற ப்ராம்ஹண ஜாதியால் அநுக்ரஹிக்கப்பட்ட க்ஷத்ரமே ஸம்ருத்தியை அடைகிறது, க்லேசத்தை அடைவதில்லை, என்பது அநுபவத்தில் அறியப்படுகிறது.

யாநி வ கெஷொதாதவிஹகாஂ வ்ரவ்ரஷ்டிஂ தாந்ரஷ்டிபெத ॥

தைவ சிந்தகர்கள், ஜ்யௌதிஷிகர்கள், உத்பாத சிந்தகர்கள், சகுனமறிந்தவர்கள் இவர்கள் அவ்வப்போது சொல்லும் க்ரஹ சகுன பலன்களையும், பரிஹாரங்களையும் கேட்டு ஆதரித்து ஆசரிக்கவும்.

தஷ்யீ நக்ஷத்ரே ஹைகே யோகக்ஷேம வ்ருத்திஜாநதே ॥ கசு॥

அரசனுடையவும், ராஜ்யத்தினுடையவும் யோக க்ஷேமங்கள் அந்த ஜ்யோதிஷ, சகுன அதீனங்களாகவே இருக்கின்றன வென்று சில ஆசார்யர்கள் ப்ரதிக்ஞை செய்கிறார்கள், நிச்சயிக்கிறார்கள். அடையப் படாததை அடைவது யோகம், கிடைத்ததை ரக்ஷிப்பது க்ஷேமம்.

ராஜ்ஞி வாசயேத் புண்யாஹ புண்யர்ஷிபிர்ஜுஹுயாத் மங்கள்யாநி
ப்ரயோகாநி விவிதைர்ஷணஸம்வநநாஹியாத்ராவிஷ்டயஸ்ய
யுக்தாநி ச ராஜாமூல கர்யாணி ॥ கள ॥

அரசன் செய்ய வேண்டிய சாந்தி கார்யங்கள், புண்யாஹ கார்யங்கள், யாத்ரா காலத்தில் செய்ய வேண்டிய மங்கள கார்யங்கள், ஆயுர் வ்ருத்திக்காகச் செய்யப் படுகிறவை, க்ருஹ ப்ரவேசாதி கால மங்கள யுக்தங்கள், வேறு அப்யுதய கார்யங்கள் இவைகளையும், சத்ரு நிரஸநத்திற்காகச் செய்யப்படும் வித்வேஷணம், ஸம்வனனம், அபிசாரம், சத்ருவின் ஐச்வர்ய நாசகாரியானவை இவைகளையும் சாலாக்நி என்ற லௌகிகாக்னியில் செய்யவும். ச்ரௌத ஸ்மார்த்தாக்நிகளில் கூடாது.

யயோக்தமந்யத் க்ருத்விக்ஜோ நயாநி ॥ கஅ ॥

மற்ற ச்ரௌத ஸ்மார்த்தாதி கர்மங்களை ருத்விக்குகள் யதா சாஸ்த்ரம் அரசனுக்காகச் செய்யவேண்டும்.

தஸ்ய வ்ருத்தஹாரோ வேதோ யஜ்ஞாஸ்த்ராணி சாஸ்த்ர
நிர்வர்தநாநி வ்ருத்தாணி ॥ ககூ ॥

ராஜ்ய பரண மூலம் ப்ரஜாபாலனம் செய்யும் அரசனுக்கு வேதம், தர்மசாஸ்த்ரங்கள், வேதாங்கங்கள், உபவேதங்கள், புராணங்கள் இவைகள் மூல ப்ரமாணங்கள். தேச தர்ம, லௌகிக வ்யவஸ்தாதிகளை ஸ்தாபனம் செய்ய ஆதாரமானவை.

தேஷாம் ஜாதிகுலயஜ்ஞாஸ்த்ராயோக்தாநி வ்ருத்தாநி ॥ உ0 ॥

அந்தந்தத் தேச தர்மங்கள், ஜாதிகளுக்கான தனி தர்மங்கள்,

குல தர்மங்கள் இவைகளும் ப்ரமாணங்களே. அப்படியே ஆசரிக்கத்தக்கவை. ஆனால் ச்ருதிகளுக்கு விருத்தமாகாமலிருந்தால் தான் ப்ரமாணம். ச்ருதிவிருத்தங்களான தேச, ஜாதி, குல, ப்ரத்யேக தர்மங்கள் அப்ரமாணங்களே. இங்கே தர்மமென்பது அந்தந்த ஸமூஹங்களின் ஸங்கேத ஆசாரங்களாகும்.

கூஷ்டுக வணிக் வஸ்-வாஸக-வஹீஷுகாரவஃ ஷ்வை ஷ்வை வஸ்ருஃ ॥

க்ருஷிஜீவிகள், வ்யாபாரிகள், கோபாலகர்கள், வட்டி வ்யாபாரம் செய்பவர்கள், தச்சன், வண்ணன் முதலியவர்களுக்கு அவரவர்களுடைய வகுப்பினர் கூறும் வ்யவஸ்தைகளே தேச, ஜாதி, குல தர்மங்களாகும்.

தேஷ்வா யயாயிகாரயோரந்ய வ்யவஹார்த்ய யதிவ்யவஸ்யா ॥

மேற்கண்ட கர்ஷகாதி ஜாதிகளுள் ஆசாரவிஷயமான ஸந்தேஹ விவாதாதிகள் ஏற்பட்டால் அவர்களுள் வ்யவஸ்தாபகனை அங்கீகரிக்கப்பட்டவனை விசாரித்து, விஷயங்களை அறிந்து, தர்ம வ்யவஸ்தையைச் செய்யவேண்டியது.

ந்யாயாயிமஷே தகேஷாஜ்ஞ-வாயஃ ॥ உங ॥

அந்த விவாதத்தில் ந்யாயம் வெளிப்படவில்லையானால் அதை அறிவதற்குத் தர்க்கம், அல்லது ஊஹத்தை, உபாயமாகக்கொள்ளவும். இங்கிதம், ஆகாரம், சேஷ்டை இவைகள் உபாயம்.

தேநாஜ்ஞ-ஹ்ய யயாஜ்ஞாநம் ஜதியெஷு ॥ உச ॥

அதனால் ஊஹித்து நிச்சயித்து எந்தப் பக்ஷத்தில் ந்யாயமிருப்பதாக ஏற்படுகிறதோ, அதைத் தீர்மானிக்கவேண்டும்.

விவ்ருதிவத்ஸ தைவிஜ்ஞ்யைஷ் வ்யவஹார்த்ய நிஷ்டாம் ஜதியெஷு ॥ உரு ॥

மேற்கண்ட ஊஹத்திலும் ஸந்தேஹமேற்பட்டு நிர்ணயம் ஏற்படாவிட்டால், மூன்று வேத நிஷ்டர்களான பெரியோர்களே மத்யஸ்தர்களாக அழைத்து, விஷயத்தைச் சொல்லித் தீர்மானத்தைப் பெறவும்.

தயா ஹ்யஸ்ய நிஃஸ்ரேயஸம் ஹவதி ॥ உசு ॥

அப்படிச் செய்தால் தான் இவனுக்கு இஹ, பரகேஷமம் ஏற்படும்.

வ்ருஹ க்ஷேத்ரண ஸம்வ்ருதம் ஜவவித்ரூஜந்ஷ்ராந்
யாஸ்ய தீதி விஜ்ஞாயதெ ॥ உள ॥

மேற்கண்டபடி ப்ரஜா க்ஷேம கார்யங்களில் ப்ராம்ஹணன், க்ஷத்ரியனுடன் சேர்ந்து தர்மரக்ஷணம் செய்வதால், தேவ, பித்ரு மநுஷ்யர்களை அவ்விருசக்தியும் சேர்ந்து தரிக்கிறதென்று வேதங்களில் அறியப்படுகிறது.

ஏஷ்வா ஜீநாஹித்யாஹ்ஃ தெநாஜ்ஞாந்ந ஜீயெச ॥ உஅ ॥

ஸன்மார்க்கத்திலிருக்கும்படி ப்ரஜைகளை நியமிப்பதுதான் தண்டமெனப்படும். அந்தத் தண்டத்தால் சாஸ்த்ர நியமத்தை அநுஸரியாதவர்களை நிர்ப்பந்தித்து அநுஸரிக்கச் செய்யவும்.

வண்ணாஸ்ரமாஃ ஸ்வஸ்வயஜ்ஞாஃ ஸ்வ்ரூ கரூபஜீவநா
ஸ்வய தத ஸ்ரஷ்டெண விஸிஷ்டெ ஜாதிகுலவாயஃ
ஸ்ரூதவ்ரூ தத்விதவஸ்வயெவொ ஜந்ரூ பூதிவஜ்ரூதெ ॥ உக

ப்ராம்ஹணாதி வர்ணங்களும், ப்ரம்ஹசர்யாதி ஆச்ரமங்களும் தங்கள் தங்கள் தர்மநிஷ்டர்களாயிருந்தால், பிறகு பரலோகத்தில் கர்மபலன்களை அநுபவித்து விட்டு, அதில் பாக்கியுள்ள கர்ம பலனால் உத்க்ருஷ்ட தேசம், ஜாதி, குலம், ரூபம், ஆயுஸ், வித்யை, ஸதாசாரம், தனம், ஸுகம், மேதை இவைகளையுடையவராய் மறுபடி ஜந்மத்தை அடைகின்றார்கள்.

விஷ்வஜ்ஞா விவரீதா நஸ்ரூஜி ॥ ஈ ॥

அப்படித் தங்களுடைய வர்ணச்ரம நியமங்களை அநுஸரியாதவர்கள் விபரீதர்கள், அவர்கள் நசிப்பார்கள்.

தாநாவாயெ-ூவஜெஸ்ரொ ஜ்ஞஸ்ரு வாயதெ ॥ ஈக ॥

அப்படி வர்ணச்ரம தர்மங்களை மீறியிருப்பவர்களை, ஆசார்யோபதேசமும், ராஜ தண்டனையும் நல்வழிப் படுத்தி ரக்ஷிக்கின்றது. அவ்விரண்டும் செய்யப்பட வேண்டுமென்று கருத்து.

தஸ்மாத்ரூ ராஜாவாய-ூவநிஜ்ரூவநிஜ்ரூள ॥ ஈஉ ॥

ஆகையால், ஆசார்யன் தனது உபதேசத்தாலும், ராஜா தனது தண்ட ப்ரயோகத்தாலும் வர்ணச்ரமங்களை ஸ்வதர்மத்தில் ஸ்தாபிக்கச் செய்கிறவர்களாயிருப்பதால் அவர்களை எவனும் நிந்திக்கக் கூடாது. வாழ்த்த வேண்டும்.

இரண்டாவது ப்ரச்னத்தில் இரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

இரண்டாவது ப்ரச்னம் மூன்றுவது அத்யாயம்.

ஸ்வஸ்ரோ த்விஜாதீநஹிஸாயாமாஹதயோ வாக்3தண்ட-
ரூஷ்யாஹ்ரு ஜ்ஜ்ஞம் ஸோவ்யோ பவத்யாத்மந꞉ ॥ க ॥

சூத்ரன் த்விஜாதிகளை வாக்கினால் அவமதித்தாலும், தடி முதலியவைகளால் அடித்தாலும் எந்த அவயவத்தால் குற்றம் செய்தானோ அந்த அவயவத்தில் சேதனம் செய்யத்தக்கவன். இது தண்டனை.

சூயஸ்தூல்லிமதிநே மிஜ்ஞோஸ்ஸ꞉ வ்ருஹரணம் ய ॥ உ ॥

ஆர்ய ஸ்த்ரீகளிடம் சூத்ரன் ப்ரவேசித்தால் அந்தக் குற்றத்திற்காக, லிங்கச்சேதமும், ஸ்வத்துப் பறிமுதலும் தண்டனை.

மொவ்தா வெசு வயொ2யிகு꞉ ॥ ங ॥

சூத்ரன் தனது வசத்தில் ரக்ஷணார்த்தம் ஒப்புவிக்கப்பட்ட ஆர்ய ஸ்த்ரீயினிடம் ப்ரவேசித்தால் மேற்கண்ட தண்டனையுடன் வதமும் அதிகப்படி.

சுய ஹாவஸ்ய வெஜி-வாஸ்ரூவ்ண தஸ்ரவ-ஜ்ஜ-ஹ்ரூம் ப்ரொ
தூவ்ய தீவ-ஹ்ரூண ஜி-ஹ்ரூஹாஸ்ரூணே ஜிஹ்ரூவெஹ்ரூ யாஸ்ரூணே
ஸரீஸ்ரூஹெஜு꞉ ॥ ச ॥

சூத்ர தர்மம் வேறு. அதற்கு விருத்தமாக வேண்டுமென்றே புத்திபூர்வகமாக அவன் வேதத்தைக் கேட்டால், காதில் அரக்கு த்ரவத்தை விடவும். வேதத்தைச் சொன்னால் ஜிஹ்வாச் சேதனமும், வேதத்தை அறிந்து தரித்தால் சரீர பேதனமும், தண்டனையாகும். மேற்கண்ட விதி, சாஸ்த்ரநியமத்தை மீறிய குற்றத்திற்காக. ஆகையால் புத்திபூர்வகமின்றி வேதச்ரவணாதிகளில் தோஷமில்லை. மேற்கண்ட தண்டனையுமில்லை.

சூஸநஸயநவாகயிஷ்-ஸவெவ்ஹ-ஜ்ஜ்ஞ்ஸ்ரூ꞉ ॥ ஞ ॥

கீழ்ப்பட்டவன் (சூத்ரன்) மேற்பட்டவனுடன் ஆஸனம், படுக்கை, பேச்சு, வழி இவைகளில் ஸமத்வம் அடைய விரும்பினால் அவன் தண்டிக்கத்தக்கவன்.

ஸதம் க்ஷத்ரியொ வ்ராஹ்மணாகோ2ரெ ॥ சு ॥

க்ஷத்ரியன் ப்ராம்ஹணனை க்ரூரமாக நிந்தித்தால் அவனுக்கு

நூறு கார்ஷாபணம் தண்டனை. (அந்தக் காலத்தில் தாம்ர நாணயம் நூறு கொண்டது ஒரு கார்ஷாபணம் என்று ஸ்மிருதி ஸங்கேதம்).

கூத்ரஸ்ய வைஶ்யஸ்ய ॥ ஏ ॥

வைஶ்யன் ப்ராம்ஹணநிந்தை செய்தால் அரைப் பங்கு அதிகமான நூறு கார்ஷாபணம் தண்டிக்கத்தக்கவன் (நூற்றைம்பது கார்ஷாபணம்).

ப்ராஹ்மணஸ்ய க்ஷத்ரியே வதஸ்தாஸ்ரு ॥ அ ॥

க்ஷத்ரியனிடம் ப்ராம்ஹணன் நிந்தாதிகள் செய்தால் ப்ராம்ஹணனுக்கு ஐம்பது கார்ஷாபணம் தண்டனை.

தத்ரஸ்ய வைஶ்ய ॥ க ॥

வைஶ்யநிந்தை செய்த ப்ராம்ஹணனுக்கு அதில் பாதி தண்டனை. (இருபத்தைந்து)

ந ஶூத்ரே கிஞ்சித் ॥ கo ॥

ப்ராம்ஹணன் சூத்ரநிந்தை செய்தால் அதில் தண்டனையில்லை. க்ஷத்ரியவைஶ்யர்கள் சூத்ரநிந்தை செய்தால் தண்டனையுண்டு. முறையே இருபத்துநான்கு, முப்பத்தாறு கார்ஷாபணமென்று உஶனஸ் சொல்லுகிறார்.

ப்ராஹ்மணராஜந்யவத் க்ஷத்ரியவைஶ்ய ॥ கக ॥

க்ஷத்ரிய வைஶ்யர்கள் பரஸ்பரம் நிந்தை செய்தால், ப்ராம்ஹணனுக்கும், க்ஷத்ரியனுக்கும் விதித்தபடி தண்டனை முறையுண்டு.

க்ஷுத்ராவாஹ்யம் க்ஷயகிஞ்சிஷம் ஶூத்ரஸ்ய ॥ கஉ ॥

சூத்ரன் திருட்டுக் குற்றத்தால் அபஹரித்த த்ரவ்யத்தை எட்டு மடங்கு அதிகமாகச் சேர்த்து, திருப்பிக் கொடுக்கவேண்டும். ஸ்வத்துக்காரனுக்கு ஒரு பங்கு. பாக்கி ஏழும் அரசனுடையது.

இதரேஷாம் த்ரிகுணம் வ்ருத்திவர்ஜம் ॥ கங ॥

மற்ற வர்ணத்தினர், திருட்டு மூலமாக அபஹரித்த த்ரவ்யத்தை இரண்டு பங்கு சேர்த்துக் கொடுக்கவேண்டும். வைச்யன் பதினாறு மடங்கும், க்ஷத்ரியன் முப்பத்திரண்டு மடங்கும், ப்ராம்ஹணன் அறுபத்துநான்கு மடங்கும் கொடுக்கவேண்டும்.

விஜ்ஞாதிகுரோ ஹ்ரஸ்வீயஸ்யே ॥ கச ॥

சட்ட திட்டங்களை அறிந்தவன், அல்லது படித்தவன், அதிக்ரமம் செய்தால் அதில் தண்டனை அதிகம் உண்டு. சட்டத்தை அதிக்ரமிப்பதால் ஏற்படும் குற்றத்தை அறிந்தும் குற்றம் செய்வது அதிக தண்டனைக்கு ஹேதுவாகும்.

மலஹரிதயாந்யாகாஷாதெ வஸ்த்ரபஷ்ண ஏவ ॥ கடு ॥

பழங்கள், பயிரிலுள்ள தான்யங்கள், காய், கிழங்குகள் இவைகளைத் திருட்டுவழியால் எடுத்தால் ஐந்து க்ருஷ்ணலம் என்ற ஸ்வல்ப தண்டனை. குன்றுமணி இடை க்ருஷ்ணலம் என்பது. ஐந்து குன்றுமணி எடை வெள்ளி அபராதம். ஒரு உளுந்து எடை என்றும் சிலர்.

வஸ்த்ரவீஹிதெ ஷாதிஜொஷஃ ॥ கக ॥

ஸஸ்யாதிகள், பயிர் முதலியவை ம்ருகங்களால் வீணுக்கப் பட்டால் அந்த ம்ருகங்களின் ஸ்வந்தக்காரர் குற்றவாளியாவார்.

வாலஸம்பந்தெ தந்து தஷ்டெ ॥ கள ॥

அந்த ம்ருகமானது ஒரு மேய்ப்பவன் வசம் ஒப்புவிக்கப் பட்டிருந்தால், அந்த ம்ருகம் செய்த சேதமானது பாலகனைச் சேர்ந்த குற்றமாகும். பசுபாலகனைச் சேர்ந்தது குற்றமும் தண்டனையும்.

வயிக்ஷெத்ரஸ்நாவ்ருதெ வாலக்ஷெத்ரிகயொஃ ॥ கஅ ॥

வேலி முதலிய மறைவு அல்லது பாதுகாப்பு இல்லாமல் வழிநடப்புள்ள இடத்திலுள்ள வயலில் ம்ருகங்கள் சேதம் செய்தால், வேலி கட்டாத குற்றத்திற்காக க்ஷேத்ர யஜமானனும், பல பாலகன் கவனக் குறைவாக இருந்ததால் அவனும் இருவரும் தோஷமுள்ளவர்கள்.

வத்ஸ ரோஷா மவி ॥ கக ॥

பசுமாடுகளால் பயிர் முதலியவை அழிக்கப்பட்டால் அதற்காக ஐந்து உளுந்து எடையுள்ள பணம் தண்டனையாகும்.

ஷண்ட்ஷு வரெ ॥ உ0 ॥

ஒட்டகம், கழுதை இவைகளால் சேதமேற்பட்டால் ஆறு பணம் தண்டனை.

கூஷ்ஹிஷ்வ்ராஷ்ட்ரே ॥ உக ॥

குதிரை, எருமை மாடு இவைகளால் சேதமேற்பட்டால் பத்துப் பணம் தண்டனை.

கூஜாவிஷ்ட ஆள ஆள ॥ உஉ ॥

வெள்ளாடு, செம்மறியாடு முதலியதில் இரண்டு பணம் அபராதம்.

ஸவத்விநாஸே ஸர்வே ॥ உங ॥

பயிர் மறுபடி முளைக்கக்கூடாதபடி எல்லாம் சேதமாகியிருந்தால், அப்போது அதில் விளையக்கூடிய பலனை மதிப்பாக வைத்து அவ்வளவு நஷ்டமும் க்ஷேத்ர ஸ்வாமிக்குக் கொடுக்கவேண்டும். (இது ஸதம்).

ஸிஷ்டாசரணே வ்ருதிஷ்டலெவாயாம் ச நித்யம் லெக
விஜ்ஞாஷ்டஸ்ய ச லஹாரணே ॥ உச ॥

சாஸ்த்ர விஹித நித்ய கர்மங்களைச் செய்யாமலிருந்தாலும், சாஸ்த்ர நிஷித்த கர்மங்களைச் செய்தாலும், அதற்குத் தண்டனையாக அவனுடைய ஸ்வத்தைப் பறிமுதல் செய்யவும். ஆனால் சாப்பிடுவதற்கும் உடுக்கத் துணிக்கும் வேண்டியவளவு வைத்து விட்டு அதிகப்படியான ஸ்வத்தை அபஹரிக்கவும்.

மொட்டுயெ ச்ரணம் வனயாநு வீரு அநஷ்டீநாம் ச
வ்ருஷ்ணி ஸவஷ்டீத லயாநி யாவரிவ்ருதாநி ॥உடு॥

பசுமாடு, ச்ரௌதஸ்மார்த்தாக்னிகள் இவைகளுக்காகப் பிறருடைய ஸ்வத்தான புல், காஷ்டம், செடிகொடிகளின் புஷ்பங்கள் இவைகளை மற்றொருவன் தன்னுடையதுபோல் பாவித்து எடுத்துக்கொள்ளலாம். பிறர் ஸ்வத்து என்கிற குற்றமில்லை. அதுபோல் வேலியால் மறைக்கப்படாத மரத்தின் பழத்தையும் எடுத்துக்கொள்ளலாம். வேலி கட்டியிருந்தால் எடுக்கக்கூடாது.

கூஹீஷ்வ்ருத்திஜுஷ்டாயா விஸ்ருதிः வக்ஷுஸாவஷிகீ ஸாவத்ஸி ॥ உசு ॥

தன் அபிவ்ருத்திக்காகப் பணத்தைக் கொடுக்கல் வாங்கல் செய்வது குஸீதம். அது ஒரு மாஸத்திற்கு இருபது பணத்திற்கு ஐந்து மாஷம் வ்ருத்தியாக வட்டியாகக் கொடுத்தால் அந்த ஜீவனம் தர்ம்யமாகலாம்.

ஸாதிவாஂவத்ஸரீகெ ।। உஎ ।।

கீழ்ச்சொன்ன வட்டி அல்லது வ்ருத்தியை ஒரு வர்ஷத்திற்குள் பெறவேண்டும். ஒரு வர்ஷத்திற்கு மேல் சேர்த்துவைத்து மொத்தமாக வாங்குவது, தர்மமாகாது என்று சிலர் சொல்லுகிறார்கள்.

விஸ்வாஸெ நைக்ஷேபே வாபொஹ்ய ।। உஅ ।।

ஆனால் கொடுக்கப்பட்ட பணமானது வட்டியினால் இரண்டு பங்காகும் வரையில் வட்டி வாங்கலாம். இரண்டு பங்காக ஆகிவிட்ட பிறகு வட்டி வாங்கக்கூடாதென்பது கௌதம மதம்.

ஹ்ருதாயிநஃ வஜ்ரதெ ।। உக ।।

பாத்ரங்கள், நகைகள் பிறரிடம் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்தால் அதில் வட்டி கிடையாது. வாங்கிக்கொண்டவன் அவைகளை அனுபவித்ததே அவனுக்கு ப்ரதி உபகாரமாகும். வட்டி கிடையாது.

ஸ்வதாரவ்ரு-ஜ்ய ச ।। ஈ০ ।।

கடன் வாங்கியவன் கடனைத் திருப்பிக்கொடுக்க இஷ்டப்பட்டவனாயிருந்தும் ராஜநிர்ப்பந்தம், வ்யாதி முதலான காரணமாகத் தடைப் பட்டிருந்தாலும் அங்கு வட்டி கிடையாது. அல்லது பணம் கொடுக்க ஸித்தமாயிருந்தும் வட்டி ஆசையால் முதலாளி வாங்கிக்கொள்ள சால்ஜாபு செய்தால் அந்த விஷயத்திலும் வட்டி கிடையாது. மத்யஸ்தனிடம் அந்தப் பணம் ஒப்புவிக்கப்பட வேண்டும்.

உக்தகாலவ்ருத்திஃ ।। ஈச ।।

வட்டியையும் அஸலில் சேர்த்து அதற்கும் வட்டி வாங்குவது சக்ரவ்ருத்தி யெனப்படும். இன்ன காலத்திற்கு இவ்வளவு வட்டி யென்று பேசிக்கொள்வது காலவ்ருத்தி எனப்படும். இவ்விரண்டு முறையும் ஆபத்காலத்திற்கு ஏற்பட்டவை. எப்போதும் அநுஸரிக்கப்படக்கூடியவையல்ல.

காரிதா காயிகா ஸிவாயிஹொமாஸு ।। ஈஉ ।।

மேலும், வ்ருத்தி அல்லது வட்டி நான்கு வகையுள்ளது. வாங்குகிறவன் தனது ஸௌகர்யத்தைக் கருதி வட்டியைக் குறைத்தோ, அதிகமாகவோ பேசிப் பெறுவது 'காரிதா'. சரீர உழைப்பினால் வட்டியை ஈடு செய்வது 'காயிகா'. ப்ரதி தினம்

வட்டியைப் பெறுவது 'சிகா'. அடமானம் வைத்த க்ஷேத்ர ஸ்வாதிபலனை அநுபவித்து வட்டியை ஈடுசெய்துகொள்வது (ஆ) அதிபோகம்.

கூஷீம் வஸ்வஜ மொஃ க்ஷேத்ர ஸஹ வாஹ்யஷ்டா நாதிவஹ்யமுண்டி ॥ ஈக ॥

பசுவிடம் உண்டாகும் பால், தயிர் முதலியவை, கம்பளாதி ரோம த்ரவ்யங்கள், நில அநுபவம், காலை முதலிய கால்நடைகள் இவைகளின் அடமானத்தில் ஐந்து பங்கு வட்டியே தர்மமாகும். ஐந்து பங்கு வளரும் வரை.

சுஜ்யாவளமுண்யநம் ஹரவஷ்டஹ்ஸ்தம் வதொஃ ஸஸ்ரியள மொத்தஃ ॥ ஈச ॥

பத்து வர்ஷம் வரையில் ஒருவனுடைய தனத்தை, ஸ்வத்தை, மற்றொருவன் நிரந்தரமாக அநுபவித்து வந்தால் அது அநுபவிப்பவனுடைய ஸ்வத்தாகிவிடும். ஸ்வத்துக்காரனின் கண் எதிரில் அவனுக்கும் தெரிந்து அநுபவிக்கவேண்டும். இந்த விதி ஸ்வாதீன சித்தமற்றவனின் ஸ்வத்து விஷயத்தில் வராது. அதுபோல் அந்த ஸ்வத்தின் பேரில் வ்யவஹாரம், நீதிஸ்தலத்தில் விவாதம் நடந்து வந்தாலும் இந்த அநுபவ ஸ்வத்வவிதி வராது.

ந ஶ்ரோத்ரியவ்ரவ்ரஜிதராஜவ்ரஷ்டொஃ ॥ ஈடு ॥

வேதாத்யாயியான ச்ரோத்ரியன், ஸன்யாஸீ, ராஜ புருஷனென்கிற ராஜாங்க உத்யோகஸ்தன், இவர்கள் பத்து வர்ஷம் வரையில் பிறர் ஸ்வத்தை அநுபவித்தாலும் அந்த ஸ்வத்து அவர்களுக்கு ஸ்வந்தமாகிவிடாது. ஸ்ரோத்ரியன், ஸன்யாஸீ இவர்களிடம் தர்ம பயத்தாலும், ராஜ புருஷனிடம் லௌகிக பயத்தாலும் ஸ்வந்தக்காரன் பத்து வர்ஷம் வரையிலும் அந்த ஸ்வத்தை அவர்களிடமிருந்து கேட்டு வாங்காமலிருக்க ந்யாயமுண்டு.

வஸ்வஹிம்ஸ்ரீணாஃ நதிஹொஃ ॥ ஈக ॥

கோ முதலிய பசுக்கள் (ம்ருகங்கள்), க்ஷேத்ரம், தோட்டம் முதலிய பூமி, வேலைக்காரியான ஸ்த்ரீகள் ஆகியவைகளுக்குப் பத்து வர்ஷ அநுபோகம் வேண்டியதில்லை. ஸ்வல்பகால அநுபவத்தாலேயே அவை அநுபவிப்பவனின் ஸ்வத்தாகின்றன. ஸ்வத்துக்காரன் நீண்டகால அநுபவம் வரையில் பொறுத்திருக்கமாட்டானல்லவா.

ரிக்தஹாஜஃ ஜீணம் வ்ருகிகாயஃ ॥ ஈள ॥

ஒருவனுடைய ஸ்வத்தை அடைகிறவன் அவனுடைய ருணங்களையும் திருப்பிக் கொடுக்க வேண்டியவன். அவன் பட்ட கடனைக் கொடுக்க வேண்டியவன். புத்ர பௌத்ராதிகள் பித்ரு ஸ்வத்தில்லாவிட்டாலும் அவன் பட்ட கடனைக் கொடுக்க வேண்டியவர்கள்.

வ்யாதிஹாவ்ய வணிக் ஸாம்க்ரஹ்ய ஹ்ய ஹ்ருதஜ்ஞாஃ வாத்ரா ஸாஹ்யாஹவெயாஃ ॥ ஈஅ ॥

தகப்பன் செய்துகொடுத்த ஜாமீன், வ்யாபார ஒப்பந்தம், விவாஹ சுல்கம், மத்யம், சூதாட்ட நஷ்டம், ராஜாங்க அபராதம் இவைகள் பிள்ளைகளைக் கட்டுப்படுத்தாதவை.

நிக்ஷேபாயியாவிதாவக்ரீதாzzயயொ நஷ்டாஃ ஸவ்யாநநிஷ்டாநு வாத்ரஷாவராயைந ॥ ஈக ॥

ஒருவனிடம் வைத்திருந்த நிக்ஷேபம்(நிதி), அதாவது நம்பிக்கையால் தன் தனத்தைப் பிறனிடம் வைத்திருப்பது. பெட்டி அல்லது பாக்ரத்திற்குள் இருப்பதைத் தெரிவிக்காமலே பிறரிடம் கொடுத்து வைக்கப்பட்டது, அந்வாதி. பிறருடைய வஸ்த்ராபரணாதிகளைத் தாம் தரிப்பதற்காக வாங்கிக்கொள்வது (தாற்காலிகமாக) யாசிதம். விலைக்கு வாங்கிய வஸ்துவுக்கு க்ரயம் செலுத்தாதது அவக்ரீதம். கோப்யமாக கொடுக்கப்பட்டது ஆதி. மேற்கண்ட நிலைமையுள்ள தனம் முதலிய பண்டங்கள், சோரன் அக்நி முதலிய விபத்துக் காரணமாக நஷ்டமாகிவிட்டால் அது குற்றமாகாது. வாங்கியவன் திருப்பிக் கொடுக்கவேண்டியதில்லை. ராஜதண்டனை கிடையாது. ஆனால் மனிதனுடைய, அதாவது பெற்றவனுடைய, புத்திபூர்வமான உபேக்ஷா முதலிய தவறுகளால் அந்த த்ரவ்யம் நஷ்டமாகியிருந்தால் இந்த விதி வராது.

ஷ்ணாநஃ வ்ருகீணாகுஸெயொ ஃ ரவஸீ ராஜாநியாஸ கூஃஹா zzஉக்ஷாணஃ ॥ ஸ0 ॥

ஸ்வர்ணஸ்தேயம் செய்தவன், தலைமயிரை விரித்துக்கொண்டு, உலக்கையைத் தோளில் தாங்கிக்கொண்டு, ராஜாவிடம் வலுவில் போய்த் தனது தோஷத்தைச் சொல்லிக்கொள்ளவேண்டும்.

வத்ஹதொ வயதொக்ஷாஹ்யாழ் ॥ ஸக ॥

அரசன் அவனை வதம் (அடி) செய்யலாம். அல்லது வெச்சரித்து

விடுதலை செய்யலாம். இந்தத் தண்டனைக்குப் பிறகு திருடன் சுத்த னாகிறான். அந்த மூலைத்தால் அடிக்கவேண்டும்.

கூஷ்ணு வாநவஸீ ராஜா ॥ சஉ ॥

அந்தத் திருடனைப் பக்ஷபாதாதிகளால் அடிக்காமல் அரசன் விட்டுவிட்டால் தோஷமுள்ளவனுவான். அந்தச் சோர தோஷமேற் படும்.

ந ஸாரீரோ வ்யாவருணஃ ॥ சஙு ॥

ப்ராம்ஹணனுயிருந்தால் அந்தச் சோரனுக்குச் சரீர தண்டனை கிடையாது. க்ருச்ர சாந்த்ராயணாதி தபஸ்ஸுகளான ப்ராயஶ் சித்தங்களால் தண்டனை.

கூஶ்ருவியொமவிவ்யாவநவிவாஸநாஙூகுரணாநி ॥ சச ॥

தண்டனைகளில், மறுபடி அதே குற்றம் செய்யமுடியாமல் செய்வது, க்ராம நகராதிகளில் ஜனங்களறிய ப்ரஸித்தப்படுத்து வது, தேச ப்ரசம்சம் செய்வது, குற்றத்திற்கு ஏற்றதான அடை யாளத்தைச் சரீரத்தில் செய்வது இவைகள் அவச்யமானவை.

கூவ்யூத்தள வ்யாயஶ்சித்தீ வஃ ॥ சஙு ॥

இந்தமாதிரி, ராஜ்யத்தில் ஏற்படும் ஸ்வர்ணஸ்தேயாதி குற்றங் களைத் தண்டிக்காமல் ராஜா உபேக்ஷையாயிருந்தால் அந்த ராஜா சாஸ்த்ரவிஹிதப்ராயஶ்சித்தம் செய்துகொள்ளவேண்டியவனுவான்.

வொரவஶ்ச வஸிவொ ஽திவ-ஏவ ॥ சஙூ ॥

மந்த்ரியாயிருப்பவன் புத்திபூர்வகமாகச் சோரர்களுக்கு உதவியாயிருந்தால் அவனும் சோரனைப்போல் தண்டிக்கத் தக்கவன்.

வ்ருதிஜ்ருஹீதாஃவ்யஶ்ச வ்யாஸம்ப-ஏதெ ॥ சஎ ॥

திருட்டு முதலிய அதர்ம வழியான பொருளை ஒருவன் வாங்கினுல் அவனும் சோரனைப் போல் தண்டிக்கப்பட வேண் டியவன்.

வ-ஏஷஷ-ஆத்மவராயா-வைஷவிஜ்ஞாநாச் ச தண்ஜநியொகஃ ॥

தண்டனையை நிர்ணயிக்கும்போது குற்றவாளியின் சரீரசக்தி, குற்றத்தின் சிறிய பெரிய தன்மை, அடிக்கடி குற்றம் செய்தல் ஆகிய விஷயங்களை அறிந்து தண்டனை விதிக்கவும்.

சுந-ஆஹ்ரம் வா வெஶவி ஸ்ரீவாயவயநாச் வெஶவி ஸ்ரீவாய வயநாச் ॥ சஙூ ॥

வேதமறிந்துள்ள நான்கு அல்லது மூன்று பேர்கள் சேர்ந்த ஒரு பரிஷத்தானது எதை அநுமதிக்கிறதோ அதை நீதியாகக் கொள்ள வேண்டும். அதன்படி தண்டனை முதலியவைகளை நிர்ணயிக்கவும். விடுதலையும் அப்படியே.

இரண்டாவது ப்ரச்னத்தில் மூன்றுவது அத்யாயம் முற்றிற்று.

இரண்டாவது ப்ரச்னம் நான்காவது அத்யாயம்.

விவாதிவதத்ள ஸாக்ஷிநிர்தா ஸதஃவவஹா ॥ க ॥

வ்யவஹாரத்தின் வாத ப்ரதிவாதங்களில் ஸந்தேஹம் ஏற்பட்டால் ஸாக்ஷிகளை விசாரித்து உண்மையை நிர்ணயிக்கவும்.

ஸஹவஹ்யாஸ்தநிர்தாஃ ஸகுலஃஸ்ய வ்ருத்தயிகாஸ்தாஜ்ஞாஃ
ஸ்த்ரீ தாநஹிதாவாஸ்தாந்ருதாஸ்தஸ்மிந் ॥ உ ॥

ச்ரௌத ஸ்மார்த்தாதி ஸ்வதர்ம நிரதர்களும், நிந்திக்கப்படாதவர்களும், அரசனால் கம்பத்தக்கவர்களும், ஒருதரப்பில் ப்ரீதியற்றவர்களும், த்வேஷமற்றவர்களுமான பலர் ஸாக்ஷிகளாக வரிக்கத் தக்கவர்கள்.

கூவி ஸஸ்தாஃ ॥ ங ॥

மேற்கண்ட குணமுள்ள சூத்ரர்களும் ஸாக்ஷிகளாகத் தக்கவர்கள்.

ப்ராஹ்மணஸ்ய சேத்ப்ராஹ்மணவசநாஜ்நவிஜ்ஞாயேரந் நிவர்தேரந் ॥

அப்ராம்ஹ்மணனுடைய வார்த்தையை மட்டும் கம்பி ப்ராம்ஹ்மணனை ஸாக்ஷியாக வரும்படி நிர்ப்பந்திக்கக் கூடாது. ஆனால் பத்ரங்களில் அந்தப்ராம்ஹ்மணன் எழுத்து மூலமாக ஸாக்ஷியாயிருந்தால் இந்த நியமமில்லை அவன் ஸாக்ஷியாக வாவேண்டியவனே.

நாஸஹாயைதா ஸ்த்ரீஷூத்ராஃ ப்ரஷ்டவ்யாஃ ॥ ரு ॥

ஸாக்ஷிகள் தனியாகவோ, ராஜாவினால், கேட்கப்படாமலோ, தாங்களாகச் சொல்லக்கூடாது. சேர்ந்தும், கேட்டபிறகும் பதில் சொல்லவேண்டும்.

சுவயமேவ வாதயாவயமேவ ச ஹ்ரோஷிணஸ்ய ॥ கூ ॥

ஸாக்ஷிகள் தெரிந்ததைச் சொல்ல மறுத்தாலும், விபரீதமாகச் சொன்னாலும் குற்றவாளிகளாவார்கள்.

ஷுஷ்ரூஷவஸ்தெ விவயஜுயெ நரகஃ ॥ எ ॥

ஸாக்ஷிகள் ஸத்யமாகச் சொன்னால் ஸ்வர்க்கம் ஏற்படும். விபரீதமாகச் சொன்னால் நரகம் கிட்டும்.

கநிவைஜெரவ்வி வசநவ்யூ ॥ அ ॥

எழுத்து மூலமாகவோ வேறு விதமாகவோ, ஸாக்ஷ்யம் சொல்லக் கட்டுப்பட்டவர்கள் தவிர அம்மாதிரி நிர்ப்பந்தமில்லாதவர்களும், ஸாதாரணமாக ஸாக்ஷ்யம் சொல்லலாம்.

நவீயாகூஜெத நிவாஸஃ ॥ கூ ॥

ஹிம்ஸாதி பீடைகள் விஷயமாக ஸாக்ஷ்யம் சொல்லுகிறவனுக்கு எழுத்து மூலமான ஸம்பந்தம் பார்க்க வேண்டியதில்லை. எழுத்து மூலம் ஸாக்ஷ்யம் போட்டு அவன் கட்டுப்பட்டிருக்கிறானென்று கவனிக்கவேண்டியதில்லை. அர்த்த ஸம்பந்தாதிகளும் தூஷணமாகாது.

வூஜெதாஜெத வ ॥ சஂ ॥

அவதானக் குறைவால் சொல்லிய விஷயத்திலும் ஸாக்ஷிக்குத் தோஷம் கற்பிக்கக் கூடாது.

வாக்ஷிவஹூராஜகுதபூஷு ஜொஷோ யஃ தஜ்ஜவீயாயாழ் ॥

தர்மம், லோகவ்யவஹாரம் இவைகளுக்குப் பீடை உபத்ரவம் ஏற்படும்படி நடந்தால், ஸாக்ஷீ, நீதிபதிகள், ராஜா, வ்யவஹார கர்த்தா ஆகிய எல்லோருக்கும தோஷமுண்டு.

ஸவெயெஜெநெகெ ஷத்யுஃ ॥ சஉ ॥

எந்த வ்யவஹாரத்தில் ஸாக்ஷிகளிடம் நம்பிக்கை வைக்க முடியவில்லையோ அதில் ஸாக்ஷியை, சபதம் செய்யச் சொல்லி ஸத்யத்தை அறியவும். தேவ கோ ப்ராம்ஹண ஆசார்யாதிகள் மீது ஆணை சபதம்.

தஜ்ஜ ராஜ ஜ்ராவ்ண ஸம்ஸதி வ்யாஜ்ஜ்ராவ்ணாதாழ் ॥ சஙூ ॥

அந்த ஆணையிடல் என்ற சபதமானது, தைவங்கள் முன்னிலையிலோ ராஜ ஸபையிலோ, ப்ராம்ஹண ஸபையிலோ, செய்யப்படவேண்டும். இது ப்ராம்ஹணேதரர்களான மூன்று வர்ணத்தினருக்கு. ப்ராம்ஹணர்களுக்குச் சபதம் விதிக்கக்கூடாது.

கூ॒ஶ்ரவஸ்யுதெ ஸாக்ஷீ உஸ ஹஸ்தி ॥ கச ॥

அற்ப ப்ராணிகளாகிய ஆடு முதலியவை விஷயமான வ்யவஹாரத்தில் ஸாக்ஷீ பொய் சொன்னல் அந்தப் பசுக்கள் பத்தைக் கொன்ற தோஷத்தை அடைவான்.

ஸொऽஸ்வ॒ரூ॒ஷஸ்தி॒ஷு॒ உஸ॒ஸ்ரைணாத்ரூராஸு ॥ கஞ ॥

பசு மாடு, குதிரை, புருஷன், பூமி இவைகள் விஷயமாக ஸாக்ஷீ பொய் சொன்னல் பத்துப்பங்கு அதிகமான வததோஷத்தை அடைவான்.

ஸவ॒ம் வா ஸ்தி॒ஶ ॥ கசு ॥

க்ராமம், தேசம் முதலிய பூமி விஷயமாக ஸாக்ஷீ பொய் சொன்னல் எல்லாமனிதர்களையும் கொன்ற தோஷமென்று மற்றொரு பக்ஷம்.

ஹரணே ரூரகூ॑ ॥ கள ॥

பூமியை அபஹரித்தால் நரகம் ஏற்படும்.

ஸ்தி॒வஉவ்ஸ்॒ ॥ சஅ ॥

நிணறு, குளம், வேறு விதஜலம் இவைகள்விஷயமாக ஸாக்ஷீ பொய் சொன்னல் பூமிவிஷயத்தில் சொல்லிய தோஷம் உண்டு.

மை஥ு॒நஸம்பொஹெ உ ॥ கக ॥

மைதுன ஸம்பந்தமான வ்யவஹாரங்களிலும் "இவன் பரதாரகமனம் செய்கிறன்" இத்யாதி தோஷங்களை ஸாக்ஷீ பொய்யாகச் சொன்னலும் பூமி விஷயம் போல் தோஷம்.

வஸ்॒வ்ரஜ்ய॒ஸவி॒ஷோ॑ உ ॥

தேன், நெய் முதலியவைகள் விஷயமாகப் பொய் சொன்னல் ஸாக்ஷிக்கு, கீழே பசுக்கள் விஷயமாகச் சொன்ன தோஷம் ஏற்படும்.

மொவ॒ஷ்ஷ்ஹிரண்யாந்ய்॒ஸ்॒ ॥ உக ॥

வஸ்த்ரம், ஹிரண்யம், தான்யம், வேதம் இவைகள் விஷயமாக ஸாக்ஷீ பொய் சொன்னல் பசுவுக்குச் சொல்லிய தோஷம் வரும்.

யாநஷ்ஷ்வஸ் ॥ உஉ ॥

வண்டி, பல்லக்குப் போன்ற வாஹனங்கள் விஷயமான பொய் சொன்னல் ஸாக்ஷீ அச்வத்திற்குச் சொல்லிய தோஷம் பெறுவான்.

ஸ்யூர்வவதெ யாவெ்யா ஒணூஸ்ஸு வாக்ஷீ ॥ உக ॥

மித்யை சொல்லிய ஸாக்ஷியானவன் எல்லா ஜனங்களாலும் "பொய்யன்" என்று கர்ஹிக்கத்தக்கவன். ராஜாவாலும் தண்டிக்கத் தக்கவன்.

நாந்ருதவதெ ஹொஷொ ஜீவந்ம் வெத்தூயீநழி ॥ உச ॥

ஒரு ஸாத்விகனை கைதியின் உயிர் காப்பாற்றப்படுமானல் அந்தப் பொய் அதீநமாக அவன் பிழைக்கநேருமானல், அவ்விஷயத் தில் பொய் சொல்வது தோஷமாகாது.

ந த வாவீயஹொ ஜீவநழி ॥ உரு ॥

பாபியாய், சௌர்ய ஹிம்ஸாதி குற்றம் செய்தவன் விஷயத்தில் மேற்கண்ட விதி செல்லாது. பொய் சொல்லக்கூடாது.

ராஜா வ்யவஹாரிகொ ப்ராவழனொ வா ஸாஸ்த்ரவிச் । உகூ ॥

நீதி ஸ்தலத்தில், ராஜாவே ப்ராட்விவாகனாக (நீதிபதியாக) இருக்கவேண்டும். அவனில்லாத ஸமயத்தில் சாஸ்த்ர வித்தான ப்ராம்ஹணன் ப்ராட்விவாகனாயிருக்கலாம். வாதப்ரதிவாதங்களைப் பிரித்து நன்குகேட்டு ஆலோசித்து முடிவு செய்கிறவன் ப்ராட் விவாகன்.

ப்ராவ்விவாகஸ்ஸ்யாஸனெகூ । உள ॥

உயர்ந்த ஆஸனத்தில் உட்கார்ந்திருக்கும் ப்ராட்விவாகனிடம் கார்யார்த்தியானவன் நேரில் வந்து தெரிவிக்கவேண்டும். ராஜா தானாகவே, வழியில் கூப்பிடக்கூடாது.

ஸம்வத்ஸரம் ப்ரதீக்ஷேதாவ்ருதிஸ்யாழி ॥ உஅ ॥

வாதி, ப்ரதிவாதி, ஸாக்ஷிகளுள் யாருக்காவது வ்யவஹார விஷயத்தில் ஞாபகப்பிசகோ, தெளிவில்லாமையோ இருந்தால் அந்த வ்யவஹாரத்தை விசாரிக்க ஒரு வர்ஷம் வரையில் அவகாசம் கொடுத்து எதிர்பார்க்கலாம்

யெஷாந்து ஸாக்ஷிப்ரத்யக்ஷமுபந்யஸ்யதெ தே ஸீக்ர்யம் ॥ உகூ ॥

பசு மாடு, காளை மாடு, ஸ்த்ரீகள், விவாஹம் இவை ஸம்பந்த மான விவாதங்களில் சீக்ரமே விசாரணம் செய்யவேண்டும். தாமஸிக்கக்கூடாது.

க்ருத்யிகெ ச ॥ கூ० ॥

அவஸரம், வீணுதல், விநாசம், சௌர்யம் முதலிய விஷய அவஸர கார்யங்களில் சீக்ரமே விசாரணை நடத்தவும். தாமதிக்க லாகாது.

ஸவ்யபேக்ஷோ ஹ்யர்தீ வ்யவிவாகே ஸத்யவசநம் வதேத்யவசநே ॥ ஈக ॥

ப்ராட்விவாகன் அதாவது நீதிபதி கேட்கும் எல்லாவற்றிலும் ஸத்யம் பேசுவது ஸகல தர்மங்களிலும் உத்தம தர்மம்.

இரண்டாவது ப்ரச்னத்தில் நான்காவது அத்யாயம் முற்றிற்று.

இரண்டாவது ப்ரச்னம் ஐந்தாவது அத்யாயம்.

ஸாவஸாஸௌவம் ஔபாஸநஹோமிக ஸபிண்டாநாம் ஸவிண்டாநாம் ॥ க ॥

மரண நிமித்தமான ஆசௌசமானது ஸபிண்டர்களுக்கு, அதாவது ஏழு தலைமுறை வரையிலுள்ளவர்களுக்கு, பத்துத்தினங்கள் உண்டு. ஆனல், யாக மத்யத்திலுள்ள ருத்விக்கு, யாகம் செய்துகொண்டிருக்கும் தீக்ஷிதன், வேதாத்யயனம் செய்துகொண்டிருக்கும் ப்ரம்ஹசாரி ஆகியவர்கள் தவிர. அவர்களுக்கு அந்தக் கர்மா முடியும் வரையில் ஆசௌசம் இல்லை. பிறகு உண்டு.

ஆசௌசம் என்பது அஸ்ப்ருச்யதை, கர்மாநர்ஹதை இரண்டும் கொண்ட அசுத்தியாகும்.

ஸநகாஔபாஸநம் க்ஷத்ரியஸ்ய ॥ உ ॥

க்ஷத்ரிய ஜாதிக்குப் பதிநைந்து நாள் ஆசௌசம்.

ஆஔபாஸநம் வைச்யஸ்ய ஸஔபாஸநஸ்ய ॥ ஈ ॥

வைச்யனுக்குப் பன்னிரண்டு நாள் ஆசௌசம். அரைமாஸம் (15-நாள்) என்று சிலர்.

மாஸம் ஸ்ரோத்ரியஸ்ய ச ॥

ஸ்ரோத்ரியர்களுக்கு ஒரு மாஸம் சாவாசௌசம் உண்டு.

தஸ்யைஷோ(அ)நுவ்யாக்யாதோ ரஸ்மிஷு ஸம்ஜ்ஞாநு ॥ ரு ॥

முன் ஆசௌசமிருக்கும்போது மத்தியில் அதே மாதிரியான வேறு ஆசௌசம் வந்தால், முன் ஆசௌச காலத்தாலேயே சுத்தி

ஏற்படும். ஜனனம், மரணம் இரண்டிலும் ஸமமாகவோ, சிறிய தாகவோ மற்றொன்று வந்தால் முதல் ஆசௌசத்தாலேயே இரண்டாவதும் போய்விடும்.

ராத்ர்யுபஷே ஆஹ்யாதி ॥ கூ ॥

முதலில் வந்த ஆசௌசமானது ஒரு ராத்ரி மட்டும் பாக்கியிருக்கும்போது வேறொரு ஆசௌசம் வந்தால், முதல் ஆசௌசம் போன பிறகு இரண்டு தினம் அதிகமாக ஆசௌசம் கொள்ள வேண்டும். பிறகு சுத்தி.

வ்ருத்தே திவ்ருத்திர்ஃ ॥ எ ॥

தசாஹம் தாண்டிய பிறகு மறுநாள் காலையில் வேறு ஒரு ஆசௌசம் வந்தால் அன்று முதல் மூன்று நாள் தீட்டுக் காத்துப் பிறகு சுத்தி.

ஸோத்வாஹரணஹுதாநாமநுக்ஷி ॥ அ ॥

கோ நிமித்தமாகவோ, ப்ராம்ஹண நிமித்தமாகவோ கொல்லப்பட்ட ஸபிண்டர்களுக்குச் சவம் கண்ணில் படும் வரையில் தான் ஆசௌசம். தசராத்ரமில்லை. ஸத்ய:சுத்தி என்றபடி. தர்மார்த்தமான மரணமாகையால்.

ராஜக்ருத்யாஸு ॥ கூ ॥

ராஜாவின் கோபம் காரணமாகக் கொல்லப்பட்டவர்களுக்கும் தசராத்ரமில்லை. முன்போல் ஸத்ய:சுத்தி.

யுத்தே ॥ கஂ ॥

தர்மிகமான யுத்தத்தில் கொல்லப்பட்டவனுக்கும் தசராத்ரமில்லை. ஸத்ய: சுத்தி.

வ்யாதாநாமுக ஸ்ருஷ்டாநி விஷோதகோத்வந்த வ்ருத்த ஹுதாதி ॥ சக ॥

மஹாப்ரஸ்தானம், நீண்ட உபவாஸம், சஸ்த்ரம், அக்நி, விஷம், ஜலம், தூக்கு, உயர்ந்த ஸ்தலத்திலிருந்து விழுவது ஆகிய காரணங்களால் புத்தி பூர்வகமாக (இஷ்டப்பட்டு) மரணமடைகிறவர்கள் விஷயத்திலும் தசராத்ர ஆசௌசமில்லை. ஸத்ய:சுத்தியே.

வித்ருநிவ்ருத்திஸ்வதஸ்தே வதுஸ்தே வா ॥ கஉ ॥

கூடஸ்தனிலிருந்து ஏழாவது தலைமுறையில் ஸபிண்டத்வம்

நிவ்ருத்தியாகிவிடுகிறது. ஐந்தாவது தலைமுறையில் என்று சிலர். அது புத்ரிகாபுத்ரன் விஷயம்.

ஜநநேऽவ்யவஹி ॥ கஙு ॥

கீழ்ச் சொல்லிய ஆசௌச ஸம்ஸர்க்காதி விஷயங்கள் யாவும் ஜநநாசௌசத்திலும் உண்டு.

ஸாதாவிதரஸ்ய தந்நாதுரவ்ருத்தி: ॥ கச ॥

ப்ரஸவ ஆசௌசமானது மாதா பிதாக்கள், அல்லது மாதா இவர்களுக்கு மட்டுமென்று ஒரு பக்ஷம். தாயாதர்களுக்கு இல்லையென்பது ஸபர்ச ஸம்பந்தமான ஆசௌச விஷயம். கர்மாதி காரமில்லையென்கிற ஆசௌசம் ஜ்ஞாதிகளுக்கும் உண்டு.

முஷ்டிஸ்தஸ்ய ராத்ரய: ஸ்யுரஸந்தே முஷ்டிஸ்த: ॥ கஞ ॥

கர்ப்பமானது விச்சின்னமானால் அந்தக் கர்ப்பமாஸம் எவ்வளவோ அவ்வளவுநாள் தீட்டு உண்டு. மூன்றுவது மாத மானால் மூன்று நாள். நான்காவதானால் நான்கு நாள் இத்யாதி.

த்ரயஹம் வா ॥ கசு ॥

அல்லது இரண்டாவது மாதமாயிருந்தாலும் மூன்று நாள் தீட்டு. ஆனால், நான்காவதில் நான்கு நாள்தான்.

ஸ்ரோத்ரிய ஸ்யாக்ருதோ ஹவிர்பாக்ஷிணீ: ॥ சள ॥

பத்துத் தினங்களுக்கு மேல் அதிக்ராந்த தசராத்ர ஆசௌசத்தைக் கேள்விப்பட்டால் பக்ஷிணீ (ஒன்றரை நாள்) ஆசௌசம் கொள்ளவும். இரு பகல் ஒரு ராத்ரி, அல்லது இரு ராத்ரி ஒரு பகல் பக்ஷிணீ. இந்தப் பக்ஷிணீ விதியானது மூன்று மாதத்திற்குப் பிறகு கேட்ட தீட்டு விஷயம். மூன்று மாதத்திற்குள் கேட்டால் மூன்று நாள் என்று நிர்ணயம்.

சுஸவிஷ்ணு ஸநிஷம்வத்ஸ ஸஹாத்யாயிநி ச ॥ கஅ ॥

ஸபிண்டத்வம் நீங்கிய பின் மூன்று நாள் தாயாதிகள், மாதா மஹாதிகளான ரக்த ஸம்பந்தமுள்ள பந்துக்கள், சேர்ந்து ஒரு உபாத்யாயனிடம் அத்யயனம் செய்தவன், இத்யாதிகள் விஷயத்திலும் பக்ஷிணீ ஆசௌசம் கொள்ளவேண்டும். ஸமானோதகர்களுக்குப் பக்ஷிணீ விதிப்பது அதிக்ராந்தாதி வேறு விஷயம்.

ஸப்தஹ்ருதயாரிணி வநகாஹ்ய ॥ கஙு ॥

ஸ்ரோத்ரியஸ்ய மரண விஷயத்தில் ஒரு நாள் ஆசௌசம்.

ஸ்ரோத்ரியே ஏகாஹமனூசானே ॥ உ0 ॥

வேதாத்யாயியான ச்ரோத்ரியன், தன் க்ருஹத்தில் வஸித்துப் பரிசயம் பெற்றவன், இவர் இறந்தால் அதில் ஒரு நாள் தீட்டு.

அதர்மாத்மந்யஜீவனே ஸ்ரோத்ரியாசௌசவதஹ ॥

தர்மார்த்தமில்லாமல், ஜீவனார்த்தமாகக் கூலி பேசிக்கொண்டு ப்ரேத நிர்ஹரணம் செய்கிறவனுக்குப் பத்து நாள் தீட்டு உண்டு.

உக்தம் வைஶ்யஶூத்ரயோஃ ॥ உஉ ॥

மேற்சொன்னபடி சூத்ர வைஶ்ய ப்ரேதங்களை நிர்ஹரணம் செய்கிறவனுக்கு வைச்ய-சூத்ரர்களுக்குச் சொன்னபடி பன்னிரண்டு நாள், பதினைந்து நாள் ஆசௌசம் உண்டு.

க்ஷத்ரிவத் ॥ உந ॥

அல்லது ருதுக்களுக்கு ஸமமான நாள் ஆசௌசம். ஆறு ருதுக்களாகையால், ஆறு நாள் என்று கருத்து. ஐந்து ருது என்ற பக்ஷமும் உண்டு.

வ்ரதவத்யோஷ ॥ உச ॥

ப்ராம்ஹண-க்ஷத்ரிய விஷயத்திலும் நிர்ஹரணம் செய்தவனுக்கு முன் சொன்ன தசராத்ர அசுத்திக்குப் பதிலாக ருது ஸங்க்யைப்படி (ஆறு நாள்) அசுத்தி கொள்ளலாம்.

த்ரிராத்ரம் வா ॥ உரு ॥

கீழ்ச் சொல்லிய எல்லா விதிகளுக்கும் பதிலாக மூன்று நாள் அசுத்தி கொண்டாலே போதும், ப்ரேத நிர்ஹரண விஷயத்தில். தர்மார்த்தமாகச் செய்தால் புனஃ ஸ்நானாதி ப்ராயச்சித்தம் பட்டில், தீட்டு இல்லை.

ஆசார்யஸ்ய புத்ரபத்னீயாஜகஸ்ய ஶிஷ்யஸ்ய சைவம் ॥ உக ॥

ஆசார்யன், அவனுடைய புத்ரன், ஆசார்ய பத்னீ, யாஜ்யன், சிஷ்யன் இவர்களுடைய மரணத்திலும் மூன்று நாள் தீட்டு.

ஸவர்ணஸ்ய ஸவர்ணாம் வ்ரதவத்யாம் வர்ணஸ்ய வ்ரதவத்யாம் ஸவர்ணாயாஸ்ச தத்ர ஸ்நாத்வாத்ரிராத்ரமஶௌசவான் ॥ உள ॥

தாழ்ந்த வர்ணத்தியவன் உயர்ந்த வர்ண சவத்தை ஸ்பர்சித்து நிர்ஹரணம் செய்தாலும், உயர்ந்த வர்ணத்தியவன் தாழ்ந்த வர்ண

சவ விஷயத்தில் அப்படிச் செய்தாலும் சவ ஜாதிக்கு விதிக்கப் பட்ட ஆசௌசம் உண்டு.

வதித உணாஊ ஸ்ரீதிகொஉகூரா ஸவஷ்ரவஷி தசுஷ்ரு ஷூ்வஷ்ரஸுநெ ஸவெயொஉகொவஷ்ரஸுநாசு ஸ்ரு ஜ்யுசு ॥ உஅ ॥

பதிதன், சண்டாளன், ப்ரஸவித்த ஸ்ரீதிகை, ரஜஸ்வலை, சவ ஸ்பர்சீ, அவனைத் தொட்டவன் ஆகியவர்களை ஸ்பர்சித்தால் ஸசேல ஸ்நாநம் செய்து சுத்தியடையவேண்டும்.

ஸவாந்ரஜிநெ ய ॥ உகூ ॥

சவத்துடன் கூடப் போனாலும் ஸசேல ஸ்நானம் செய்தால் சுத்தி. க்ருத (நெய்) ப்ராசனமும், அக்நி ஸ்பர்சமும் உண்டு.

ஸ்ரு நஷ்ரு ॥ நூ ० ॥

ச்வாவை (நாயை)த் தொட்டாலும் ஸசேலமாக ஸ்நானம் செய்தால் சுத்தி.

யஉ்வஹநூ்ஷிதெதூகெ ॥ நூக ॥

ஸ்வாவை ஸ்பர்சித்த விஷயத்தில், ஸசேல ஸ்நானத்திற்குப் பதிலாக எந்த அங்கத்தில் நாயின் ஸ்பர்சம் ஏற்பட்டு அசுத்த மாகியதோ அந்த அங்கத்தை மட்டும் ப்ரக்ஷாளனம் செய்தால் போதுமென்று சிலர் நினைக்கிறார்கள்.

உஉகூஹாநம் ஸவிணைஃ கூதஉ்ஸ்ரஷ்ரு ॥ நூஉ ॥

சௌளாந்தமான ஸம்ஸ்காரம் பெற்ற பாலகனின் மரணத் தில் ஸபிண்டர்கள் உதகதானம் செய்யவேண்டும்.

தசு ஷ்ரீணாம ய ॥ நூந ॥

அந்த உதகதானமானது ஸ்த்ரீகள் (கந்யகை) விஷயத்திலும் செய்யவேண்டும்.

வனகெ வ்ரூதாநாழி ॥ நூச ॥

விவாஹமாகிய ஸ்த்ரீகள் விஷயத்தில்தான் உதகதானம் உண் டென்று சிலர் நினைக்கிறார்கள்.

சுயஸ்ரு்யாஸநிநொ வ்ரூஹுயாரிணஷ்ஷுவெ ॥ நூரு ॥

தசராத்ர, த்ரிராத்ராதி ஆசௌசமுள்ளவர்கள், ஆசௌசம் நீங்கும்வரையில் பூமியிலேயே படுக்கவேண்டும். உட்காரவேண்டும்.

